NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

June 2019
# உகுருவி
ekuruvi.com
$1

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today

# இகுருவியின் விருதுகள்










# நிலமும் சிறுத்து சனமும் சிறுத்தால்?

IBC தமிழா
TORONTO 2019
ஆடல் பாடல் நகைச்சுவை நாடகம்
TICKETS STARTING FROM $25
SATURDAY JUNE 29TH AT 5PM
SCOTIABANK ARENA
BUY YOUR TICKETS NOW
IBCTAMIL.COM/CANADA
ஒரு மேடை 1000 கலைஞர்கள்

JOIN OUR TEAM OF GUARDIANS
GINI ANNARASA
MORTGAGE ALLIANCE
GUARDIANS
mortgageguardian.ca 416.556.7002 • 80 NASHDENE RD

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON. M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Do you want to become a Professional Advisor?
"NOW HIRING"
Full & Part Time Life & Health Insurance Advisors
Get your industry licence at no cost... Free in class teaching
guna@gtbrokers.ca | www.gtbrokers.ca
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng. 416 528 1407

Ramanan Santhirasegaramoorthy BSC,MBA
416-290-6000
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
For All Your Real Estate Needs

PRO-LIFE WELLNESS CENTRE
PHYSIOTHERAPY CLINICS
Our Services:
• Physiotherapy
• Chiropractic
• Massage
• Acupuncture
• Spinal Decompression
• Orthotics/Braces
• Car Accidents
• WSIB
PAIN? WE CAN HELP YOU!
OPEN 7 DAYS
COME FEEL THE DIFFERENCE
416.357.2808
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM | 416.704.8074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com
PO Box 15 Pickering
Pickering ON
L1V 2R2

# எம் கலைகளுக்கான ரசிகர்கள் எம்மிடமே உண்டா?

நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் கலைகளை நாங்களே மதிக்கவில்லை. எங்கள் கலைகளுக்கு எங்களிடமே ரசிகர்கள் இல்லை என்பதுதான் உண்மை. எங்கள் பிள்ளைகளை கலை வகுப்புகளுக்கு அனுப்புவதும், பெரும் பணத்தை செலவிடுவதும் ஒரு பொழுது போக்காகவும் ,உடற்பயிட்சியாகவும் அமைத்துள்ளதே தவிர, ஒருவரும் அக்கலைக்கு எம் சமூகத்தில் எதிர் காலம் இருக்கா? எமது கலைக்கான அல்லது எமது பிள்ளைகளுக்கான ரசிகர்கள் உள்ளார்களா? அல்லது எவ்வாறு எங்கள் கலைகளுக்கு ரசிகர்களை ஏற்படுத்துவது என்பது பற்றி எந்த ஒரு ஆய்வும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

உள்ளூர் கலைஞர்களை கொண்டு நிகழ்வு நடத்துபவர்களின் முகத்துக்காக நுழைவு சீட்டு வாங்குபவர்களும், இலவசமாக நிகழ்வு நடத்துபவர்களும் போலியான ரசிகர்களை மட்டும் ஏற்படுத்தியிருக்கின்றது,

தென்னிந்திய தொலைக் காட்சிகள் எங்களை வைத்து வியாபாரம் செய்கின்றன என்று பொங்கி எழ மட்டும் முடிகின்றது.

முதலில் எங்களை நாங்கள் கண்டுகொண்டோமா என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டும்.

கனடாவில் ஐபிசி தமிழாவை வெற்றி பெறச் செய்வதற்கு நடக்கும் போராட்டமே இதற்கு சான்றாகும்.

முற்று முழுதாக எமது கலைஞர்கள் 1000 பேர் வரை கலந்து கொள்ளும் ஒரு பிரம்மாண்ட நிகழ்சிக்கு கனடாவில் வாழும் தமிழர் தொகையில் 5 சதவீதத்தை கொண்டு வருவதற்கு படும் பாடுகள் சொல்லில் அடங்காதவை.

இதுவே இந்தியக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் கலை நிகழ்வாக இருந்தால் அனுமதிச் சீட்டுக்கள் எப்போதோ விற்றுத் தீர்ந்திருக்கும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

எமக்கான மேடை எங்கே எமக்கான வாய்புகள் எங்கே என்று கேள்விக்கணை தொடுக்கின்றவர்களும் கூட இப்போது காணமல் போய்விட்டார்கள்..

ஐ.பி.சி தமிழ் போல் பலமில்லியன் செலவு செய்து பாடம் கற்றுக் கொள்வதற்கு இங்கு யாரும் இல்லை இருந்தாலும் இனி வரமாட்டார்கள் என்பதே உண்மை.

இனியாவது நாம் எங்களை சுயபரிசோதனை செய்து கொண்டு எமது அணுகு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

எமக்கான கலைப்படைப்புகளை தருவதற்கு எமக்கான கலைஞர்களும் அவர்களுக்கான கலா ரசிகர்களும் முதலில் நாம் உருவாக்கவேண்டும் வேண்டும்.

ekuruvi Light 2019 நிகழ்வுகள்

நிலமும் சிறுத்துச் சனமும் சிறுத்தால்? - நிலாந்தன்

சதித்திட்டங்களையும், அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு எமக்கான அரசியலை நாமே பேச வேண்டும்-புருஜோத்தமன் தங்கமயில்

கொன்சவேற்றிவ் கட்சி வேண்டவே வேண்டாம் - ரதன்

மத சின்னங்களும் ஊர்களும் -காவியா

இராவணன் விண்வெளி தொழில்நுட்பத்துக்கு கிடைத்த கௌரவம்

சமகால நோக்கில் ஆற்றுப்படுத்தல் ஆரோக்கியமானதாக உள்ளதா ?

மறவாத கண்ணீர் நினைவுகள் - சுகந்தினி .தெ

ரொறொன்டோ Raptors

மாற்றத்தை ஏற்படுத்தும் நூல்கள் -ரகுநாதன் மகேசு

இகுருவி நடத்திய இனவழிப்பு கருத்தரங்கு - மயூரன் செல்வகுமார்

நான் கீதா மூர்த்தி.. S.A.A.A.C ஆட்டிசம் நிறுவனம் பக்கங்கள்

**ஐபிசி பாஸ்கரன்**

தனிமனிதனாக தான் உழைத்த கோடிகணக்கான சொத்துக்களையும், ஈழ தமிழர் ஊடகம் ஒன்று அமையவேண்டும் என்றதற்க்காக பெரு நம்பிக்கையோடு செலவு செய்து கொண்டிருப்பவர்.

அதுமட்டுமல்ல தாயகத்தில் போரால் பாதிக்கப்பட முன்னாள் போராளிகளுக்கும், மக்களுக்கும் தொழிவாய்ப்புகளையும், பொருளாதார மேம்பாட்டுக்காகவும் பல மனிதாபிமான பணிகளை போரின் பின்னர் தொடர்ச்சியாக செய்து வருகின்றார். இதற்காக பல இலட்சம் டொலர்களை வழங்கிவருகின்றார்.

எவ்வளவு இருந்தாலும் கொடுப்பதற்கு மனமிருக்கவேண்டும். போர் தின்ட பூமி எங்களிடம் அதையே எதிர்பார்கின்றது இப்படியாக எனது துறை சார்ந்த ஒருவரை இன்னும் நான் வாழ்நாளில் பார்க்கவில்லை. எங்ககளிடமும் ஒருவரும் இல்லை. பாஸ்கரனின் பல மனிதாபிமான வாழ்வாதார பணிகளை நேரில் பார்த்திருக்கின்றேன்.

எங்கள் கலைஞர்களுக்கு ரசிகர்கள் இல்லை என்றாலும் பரவாயில்லை,

இகுருவிக்கோ அல்லது இங்குள்ள எங்கள் ஊடகங்களுக்கோ போட்டி ஊடகம் என்று நாம் ஒரு சிறு வட்டத்தில் நிக்காமல் ஒரு தனிமனிதனாக எம் சமூகத்தை திரும்பி பார்க்கிறார் என்பதற்க்காக...


பாஸ்கரனுக்காக...அவரது நம்பிக்கைக்காக

நாங்கள் இந்நிகழ்வுக்கு ஆதரவு கொடுப்போம்.

அன்புடன்

**நவஜீவன் அனந்தராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
























Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

# அரசியல் சோர்வினை தமிழ் மக்கள் கடக்க வேண்டும்!



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து நாட்டின் பாதுகாப்பும், ஓரளவு மேம்பட்டிருந்த இயல்பு நிலையும் கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக முகாம்களுக்குள் குறிப்பிட்டளவு முடக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் பாடசாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் வணக்க ஸ்தலங்களின் வாயில்களில் துப்பாக்கியோடு காட்சி தருகிறார்கள். உணவுப்பொதிகள் தொடங்கி, அனைத்தையும் சோதனையிடுகிறார்கள். சாதாரண வாழ்கையின் ஒரு பாகமாக இராணுவத்தினரின் பிரசன்னம் மீண்டும் திணிக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பில் பொறுப்புக்கூ0று வேண்டிய ஜனாதிபதியும், அவர் தலைமையிலான தேசிய பாதுகாப்புச் சபையும், ஒட்டுமொத்தமாக தவறிழைந்திருக்கிற நிலையில், பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். இதனால், 250க்கும் அதிகமான அப்பாவி மக்கள் பலிவாங்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மன அழுத்தத்தினால், நாட்டு மக்கள் அல்லாடிக் கொண்டிருக்கும் போது, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்திக் கொண்டு, பாதுகாப்பு உறுதிப்படுத்தல் எனும் போர்வையில், வடக்கு கிழக்கில் இராணுவத்தினரின் பிரசன்னத்தை அதிகப்படுத்தியிருக்கறார்கள். ஒரே நாளில் முளைத்த சோதனைச் சாவடிகள் மக்களை அலைக்கழித்தன. பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகிய கொழும்பிலோ, அதனை ஆண்டிய பகுதிகளிலோ, இராணுவத்தினரின் பிரசன்னம் என்பது, மக்களை அச்சுறுத்தும் அளவுக்கு ஒரு சில நாட்கள் மாத்திரமே இருந்தன. ஆனால், வடக்கு கிழக்கில் அது, தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. இது, இறுதி மோதல் காலத்தில் வடக்கு கிழக்கை அச்சுறுத்தல்களுக்குள் வைத்திருந்த இராணுவத்தின் நடவடிக்கைகளை ஒத்த ஒன்றாக மாறியிருக்கின்றது.

இந்த நிலை, தமிழ் மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை மாத்திர மல்லாமல், பெரும் சோர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அது, அவர்களின் சாதாரண வாழ்க்கை மீதான பெரும் அழுத்தமாக மாறியிருப்பதுடன், அரசியல் உரிமைகள் குறித்த உரையாடலையோ, செயற்பாடுகளையே மட்டுப்படுத்தியிருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் இயங்குநிலை என்பது, இன்றைக்கு அரசியல்வாதிகள் அளவுக்கு குறிப்பிட்டளவு சுருங்கிவிட்டது. 2015 ஆட்சி மாற்றத்தோடு, தமிழ் மக்கள் மத்தியில் எழுந்த சமூக செயற்பாட்டு இயக்கங்களோ, குழுக்களோ தங்களின் செயற்பாடுகளை ஒரேநாளில் கைவிடும் நிலை அல்லது மட்டுப்படுத்திக் கொண்டு ஒதுங்கும் நிலை உருவாகியிருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது, எதிரியோடு மட்டுமில்லாமல், தனக்குள்ளும் முட்டிமோதிக் கொண்டுதான், தன்னை குறிப்பிட்டளவு சீர்செய்து வந்திருக்கின்றது.

குறிப்பாக, சாதாரண மக்கள் நேரடி அரசியலில் தலையிடுகளை அதிகளவில் செய்யாது இருந்தாலும், அந்த அரசியல் அவர்களைச் சுற்றியதாகவே இருந்திருக்கின்றது. அவர்களிடையேயான சாதாரண அரசியல் உரையாடல்களிலேயே செழுமை இருந்து வந்திருக்கின்றது. அதுதான், அரசியல் தலைமைகளையும் ஓரளவுக்கு கட்டுக்குள்ளும், மக்களின் பக்கத்திலும் நிற்கவும் வைத்தது. ஆனால், அந்தச் சூழல் மாற்றமடையும் போது, உரையாடல்களுக்கான களம் மாத்திரமல்ல, அதன் அடுத்த கட்டங்களும் காணாமற்போகவும் வாய்ப்புக்களையும் உண்டு பண்ணியிருக்கின்றன. அது, வெளிச்சக்திகளை உள்ளுக்குள் அனுமதிக்கும் சூழலையும் ஏற்படுத்தி விட்டிருக்கின்றன.

> சதித்திட்டங்களையும், அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு எமக்கான அரசியலை நாமே பேச வேண்டும்

**புருஜோத்தமன் தங்கமயில்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னரான சூழலில் முஸ்லிம்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகிறார்கள். அவர்களின் சாதாரண வாழ்க்கை மீது என்றைக்கும் இல்லாத அளவுக்கான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது. நாளாந்தம் ஒவ்வொருபுதிய விடயங்களைத் தூக்கிக் கொண்டு தென் இலங்கையில் சக்திகள், முஸ்லிம்களை நோக்கி வருகிறார்கள். தாக்குதல் நடத்துகிறார்கள்; நெருக்கடியை வழங்குகிறார்கள். அது மட்டுமல்லாமல், தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தமிழ் மக்களையும் இணைத்துக் கொண்டு செயற்பட்ட வேண்டும் என்கிற சதித்திட்டமொன்றை அவர்கள் முன்னெடுக்கிறார்கள். குறிப்பாக, தென் இலங்கையில் காவிக்கூட்டமும், அதன் ஆதிக்க அரசியலும் சந்தர்ப்பத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு செயற்படுகின்றன. அவர்களின் சதித்திட்டங்களுக்கு ஒத்தூதும் செயற்பாடுகளை, சிவ சேனை உள்ளிட்ட சில அடிப்படை அறத்துக்கு அப்பாலான அமைப்புக்கள் வழங்குகின்றன.

எழுபது ஆண்டுகால தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதில் காவிக் கூட்டமும், அதன் அரசியலும் செலுத்திய தாக்கத்தினை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இன்றைக்கும், முல்லைத்தீவின் நீராவியடி, திருகோணமலையில் கன்னியா உள்ளிட்ட தமிழ் பாரம்பரிய நிலங்களில், புத்தர் சிலைகளை ஆடாத்தாக அமைத்துக் கொண்டு ஆக்கிரமிப்பு அரசியலைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள், காவிதரித்த பிக்குகளும், தென் இலங்கையிலிருந்து அழைத்து வரப்படும் அடிப்படைவாதிகளும் நீராவியடியையும், கன்னியாவையும் தங்களின் சொத்துக்கள் என்று உரிமைகோரி வருகின்றனனர். இந்த அடாவடித்தனங்கள் குறித்தெல்லாம், சிவசேனைவுக்கோ, அதன் ஸ்தாபகர் மறவன்புலவு சச்சிதானந்தனுக்கோ, அவர்களை ஒத்த கூட்டத்துக்கோ தெரிவதில்லை. அந்த அடாவடிகள் குறித்தும் வாயே திறப்பதில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை அதிகப்படுத்தும் செயற்பாடுகளை காவிக்கூட்டம் முன்னெடுத்தால், ஓடிப்போய் அவர்களுக்கு முட்டுக்கொடுக்கிறார்கள். சிறுபான்மைச் சமூகங்களை பிரித்தாளுவதன் ஊடகவே, சிங்கள பௌத்த பேரினவாதம் இந்த நாட்டை பெருமளவு சூறையாடி வந்திருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையில், அடிப்படை அறத்துக்கு அப்பால் நின்று செயற்படுகின்ற தமிழ்த் தரப்புக்கள் குறித்து மக்கள் எரிச்சலடைந்திருக்கிறார்கள்.

சில வாரங்களுக்கு முன் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக தலதா மாளிகைக்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை அத்துரலிய ரத்ன தேரர் தலைமையில் காவிக்கூட்டம் போராட்டமொன்றை நடத்தியது. கடந்தவாரம், அந்தக்காவிக் கூட்டம், கல்முனையில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகபோராட்டம்நடத்துவதாகக் காட்டிக் கொண்டிருக்கின்றது. கல்முனை வடக்கு (தமிழ்) உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமுடைய பிரதேச செயலகமாக தரமுயர்த்த வேண்டும் என்கிற கோரிக்கை மூன்று தசாப்தகாலமாக அம்பாறை மாவட்ட தமிழ்மக்களிடம்இருக்கின்றது. ஆனால், கடந்த காலத்தில் அது குறித்து எந்தவித அக்கறையையும் இந்தக் காவிக் கூட்டம் கொண்டிருந்ததில்லை. ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு மனநிலையை வளர்ப்பதற்கான களமாக கல்முனை பிரதேச செயலக விடயத்தைக் கொள்ள முடியும் என்று தெரிந்ததும், அதனைக்கையில்எடுத்துக் கொண்டு செயற்பட்டிருக்கின்றது.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கடந்த எழுபது ஆண்டுகாலமாக ஆக்கிரமிப்புக் கொடூரங்களினால் அல்லாடி வருகிறார்கள். ஒருபக்கம் சிங்களக் குடியேற்றங்கள், இன்னொரு பக்கம் முஸ்லிம்களின் காணி பிடிப்புக்கள் என்று அச்சுறுத்தல்கள் அதிகம். அப்படியான நிலையில், எஞ்சியுள்ள தங்களின் பூர்வீக நிலங்களையும், இருப்பையும் தக்க வைப்பதற்கான ஒரு கட்டமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை அவர்கள் பார்க்கிறார்கள். அப்படியான நிலையில், அதனை எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று போராடிவருகிறார்கள். அந்த மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை முஸ்லிம்களுக்கு எதிரான ஒன்றாக மாற்றிக் கொண்டு காவிக்கூட்டம் கடந்த வாரம் நடத்திய சதிராட்டம் சகிக்க முடியாததாக இருந்தது.

இனவாதத்தின் அண்மைய முகவரியாக அடையாளம் பெற்ற பொதுபலசேனாவின் ஞானசார தேரரும், புலிகளுக்கு எதிரான மோதல்களை மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பிக்க வேண்டும் என்று திருகோணமலையில் உண்ணாவிரதம் இருந்து, இறுதிப் பேரழிவுக்கு வித்திட்டவர்களில் ஒருவரான அத்துரலிய தேரரும் கல்முனையில் தமிழ் மக்களுக்கு ஆதரவான போராட்டங்களில் தென்படுகிறார்கள் என்பது, எவ்வளவு அபத்தமானது. ஆனால், அந்த அபத்தங்கள் கடந்த வாரம் நிகழ்ந்தன. அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்டு, சில அரசியல் முகவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் வருகிறார்கள். இவ்வாறான நிலையெல்லாம் சேர்த்து கொண்டு தமிழ் மக்களை சோர்வடைய வைக்கின்றன.

இவ்வாறான கட்டத்தில்தான், சதித்திட்டங்களையும், அடக்குமுறைகளையும் எதிர்கொண்டு எமக்கான அரசியலை நாமே பேச வேண்டும் என்கிற விடயத்தை ஒவ்வொரு கணமும் தமிழ் மக்கள் தமக்குள் ஒரு நெருப்பாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அதுதான், சோர்வான மனநிலையைக் கடந்து நின்று, எமது அரசியலைப் பலப்படுத்தும். இல்லையேன்றால், சதிகாரர்களின் வலைக்குள் சிக்கி, ஒட்டுமொத்தமாகக் காணாமல் போக வேண்டி வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமும் சிறுத்துச் சனமும் சிறுத்தால்?




நிலாந்தன்

ஈழத் தமிழர்களின் மகப்பேற்று விகிதம் தொடர்பான ஒரு விவாதத்திற்கான உதவிக் குறிப்புக்கள்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களின் பின் முஸ்லிம் சமூகத்தின் மீது புத்தி பூர்வமற்ற பில்லிசூனியத்தனமான அல்லது மாந்திரீகத்தனமான அல்லது மாயாஜாலக் கதைகளில் வருவது போன்ற குற்றச்சாட்டுக்கள் பல முன்வைக்கப்படுகின்றன. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரான ஐரோப்பியச் சூழலில் யூதர்களின் மீதும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களின் பின் முஸ்லிம் சமூகத்தின் மீது சுமத்தப்படுகின்ற இவ்வாறான விஞ்ஞான பூர்மற்ற குற்றச்சாட்டுக்கள் பெரும்பாலானவை ஒரு மையத்தில் குவிகின்றன.

அது என்னவெனில் முஸ்லிம்களின் சனத்தொகை ஏனைய இனங்களை விட அதிகரித்த விகிதத்தில் பெருகி வருவதைக் குறித்த அச்சமே அது. இவ்வச்சம் காரணமாக முஸ்லிம்கள் ஏனைய இனங்களின் மகப்பேற்று வீதத்தை குறைக்கும் விதத்தில் அல்லது கருத்தரிக்கும் ஆற்றலை அழிக்கும் விதத்தில் ஏதோ சதி சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள், அல்லது புத்திக்கு விளங்காத மாந்திரீக பில்லி சூனிய வேலை எதையோ செய்து வருகிறார்கள் என்ற ஓர் அச்சம் இலங்கைத்தீவு முழுவதிலும் பரவிக் காணப்படுகிறது. இது படிப்பறிவு குறைந்த சாதாரண குடியானவர்கள் மத்தியில் மட்டும் காணப்படும் ஓர் அபிப்பிராயம் அல்ல. படித்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பொறுப்பான பதவிகளை வகிக்கும் பலரிடமும் இப்படிப்பட்ட நம்பிக்கைகள் இருப்பதைக் காண முடிகிறது.

முஸ்லிம் சமூகம் தனது சனத்தொகையை கட்டுப்பாடின்றி பெருக்கிக் கொள்வது மட்டுமல்ல மறுவளமாக ஏனைய சமூகங்களின் கருத்தரிக்கும் ஆற்றலையும், சதி சூழ்ச்சி செய்து தடுக்கிறது. அல்லது அழிக்கிறது என்ற ஊகத்தின் அடிப்படையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு முன்பிருந்த தொடங்கி முஸ்லிம் சமூகத்தின் மீது பின்வரும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

1. முஸ்லிம் சாப்பாட்டுக் கடைகளில் குறிப்பாகக் கொத்து றொட்டிக் கடைகளில் கருத்தடை மாத்திரைகள் மாவில் கலக்கப்படுவதான குற்றச்சாட்டு. கடந்த ஆண்டு அம்பாறையிலிருந்து தொடங்கி கண்டி வரையிலும் நடந்த முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கான தொடக்கப் பொறிகளில் இந்த வதந்தியும் ஒன்று.
2. கிழக்கில் சாப்பாட்டுக்கடைகளில் இடியப்பம் போன்ற மாப்பண்டங்களில் கருத்தடை மாத்திரைகள் கலக்கப்படுவதான குற்றச்சாட்டு.
3. திருகோணமலையில் ஒரு கோவில் ஐயரின் உதவியாளராக இருந்த முஸ்லிம் தன்னுடைய மத அடையாளத்தை மறைத்தோடு கோவில் பிரசாதத்தில் வழங்கப்படும் பஞ்சாமிர்தத்தில் ஏதோ ஒரு மருந்தைக் கலந்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டு.
4. முஸ்லிம் கடைகளில் விற்கப்படும் பெண்களுக்கான உள்ளாடைகளில் ஏதோ இரசாயனம் அல்லது ஏதோ ஒரு ஜெல் வகைத்திரவம் தூவப்படுவதான அல்லது பூசப்படுவதான குற்றச்சாட்டு.

மேற்கண்டவை போன்ற குற்றச்சாட்டுக்கள் யாவும் ஒருமையத்தில்தான் குவிகின்றன. அதாவது முஸ்லிம் சமூகம் ஏனைய இனத்தவர்களின் கருத்தரிக்கும் சக்தியை அழிக்கின்றது என்பதே அது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் பெரியதாகவும் ஒப்பீட்டளவில் தூலமானதாகவும் காணப்படுவது குருநாகல் வைத்தியசாலையில் பணி புரிந்த மகப்பேற்று நிபுணரான ஒரு முஸ்லிம் மருத்துவர் செய்கு சியாப்டீன் மொகமட் ஷாஃபி மீதான குற்றச்சாட்டு ஆகும். இக்குற்றச்சாட்டு கிளப்பப்பட்டதிலிருந்து இது வரையிலும் நூற்றுக்கணக்கானவர்கள் அம்மருத்துவருக்கு எதிராக முறைப்பாடுகளைச் செய்து வருகிறார்கள். சிங்களப் பொது உளவியலை திருப்திப்படுத்துவதற்காக அம்மருத்துவர் சட்ட விரோதமாக சொத்துச் சேர்க்கும் வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த விவகாரத்தில் மருத்துவர் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் பல புத்திபூர்வமற்றவை என்பதை வெளிப் படையாகச் சொன்ன காரணத்தினால் சுகாதார அமைச்சராகிய ராஜித சேனாதிரத்ன கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறார். அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் நடந்திருக்கின்றன.

ஆனால் மருத்துவர் ஷாஃபிக்கு எதிரான குற்றாச்சாட்டுக்கள் ஆதரமற்றவை, அறிவு பூரவமற்றவை என்பதனை மகப்பேற்று நிபுணரும் பேராசிரியருமாகிய ஹேமந்த சேனநாயக்க ஓர் ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெளிவுபடுத்தியிருக்கிறார். இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மகப்பேற்றுப் பிரிவின் பகுதித் தலைவர். இலங்கை மகப்பேற்று மருத்துவ நிபுணர் சங்கத்தின் முன்னாள் தலைவர். இக் குற்றச்சாட்டு மிகவும் சாத்தியமற்றது. ஏனெனில் ஏனைய மருத்துவர்களின் பிரசன்னத்தோடு தவறுதலாக ஒரு சிசேரியன் சத்திரசிகிச்சை செய்வதென்பது இலகுவானதல்ல. மேலும் பலோப்பியன் குழாயானது சாதாரண சிசேரியன் சத்திர சிகிச்சையின் போது வெளியில் தெரிவதில்லை என்பதனாலும் அதை சேதப்படுத்துவதற்கு கைகளை வயிற்றுக்குள் உட்செலுத்த வேண்டும் என்பதனாலும் அவ்வாறு நடைபெறுவதற்கு சாத்தியமில்லை. இந்த குற்றச்சாட்டானது முறையாகவும், விரைவாகவும் விசாரிக்கப்படாதவிடத்து இது இலங்கையின் மகப்பேற்று வைத்தியத் துறையில் சர்வதேச மட்டத்தில் பாராட்டப்படக்கூடிய அளவில் ஏற்படுத்தப்பட்ட சாதனைகளுக்கு ஓர் எதிர்மறையான விளைவை கொடுக்கும். இன்று இலங்கையில் 99 வீதமான பிறப்புக்கள் வைத்தியசாலைகளில் நடைபெறுகின்றது. இந்நிலையில் இந்த செய்தியால் மக்கள் வைத்தியசாலையில் குழந்தை பெறுவதற்குப் பயப்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும்.' என்று பேராசிரியர் ஹேமந்த சேனநாயக்க கூறியிருக்கிறார்.

இந்தப் பேட்டியின் பிற்பகுதியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு புள்ளி விபரத்தைக் காட்டுகிறார்.அதாவது இலங்கைத் தீவில் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் குழந்தை பெறும் அளவு அதிகரித்து வருகிறது. தற்பொழுது 39 வீதமான பிரசவம் சத்திரசிகிச்சை மூலமே நடைபெறுகிறது. ஆனால் ஐக்கிய அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் இதை விடக் குறைந்த விகிதத்திலேயே சிசேரியன் சிகிச்சை நடக்கிறது என்று அவர் கூறியிருக்கின்றார்.


முஸ்லிம்களின் சனத்தொகை பெருகுவதைக் குறித்து சிங்கள மக்கள் மட்டுமல்ல சில ஐரோப்பிய இனங்கள் மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியிலும் உரையாடல் உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் பிறப்பு விகிதம் குறைந்து வருவதான புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஈஸ்டர் குண்டு வெடிப்பின் பின்னரான ஒரு சமூகச் சூழலில் இது போன்ற உரையாடல்கள் அதிகம் கவனிப்பைப் பெறுகின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு சிறு சந்திப்பில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. முஸ்லிம் சமூகத்தின் சனத்தொகைப் பெருக்கம் பற்றி கவலைப்படும் தமிழ் மக்கள் தாங்களும் தங்களுடைய சனத்தொகையைப் பெருக்கிக் கொள்வதைக் குறித்த ஏன் சிந்திப்பதில்லை? என்று கேட்கப்பட்டது.

கொழும்பில் வசிக்கும் மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் இது தொடர்பாகச் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எழுதியும், கதைத்தும் வருகிறார். ஆனால் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் இது போன்ற கருத்துக்கள் எடுபடுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் மகப்பேற்று வீதம் குறைந்து வருகிறது என்றஓர் அவதானிப்பு உண்டு.ஒன்று அல்லது இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட சிறிய குடும்பங்கள் அதிகரித்து வருகின்றன. இது தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த நாடுகளிலும் காணப்படும் ஒரு நிலமைதான். இதற்குக் காரணம் என்ன?

மூத்த பெண் சமூகச் செயற்பாட்டாளர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.. ''முன்பு பிரசவத்திற்கு அரசக் கட்டமைப்புக்களான கிராம மட்ட மகப்பேற்று நிலையத்தில் பதிந்து மருத்துவத்தாதியின் கண்காணிப்பிற்கூடாக பெரும்பாலான பிரசவங்கள் அரச மருத்துவமனைகளை நோக்கியே செலுத்தப்பட்டன. ஆனால் மருத்துவத் துறையில் தனியார் மருத்துவ மனைகளின் எழுச்சியோடு பிரசவத்திற்காக அரச மருத்துவமனையை நாடும் நடுத்தர வர்க்கத்தின் தொகை குறைந்து வருகிறது. குறிப்பாக தனியார் மருத்துவ மனைகளை நாடும் படித்த நடுத்தர வர்க்கத்தினர். அங்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவ நிபுணரின் வழிகாட்டுதலின் கீழ் தனியார் மருத்துவ மனைகளிலேயே பிரசவத்தை வைத்துக் கொள்கிறார்கள். இவ்வாறு தனியார் மருத்துவமனையைத் தெரிந்தெடுக்கும் பலரும் சுகப்பிரசவத்திற்கு வாய்ப்பில்லை என்பதனால் சிசேரியனைத் தெரிந்தெடுப்பதில்லை. பதிலாகச் சுகப்பிரசவத்தில் இருக்கக் கூடிய வலி, ஆபத்து என்பவற்றைக் குறித்த அளவுக்கு மிஞ்சிய அச்சம் காரணமாக அவர்களாகவே சிசேரியனைத் தெரிந்தெடுக்கிறார்கள். இவ்வாறு சிசேரியனைத் தெரிந் தெடுக்கும் பெண்கள் ஆகக் கூடிய பட்சம் மூன்று பிள்ளைகளைத்தான் பெறலாம். ஏனெனில் வயிற்றில் மூன்று தடவைகள் தான் வெட்டலாம். இதுவும் மகப்பேற்று விகிதத்தைக் குறைக்கிறது என்று மூத்த பெண்கள் தெரிவிக்கிறார்கள்.




அவர்கள் பெருகுகிறார்கள். நாங்கள் சிறுத்துக்கொண்டு வருகிறோம் என்று மனம் புழுங்கும் சமூகங்கள் சீனர்கள் செய்வது போன்ற மகப்பேற்று வீதத்தை அதிகரிக்கும் விதத்தில் ஊக்குவிப்புக்களைச் செய்யலாம்.



அதே சமயம் மருத்துவர்கள் தரும் தகவல்களின்படி அரச மருத்துவமனைகளில் காணப்படும் இடப்பற்றாக்குறை காரணமாக தனியார் மருத்துவ மனைகளைக் கர்ப்பிணிகள் நாடினாலும் பிரசவம் பிசகும் பொழுது இறுதியிலும் இறுதியாக அவர்கள் அரச மருத்துவ மனைகளுக்கே வருகிறார்கள். எனினும் தனியார் மருத்துவ மனைகளைப் நோக்கிச் செல்லும் போக்கென்பது சிசேரியரின் விகிதத்தை கூட்டுகிறது என்பதனை நிரூபிப்பதற்கு புள்ளி விபரங்கள் தொகுக்கப்பட வேண்டும். குறிப்பாக படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் பிரசவம் தொடர்பாகவும், குழந்தை வளர்ப்புத் தொடர்பாகவும் காணப்படும் அதீத அக்கறையும், மகப்பேற்று விகிதம் குறைய ஒரு காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் தமிழ்ப் பெண்கள் படிப்புக் காரணமாகவும், சீதனம் காரணமாகவும் திருமணம் செய்யும் வயது தள்ளிப்போகிறது. பிந்தித் திருமணம் செய்யும் பெண்கள் பிந்திப் பிள்ளை பெறும் பொழுது எழக்கூடிய உடல் மற்றும் உளவியற் பிரச்சினைகளும் அவர்களைச் சிசேரியனை நோக்கி செலுத்துகின்றன. அதோடு முன்பு வீடுகளில் குனிந்தெழும்பி செய்யப் பட்ட வேலைகளான தேங்காய் துருவுதல், அம்மியில் அரைத்தல், திரிகை அரைத்தல், மா இடித்தல், மீன் வெட்டுதல் போன்ற இன்னோரன்ன வேலைகளில் பலவற்றை இப்பொழுது பெண்கள் செய்வதில்லை. குறிப்பாக நவீன சமையலறையில் நின்றபடி வேலைகளைச் செய்யலாம். இதனால் அன்றாட வாழ்வில் குனிந்தெழும்பிச் செய்யப்பட்ட பல வேலைகளை இப்பொழுது செய்வதில்லை. இதுவும் சுகப்பிரசவத்தைக் கடினமாக்குகிறது.


இது போன்ற பல காரணங்களின் விளைவாகவும் மகப்பேற்று விகிதம் குறைந்து வருகிறது. முன்பு மூன்றிற்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த பலரும் தாங்கள் பிள்ளை பெறும் பொழுது ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் போதும் என்று கருதுகிறார்கள். இப்படியாக மகப்பேற்று விகிதம் குறைந்து செல்லும் ஒரு பின்னணிக்குள் முஸ்லிம் சமூகத்தின் மகப்பேற்று விகிதப் பெருக்கத்தைப் பார்த்து அஞ்சும் ஒரு பின்னணிக்குள் முஸ்லிம் சமூகத்தின் மீது அறிவு பூர்வமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

அவர்கள் பெருகுகிறார்கள். நாங்கள் சிறுத்துக்கொண்டு வருகிறோம் என்று மனம் புழுங்கும் சமூகங்கள் சீனர்கள் செய்வது போன்ற மகப்பேற்று வீதத்தை அதிகரிக்கும் விதத்தில் ஊக்குவிப்புக்களைச் செய்யலாம். பண உதவியாகவோ அல்லது தொழில் உதவியாகவோ அல்லது வீட்டு வசதியாகவோ அல்லது வேறெந்த சலுகையாகவோ ஊக்குவிப்புக்களைக் கொடுப்பதன் மூலம் தமிழ் மக்களும் உள்ளிட்ட மகப்பேற்று விகிதம் குறைந்த சமூகங்களின் சனத்தொகையைப் பெருக்கலாம். சீனா அதைச் செய்கிறது. ஏனெனில் அது ஓர் அரசு. ஆனால் ஈழத்தமிழர்கள் ஓர் அரசற்ற இனம். கடந்த பல தசாப்தங்களாக போர் ஈழத் தமிழர்களைத்தின்று தீர்த்துவிட்டது. அடுத்த படியாக புலப்பெயர்ச்சி ஈழத் தமிழர்களை சிதறடித்து விட்டது. இவ்வாறு போரினாலும் புலப் பெயர்ச்சியினாலும் நீர்த்துப் போன ஈழத் தமிழர்களின் மகப்பேற்று விகிதமும் குறைந்து வருவதை யார் தடுப்பது?

இனப் படுகொலையாளிகள் தமிழ் மக்களின் இனச்செறிவு நீர்த்துப் போவதையே விரும்புவார்கள். ஆனால் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் தமிழ் மக்கள்தான் உலகம் முழுவதிலும் உள்ள தமது நண்பர்களின் உதவியோடு தமது சமூகத்தையும், சனப்பெருக்கத்தையும் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக நிதி வளம் பொருந்திய புலம் பெயர்ந்த தமிழ் சமூகமும் தாயகத்தில் உள்ள மருத்துவ சமூகமும் இது தொடர்பில் நீண்ட கால நோக்கிலான ஒரு வேலைத் திட்டத்தை வகுக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் சமூகங்கள் மத்தியிலும் தாயகத்திலும் பிள்ளைப்பேறு விகிதம் குறைவது தொடர்பில் திருத்தமான புள்ளி விபரங்களை முதலில் பெற வேண்டும். அப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட ஒரு முடிவிற்குச் செல்லலாம். நிலமும் சிறுத்து சனமும் சிறுத்துக்கொண்டே போனால் எதிர்காலத்தில் நிலமை என்னவாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2018 ஒன்ராரியோ மாநிலவைக்கு, திடீரென கொன்சவேற்றிவ் கட்சித் தலைவரான டக் போர்ட் மாநில முதல்வராக தேர்வானார். தமிழை தாய் மொழியாகக் கொண்ட வாக்காளர்கள், தமிழ் வேட்பாளர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என பிரச்சாரப்படுத்தப்பட்டு, இரு தமிழ் வேட்பாளர்கள் மாநில பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்வு செய்யப் பட்டார்கள். 2018க்கு முன்னர் ஆட்சியிலிருந்த லிபரல் கட்சி ஊழல் ஆட்சி நடாத்தப்பட்டது என பிரச்சாரப்படுத்தப்பட்டது. அதன் விளைவாககொன்சவேற்றிவ்கட்சியை மக்கள் ஆட்சி பீடம் ஏற்றினர்.




# கொன்சவேற்றிவ் கட்சி வேண்டவே வேண்டாம்!

**ரதன்**

மக்களுக்கான கட்சி என பிரச்சாரத்தில்கூவியகொன்சவேற்றிவ் கட்சி,பழைய படிவேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகிவிட்டது.

ஏற்கனவே பல உயர் பாடசாலை மாணவர்கள், கல்வியைத் தொடராமல் வீதிக்கு வருகின்றனர். அண்மையில் ஒன்ராரியோ அரசால் ஏற்படுத்தப்பட்ட கல்வி மாற்றங்கள், நிதிக் கட்டுப்பாடுகள் இதனை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

கொன்சவேற்றிவ் அரசால் மேற் கொள்ளப்பட்டு வரும் மாற்றங்கள் சமூக நலனற்றவை. அதே சமயம் தனியார்மயப்படுத்தலுக்கான முன்னீட்டுத் திட்டங்களாக உள்ளன. நவ தாராளவாதத்தை ஒன்ராரியோவில் நிலை நிறுத்த மேற்கொள்ளப்படும் திட்டங்கள். இதன் எதிர் விளைவுகள் பற்றிய சிந்தனையற்ற செயற்பாடுகளாக உள்ளன. autism உள்ள குழந்தை களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளை களுக்குஅதிகளவுபணத்தைஇனிமேல் செலவிட வேண்டிவரும். இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் ஒன்ராரியோ மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

டக்போர்ட்டின் செல்வாக்கு மிக, மிகக் குறைந்து காணப்படுவதனை அபிப்பிராய கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. ரொரன்ரோ Raptors வெற்றி ஊர்வலத்தில் கலந்து கொண்ட டக் போர்ட்க்கு மக்கள் கொடுத்தவரவேற்புமிகமோசமானது. அதே நிகழ்வில் கலந்து கொண்ட ஜஸ்ரின் ரூடோ, ஜோன் ரொரி ஆகியோரை மக்கள் வரவேற்றனர். மேலும் அபிப்பிராய கணிப்புக்கள் ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சியின் செல்வாக்கு லிபரலை விட சற்று குறைந்திருப்பதனைக் காட்டுகின்றது.

இதனைச் சரி செய்ய மேலும் மூன்று வருடங்கள் உள்ளன. ஆனால் டக்போர்ட் தனது அமைச்சரவையின் முக்கிய அமைச்சர்களை பதவியிறக்கம் செய்துள்ளார். ஒரு வகையில் இது டக் போர்ட்க்கு நன்மையளிக்கலாம். அதே சமயம் டக் போர்ட்க்கு ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சிக்குள்ளும் செல்வாக்கு குறைந்துள்ளது. இவருக்கு எதிரானவர்களே இந்த முக்கிய அமைச்சர்கள். கொன்சவேற்றிவ் கட்சித் தலைமைப் போட்டியில் இவரை ஆதரிக்காதவர்கள். அவர்களது நடவடிக்கை தன்னை பாதித்துள்ளது என உலகிற்கு காட்டும் ஒரு செயற்பாடே இது எனத் தெரிவிக்கும் முயற்சியே இது. எது எப்படியிருப்பினும் இறுதி முடிவு எடுக்க வேண்டிய தலைவர் டக் போர்ட். இவர் ஒரு பொழுதும் மக்கள் நலனை கருத்திற் கொள்ளாதவர். மறு புறும் பதவிக் குறைப்புக்குள்ளான அமைச்சர்கள் மேலும் இவருக்கு எதிராகசெயற்படுவதற்கானசாத்தியக் கூறுகள் அதிகம்.

மத்திய லிபரல் அரசுக்கு, ஒன்ராரியோவில் அதிக செல்வாக்கு அற்ற கொன்சவேற்றிவ் அரசு அமைந்திருப்பது லாபமான விடயம். மத்திய கொன்சவேற்றிவ் தலைவரை மக்கள் நன்கறியவில்லை. பிரசித்தமானவரல்ல. மத்தியில் கொன்சவேற்றிவ் கட்சி வெற்றி பெறவேண்டுமாயின் கியுபெக்கிலும், ஒன்ராரியோவிலும் அதிக ஆசனங்கள் பெற வேண்டும். கியுபெக்கில் லிபரலுக்கு செல்வாக்கு அதிகம். அங்கு கொன்சவேற்றிவ் கட்சி ஒரு சில ஆசனங்களைப் பெறலாம். ஒன்ராரியோவில் கடந்த யூனுக்கு முதல்இருந்தசெல்வாக்குஇப்பொழுது இல்லை. அதற்கு பிரதான காரணம் டக் போர்ட்டின் அரசு.

தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும், என கொள்கைகளை கவனியாது வாக்களித்ததன் விளைவு, பல தமிழர்களுக்கு வேலை இழப்பு, பல முதியோர், இளைஞர்கள், மாணவர்கள் பாதிப்பு. ஒட்டு மொத்தத்தில் மத்திய வர்க்க மக்கள், வறுமைக் கோட்டினை அண்டி வாழும் மக்களின் அன்றாட வாழ்வே சிக்கலாகிவிட்டது. அவர்களின் உணவு, உடை, உறையுள், கல்வி போன்ற அனைத்தையும் கேள்விக் குறியாக்கிவிட்டது. ஒரு தடவை சிந்திப்போம். இனிமேலாவது மக்கள் நலன் திட்டங்களை முன்வைக்கும் கட்சிக்கு வாக்களிப்போம்.

வீதிக்கு பெயரிடுவதல்ல முக்கியம், வீதிக்கு மக்கள் வரமால் பாதுகாப்பதே முக்கியம். அதுஎமக்கும் விளங்கவில்லை. அவர்களுக்கும் விளங்கவில்லை.

**பதவி மாற்றத்துக்குள்ளான அமைச்சர்கள்**

- Vic Fedeli நிதியிலிருந்து பொருளாதார அபிவிருத்தி துறைக்கு (Finance to Economic Development.)
- Lisa Thompson கல்வியிலிருந்து அரச, நுகர்வோர் துறைக்கு( Education to Government and Consumer Services).
- Lisa MacLeod சமூக சேவைகள், குழந்தைகள் நலன் துறைகளிலிருந்து உல்லாசத்துறை மற்றும் விளையாட்டுத் துறைக்கு ( Children,Community and Social Services to Tourism, Culture and Sport.)
- Merrilee Fullerton கல்வியகங்களிருந்து, நீண்ட கால நோயாளர் பராமரிப்புக்கு இது சுகாதார அமைச்சிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. (Training, Colleges and Universities to Long-term Care, which was previously part of the Ministry of Health.)
- Michael Tibollo உல்லாசத்துறை மற்றும் விளையாட்டுத் துறையிலிருந்து, மனநோய் இணை அமைச்சராக (Tourism, Culture and Sport to a new junior portfolio of Associate Minister of Mental Health and Addictions.)
- Bill Walker (அரச, நுகர்வோர் துறையிலிருந்து சக்தி வளத்துறை இணை அமைச்சராக) Government and Consumer Services to a new junior portfolio of Associate Minister of Energy.

**ஒன்ராரியோ அரசால்நிதிக் குறைப்பு அல்லது நீக்கப்பட்ட துறைகள்**

மாநில அரசாங்க ஊழியர்களின் வேதன அதிகரிப்பு அடுத்த மூன்று வருடங்களுக்கு ஒரு வீதமாக இருக்கும். ஆனால் பணவீக்கம் இரண்டு வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூககொடுப்பனவைப்பெறுபவர் களின்பிள்ளைகளுக்குதலா ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்கப்படும் மாதாந்த 230 டொலர்கள், இனிமேல் வழங்கப் படாது.

உயரமான கட்டிடங்கள் கட்டப் படுவதற்கு மாநகரத்தின் அனுமதி பெறப்படவேண்டும். இனிமேல் உயரங்கள் வானத்தை தொடலாம்

மாநகரங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகளவு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகள் பராமரிப்பு, அத்தியாவசிய சேவைகள், அம்புலன்ஸ் சேவை, சுகாதார சேவை கள் பாதிக்கப்படும்.

ஒன்ராரியோ ஆர்ட்ஸ் கவுன்சிலுக்கு வழங்கப்பட்ட நிதி நிறுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு தரப்பட்ட மருத்துவ ஆய்வுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் அதிகளவு குறைக்கப் பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தால் 2025ம் ஆண்டுக்குள் 50 மில்லியன் மரங்கள் நடப்படவேண்டும் என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கென நிதி ஒதுக்கப்பட்டு திட்டம் நடைமுறையிலிருந்தது. இத் திட்டம் கைவிடப்பட்டது.

நீங்கள் கனடாவிற்கு வெளியே செல்லும் பொழுது, உங்களுக்கு நோய் ஏற்பட்டு, அதற்கு அந்த நாட்டில் நீங்கள் வைத்தியரையோ, வைத்திய சாலையையே நாடியிருந்தால், அதற்கான கட்டணத்தை நீங்கள் செலுத்தியிருப்பீர்கள். வழமையாக நீங்கள் செலுத்திய பணத்தை ஒன்ராரியோ அரசு முழுமையாகவோ, பகுதியாகவோ மீள உங்களுக்கு வழங்கும். இத் திட்டம் நீக்கப்பட்டுள்ளது.

அடுத்த பத்தாண்டுகளுக்கு சுகாதார சேவைக்கு வழங்கப்படும் நிதி ஒரு பில்லியனால் குறைக்கப் படும். இதனால் பல மருத்துவ சேவைகளுக்கு நீங்கள் உங்கள் பணத்தை வழங்கவேண்டி வரும். இது தனியார் மருத்துவ சேவையை அதிகரிப்பதற்கான வழிவக்குப்பதற்கான முதல் படி.

ஒன்ராரியோவில் LHINலின் எனப்படும்14 மருத்துவதாதிசேவைகள் வழங்கும் நிறுவனம் உள்ளது. மருத்துவ மனையிலிருந்து நீங்கள் வெளியேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Program | 2018-2019 | 2019-2020 | Difference |
|---|---|---|---|
| Ontario Works (Financial Assistance) | $2,822,185,900 | $2,525,869,200 | -$296,316,700 |
| Ontario Works (Employment Assistance) | $209,607,900 | $199,197,000 | -$10,410,900 |
| Ontario Disability Support Program (Financial Assistance) | $5,556,474,300 | $5,334,315,000 | -$222,159,300 |
| Ontario Disability Support Program (Employment Assistance) | $48,857,100 | $48,857,100 | 0 |

பொழுது, நீங்கள் வழமை போல் நடமாடுவதற்கான சேவைகளை இந் நிறுவனம் வழங்கிவருகின்றது. அத்துடன் முதியோர் நலனில் இந் நிறுவனம் அதிக அக்கறை காட்டி வருகின்றது. பல தமிழ் முதியோர் இந் நிறுவனத்தால் பல நன்மைகளை அடைந்து வருகின்றனர். பல தமிழர்கள் இந் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றனர். இந் நிறுவனத்துடன் தொடர்பு பட்ட நிறுவனங்களிலும் வேலை பார்க்கின்றனர். (Ontario health minister Christine Elliott tabled new health legislation-called the People's Health Care Act-which proposes the dissolution of 14 LHINs (which oversee home care and manage nursing home wait-lists at the local level) and the merger of six health agencies) இவர்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகளவில் குறைக்கப்படவுள்ளது. இதனால் பல முதியோர் தனியார் சேவைகளை நாட நிர்ப்பந்திக்கப்படவுள்ளார்கள். பல சேவைகள் நிறுத்தப்படவுள்ளன. பலர் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள்.

லிபரல் அரசு குறைந்த வருமானாம் பெறும் பெற்றோருக்கான பிள்ளைகள் பல்கலைக் கழகத்துக்குச் சென்றால், அவர்களுக்கு பல நிதியுதவிகளை வழங்கிவந்தது. கல்விக் கடனில் 50 வீதத்தை இலவசமாக வழங்கியது. இச் சலுகை நிறுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கான கல்விக் கடனையும் அதிகளவு குறைத்துள்ளது. இதனால் பல மாணவர்கள் அடுத்த ஆண்டிக்காற்கான கல்விக் கட்டணத்துக்கு பெற்றோரை நாட வேண்டியுள்ளது. மாணவர்கள் 21 வயது வரை, கல்விக் கடன் வழங்குவதற்கு பெற்றோர் வருமானம் கணக்கிலெடுக்கப்படும்.

ஒன்ராரியோவில் விசேட குழந்தைகளின் கல்விக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது. உயர் பாடசாலைக்கான நிதியும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பல ஆசிரியர்கள் வேலை இழக்க வேண்டிவரும். வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

ரொரன்ரோ கல்விச் சபை 68 மில்லியன் அரச நிதியை இழந்துள்ளது. இதனால் ரொரன்ரோ மாணவர்கள் பெருமளவு பாதிக்கப்படுவார்கள்.

குறைந்த வருமானம் பெறும் பெற்றோரின் குழந்தைகள் மற்றும் 25 வயதுக்குட்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இது வரை காலமும் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இனிமேல் அது இல்லை

ஒன்ராரியோ நூலகங்களுக்கான நிதி 50 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இனிமேல் புதிய தமிழ் நூல்கள் பெறமுடியாது. பல நூலக மாணவர்களுக்கான பயிற்சிகள் நிறுத்தப்படும். கோடை விடுமுறையில் மாணவர்களுக்கு குறைந்த செலவில் வழங்கப்படும் விசேட பயிற்சிகள் குறைக்கப்படும்.

யூன் ஆறாம் திகதியுடன் பீர் ஸரோருடனான பத்து வருட ஒப்பந்தம் அகற்றப்படுகின்றது. விரைவில் உங்களது வீட்டுக்கு அருகில் உள்ள பலசரக்கு கடையில் பீர் வாங்கலாம். பீர் ஸரோருடனான பத்து வருட ஒப்பந்தத்தை முறிப்பதன் மூலம், இந் நிறுவனத்துக்கு ஒரு பில்லியன் டொலர்களை ஒன்ராரியோ அரசு வழங்க வேண்டி வரும். பீர் ஸ்ரோர் Labatt, Molson , Sleeman ஆகிய மூன்று மிகப் பெரிய நிறுவனங்களுக்குச் சொந்தமானது. இந்த நடவடிக்கைக்கு எதிராக அமெரிக்க சேம்பர் ஒப் கொமேஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஒன்ராரியோவின் முன்னால் நிதி அமைச்சர் VicFedeli இதன் மூலம் பீரின் விலை குறையும். கியுபெக்கில் பீரின் விலை ஒன்ராரியோவை விட 8.3 சதங்கள் குறைவு எனத் தெரிவித்திருந்தார்.

பீர் விற்பனையை மூலைக்கு மூலை அதிகரிப்பது ஆரோக்கியமற்ற செயற்பாடு என பலர் கருத்து தெரிவிக் கின்றனர். உண்மையும் அதுவே.

மனநோயாளிகளுக்கான நிதி மிக அதிகளவு குறைக்கப்பட்டுள்ளது

இவற்றை விட

Cancelled:

- Funding for three university satellite campuses
- Labour reform (Bill 148)
- Rent control in new buildings, three provincial watchdog positions and more
- The Basic Income Project
- Changes to the sex-ed curriculum
- The cap-and-trade program
- The Green Ontario Fund
- $100 million in funding for school repairs

மேலதிக விபரங்களுக்கு

https://www.chatelaine.com/living/politics/doug-ford-cuts/

https://www.nationalobserver.com/2019/06/07/news/heres-everything-doug-ford-government-cut-its-first-year-office


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பாதுகாப்பு கட்டமைப்பு மாற்றங்கள்



ஜனகன் முத்துக்குமார்

மாலி (mali), ஒகஷாகு மனிதப்படுகொலையில் 161க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்ற செய்தி ஒரு புறம், இஸ்லாமிய ஆயுததாரிகளால் கைப்பற்றப்பட்ட மாலிப்படையினரின் கொலை, அதேபோல் மாலி பிரதமர் சவுமெயிலோ பௌபேய் மியாகாவினரி இராஜினாமா, அந்த நாட்டில் உண்மையில், மாலியில் ஐக்கிய நாடுகளின் பல மட்டத்திலான ஒருங்கிணைந்த உறுதிப்படுத்தலுக்கான திட்டம்தொடர்ச்சியாக இருக்கவும், அது தனது பகுப்பாய்வு, மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு என்பவற்றை பேணவும், அதன் காரணமாக, அது தன் செயல்பாட்டின் கட்டமைப்பிற்கு கணிசமான முன்னேற்றத்தை எதிர்பார்க்கின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, கனேடிய அரசாங்கம் அடுத்த மாதத்துக்கு அப்பால் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இந்த முயற்சியை விரிவுபடுத்துவதை நிறுத்துவதாகவும், அதன்படி, ஏற்கெனவே ஒப்புக்கொண்டதை மறுதலித்து, ஒரு ஆண்டு பணி இருப்பதற்கு முன்னதாக குறித்த பிராந்தியத்தில் தனது ஐக்கிய நாடுகளின் வின்கீழான செயல்பாட்டை குறைப்பதாக அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில்லிபரல்களின் வெற்றி மீண்டும் கனடாவை மீண்டும் அமைதிகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான யோசனையை முன்வைத்திருந்தது. துரதிர்ஷ்டவசமாக, எனினும், இந்த அமைதிகாப்பு பணியில் கனடாவின் பிரத்யேக ஈடுபாடு, இத்தகைய பயணங்கள் செய்ய 600 படைகளை உறுதிப்படுத்துவதில் இருந்த சிக்கல்கள், கனடாவின் பங்கைதொடர்ச்சியாகவே கேள்விக்குட்படுத்தியிருந்தது. மறுபுறத்தில், பல அரசியல் நிபுணர்கள் மாலியில் முன்னேற்றம் இல்லாமை மற்றும் வளங்கள் அடிப்படையில் ஒரு வலுவான அர்ப்பணிப்பு தேவை பற்றி தங்கள் கவலைகளை தெரிவித்தவண்ணம் இருக்கின்ற போதிலும்,கனடிய அரசாங்கம் அமெரிக்கா மற்றும் மேற்கைரோப்பிய நாடுகளை போல தொடர்ச்சியாக சர்வதேச பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய வகையில் அதன் உள்ளக அரசியல் மற்றும் வெளிவிவகார கொள்கைகள் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் இவ்வாறான வெளிவிவகார கொள்கைக்கு பல்வேறான சான்றுகள் உள்ளன. முதலாவதாக, கனடாவின் 2019 2020 க்கான தேசிய பாதுகாப்பு செலவீனத் திட்டங்களில் சர்வதேச பாதுகாப்புக்கான செலவீனங்கள் தொகையாக தீர்மானிக்கப்பட்ட தொகை மிகவும் குறைவானது. கனடா இக்காலகட்டத்தில் தனது தேசிய பாதுகாப்பை பொறுத்தவரை Operation LIMPID, REASSURANCE, and FOUNDATION ஆகிய மூன்று துறைகளிலேயே தனது பார்வையை செலுத்துகின்றது. அதன்படி, Operation LIMPID நிலம், கடல்வழி, விண்வெளி மற்றும் இணைய களங்கள் உட்பட நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள கூடிய விடயங்களை கனடாவின் பாதுகாப்பு மற்றும் இராணுவம் செயல்படுத்துவதற்கு குறிக்கின்றது. மத்திய கிழக்கு, வட ஆபிரிக்கா மற்றும் தென் மேற்கு ஆசியா ஆகிய நாடுகளில் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகளை மேற்கொள்வது, அது தொடர்பாக குறித்த அரசாங்கங்களுக்கு உதவி வழங்கல் தொடர்பில் FOUNDATION துறையும்,மற்றும்கிழக்குஐரோப்பாவில் நேட்டோவின் பிரசன்னத்தை சுமந்து செயல்படுவதற்கு REASURANCE துறையூடாகவும் கனடா முனைப்பை காட்டுகின்றது. இதை தவிர, கனடா தற்போது வேறெந்த பாதுகாப்பு துறையிலும் தனது பார்வையை திருப்பவில்லை, திருப்புவதற்கு தற்போதைய சர்வதேச அரசியல் நிலைமைகளை பொறுத்தவரை காரணங்கள் இல்லை என்பதனை ஒரு புறமாக உணரலாம்.

மறுபுறத்தில், கனடாவின் உள்ளக அரசியலை பொறுத்தவரை, மாலியில் பெருமளவிலான பாதுகாப்பு செலவீனங்களை மேற்கொள்வதை லிபரல், பழமைவாதக் கட்சியினர் ஒருபோதுமே பெருமளவில் விரும்பவில்லை. ஆயினும், ஆரம்ப நாட்களில் லிபரல் கட்சி தனது வெளிவிவகார கொள்கையை பழமைவாதக் கட்சியின் 10 ஆண்டுகால வெளிவிவகார கொள்கையில் இருந்து பிரித்துக்காட்டுவதற்காக பழமைவாதக் கட்சியின் விமர்சனங்களையும் தாண்டி மாலியில் பாதுகாப்பு செலவீனங்களை செய்திருந்தது. பழமைவாதக் கட்சி மாலியில் கனேடிய இராணுவம் நிலைகொள்வது ஒரு போருக்கான நடவடிக்கை என்றே வர்ணித்திருந்தது. ஆயினும்,இவ்வாண்டு கனடாவுக்கான அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் ஆண்டாகும். லிபரல், பழமைவாதக் கட்சிகளிடையே போட்டிநிலைமை உள்ள இந்நிலையில் கனடிய அரசாங்கத்தை அமைத்துள்ள லிபரல் கட்சி தொடர்ச்சியாக மாலியில் பாதுகாப்பு செலவீனங்களை மேற்கொள்ளல், அதன் காரணமாக பழமைவாதக் கட்சி அதை ஒரு தேர்தல் பேசுபொருளாக்குவதை விரும்பவில்லை.

மறுபுறம், ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கம்,நேட்டோ பாதுகாப்புக்காக எல்லா உறுப்புரிமை நாடுகளும் தங்களது பங்கை செலுத்தவேண்டும் என வலியுறுத்தியமை, கனடா தனது மொத்த வருமானத்தில் இரண்டை செலுத்தவேண்டிய நிலையில் உள்ளது. இது ஏற்கெனவே கரடுமுரடாக உள்ள அமெரிக்க கனடா வெளியுறவு கொள்கை சுமூகமான நிலைக்கு இட்டுச்செல்லும் என இரு பகுதியினரும் கருதுகின்றனர். இந்நிலையில், பாதுகாப்பு செலவீனங்களை மறுபுறங்களில் கட்டுப்படுத்துவதன் மூலமாகவே, கனடா நேட்டோவின் மேம்பாட்டுக்கு ஏற்கனவே வரையறுத்தது போல பாதுகாப்பு செலவீனங்களை 2023 இல் செலுத்த முடியும். இந்நிலையில் மாலியில் தொடர்ச்சியாக இராணுவ செலவீனங்களை மேற்கொள்ளுதல் கனடாவுக்கு அவசியமானது ஒன்றல்ல என்பதும் இன்னொரு காரணமாகும்.

இவற்றுக்கு மேலாக (மூன்றாவதாக), உலகளாவிய புவிசார் அரசியல் கனடாவின் மாலியில் தொடர்ச்சியாக இராணுவ செலவீனங்கள் செய்வதை நிறுத்துவதற்கு காரணமாகின்றது. பனிப்போருக்கு பிந்திய காலப்பகுதி, குறிப்பாக 9/11 பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின்னர் பிராந்திய மற்றும் சர்வதேச பயங்கரவாதத்தை ஒழிப்பதில் கனடா ஒரு முன்னோடியாகவே செயல்பட்டது.எனினும்,ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் உருவாக்கம், அது எவ்வாறாக அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய அமைப்புக்களை ஒன்றிணைத்து கனடா உட்பட பல மேற்கத்தேய நாடுகளில் தாக்குதல்களை மேற்கொண்டமையானது, பயங்கர வாதத்துடன் நேரடியாக போரிடுவதை காட்டிலும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் அவசியமானது என்ற கொள்கைக்கு கனடா உட்பட பலநாடுகள் வந்துள்ள இந்நிலையில், கனடாவை பொறுத்தவரை, தொடர்ச்சியாக இராணுவ செலவீனங்களை செய்தல் கனடாவுக்கு தேவையற்ற ஒன்றெனவே கனடாவின் இராணுவ வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

மேலும், ஆர்க்டிக் பிராந்தியத்தில் கனேடிய இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்கான அவசரநிலை மீண்டும் தோன்றியுள்ள நிலையிலும், பனி உருகும் மற்றும் புதிய வர்த்தக வாய்ப்புகள் ஏற்படுகையில்,வளங்களை அணுகுவதற்கான போட்டி மற்றும் வர்த்தக வாய்ப்புகள் இப்பகுதியை மேலும் இராணுவமயமாக்கலாம் என்ற நிலைமையிலும், உண்மையில், ஆர்க்டிக்கில் பல நாடுகளும் ஏற்கனவே தங்கள் இராணுவ நிலைகளை ஏற்படுத்த முயலுகின்ற நிலையிலும் கனடா தொடர்ச்சியாக அதிகப்படியான இராணுவ செலவீனங்களை முதலீடு செய்வதற்கு தேவைகள் அதிகரித்ததாகவே இருக்கின்றது.

இவ்வாறான கனேடிய இராணுவ மற்றும் அரசியல் நகர்வுகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலேயே மாலியிலிருந்து கனடா வெளியேறல் தொடர்பான நிலைமை பார்க்கப்பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

# Low Income?

## If Bank says NO NO

## Sathy Bagee Says

# YES YES

**Your Mortgage Expert**

**Sathy** Bagee
VP Business Development
Mortgage Agent
Fisco Licence # M 16002389

**416 821 4512**



MORTGAGE ALLIANCE
Fichi
Licence # : 12939

sathy.b@fichifinancial.ca
www.fichifinancial.ca

**condition may apply under the guideline of the lenders.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இகுருவி நடத்திய "இனவழிப்பு" கருத்தரங்கு



**மயூரன் செல்வகுமார்**

இகுருவியின் ஏற்பாட்டில் மே 18 தமிழினப்படுகொலை தொடர்பான வருடாந்த நினைவேந்தலின் ஒரு பகுதியாக இவ்வாண்டு இகுருவி இரண்டு நாள் நிகழ்வுகளில், முதலாம் நாள் இனவழிப்பு (Genocide) தொடர்பான ஓர் கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தது. தமிழ் ஊடக வரலாற்றிலேயே இதுவே முதல்முறை என சொல்லக்கூடிய வகையில் இனவழிப்பு அது தொடர்பான சமகால சமூக, சட்டரீதியான மற்றும் அரசியல் ரீதியான பார்வைகள், குறிப்பாக தமிழ் சமூகம் எவ்வாறாக மே 18 இனவழிப்பை அடுத்த சந்ததியினருக்கு புரியச்செய்தல் அது தொடர்பான விழிப்பூட்டலை மையமாக கொண்ட ஒரு கருத்தரங்காக அது அமைந்திருந்தது. ஈழத்து அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், பேராசிரியர் சேரன் ருத்திரமூர்த்தி, சர்வதேச சட்ட ஆய்வாளர் ஜனகன் முத்துக்குமார், கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி மற்றும் வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் உரையாற்றியிருந்த குறித்த கருத்தரங்கை லங்காதாஸ் பத்மநாதன் அவர்கள் தொகுத்து வழங்கியிருந்திருந்தார்.

குறித்த கருத்தரங்கில் முதலாவது பேச்சாளராக வல்வை ந.அனந்தராஜ், தனது 'வல்வைப் படுகொலை' என்ற நூலாக்கம் 1989 - 2019, 30 ஆண்டுகள், வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் புரிந்திருந்த படுகொலைகள், அதிலிருந்து தப்பி இந்தியா சென்று குறித்த படுகொலையை பின்னர் ஒரு சாத்தியக்கூற்று நூலாக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியமை, அதற்கு இந்திய பின்னைநாள் பாதுகாப்பு அமைச்சர் முன்னுரை வழங்கியது பற்றியும், வரலாற்றுக்களை ஏன் தொடர்ச்சியாக பேணவேண்டும், எவ்வாறாக அதை அடுத்த சந்ததியினருக்கு கடத்தவேண்டும் என்பது பற்றி குறிப்பிட்டிருந்தார்.

ஜனகன் முத்துக்குமார், சர்வதேச சட்டத்தில் இலங்கையின் படுகொலை பற்றி கருத்து தெரிவித்திருந்தார். தனது உரையில் ஏன் சர்வதேச சமூகம் இலங்கை படுகொலை நடைபெற்றபோது ஒரு மனிதாபிமான இராணுவ தலையீட்டை செய்யவில்லை, அத்தலையீடுகள் செய்வதற்கு எதிராக நின்ற சட்ட மற்றும் கொள்கை ரீதியான காரணங்கள் பற்றியும், இலங்கையில் நடைபெற்ற குற்றச்செயல்களை ஒரு இனப்படுகொலை என வாதிடுவதில் உள்ள சட்ட சிக்கல்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்திருந்தார்.

அவரைதொடர்ந்துபேசியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள், அவற்றில் எவ்வாறாக இலங்கையை சர்வதேச ரீதியில் குறித்த மே 2009 படுகொலைகள் தொடர்பாக ஒரு விசாரணையை மேற்கொள்ள அழுத்தம் கொடுத்தல், அதில் புலம்பெயர்ந்தோரின் பங்கு பற்றி சில குறிப்புக்களை மேற்கொண்டிருந்திருந்தார்.

பேராசிரியர் சேரன் அவர்கள், இனப்படுகொலையை வரையறுப்பதில் உள்ள சிக்கல்கள், குறிப்பாக இலங்கை மற்றும் ருவாண்டா படுகொலைகள் எவ்வாறாக ஒன்றோடொன்று ஒத்துப்போகின்றன சர்வதேசம் எவ்வாறாக நடவடிக்கைகளை இரு நிலைமைகளிலும் மேற்கொண்டிருக்க வேண்டும் என வாதிட்டார்.



நிலாந்தன் அவர்களின் பேச்சு, மே 2009க்கு பின்னர் தமிழ் அரசியல் எவ்வாறாக உள்ளது, ஏன் மாற்று அரசியல் ஒன்று ஜனநாயகம் ஒன்றில் தமிழ் மக்களுக்கு தேவையான ஒன்றாகும், மாற்று அரசியலை தமிழர்கள் இதுவரை எவ்வளவு தூரம் ஏற்றுக்கொன்றுள்ளனர் என கருத்துரை வழங்கியிருந்தார்.



குறித்த கருத்தரங்கானது தமிழர் தரப்பிலுருந்து கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு விடையளிப்பதாக இருந்தமை, தமிழர் தரப்பில் புலம்பெயர் தமிழர்கள் ஆக்கபூர்வமான கருத்தாடலை செய்ய தயாராக இருப்பதை கோடிட்டு காட்டியது. குறித்த கருத்தரங்கு எவ்வளவிற்கு விடைகளை, விளக்கங்களை அளித்ததோ, அதே அளவுக்கு புதிய கேள்விகள், புதிய யதார்த்தங்களை கண்டறிதல், அவற்றுக்கு முகம்கொடுத்தல், சர்வதேச தரப்பில் தொடர்ச்சியாக தமிழர் விடுதலை தொடர்பாக பேச்சுக்களை நாடாத்துதலின் தேவையையும் பறைசாற்றியிருந்தது. புலம் பெயர் தமிழர்கள், தொடர்ச்சியாக ஈழத்தமிழரின் வாழ்வில் முன்னேற்றங்களை மற்றும் அவர்களுக்கான உரிமைகளை நிலைநாட்ட சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் இந்நேரத்தில், குறித்த கருத்தரங்கானது ஒரு காலத்தின் தேவை என்பதில் கடுகளவேனும் சந்தேகம் இல்லை.







YouTube

இந்நிகழ்வின் காணொளிகளை biztha மற்றும் ekuruvi இணையத்தளங்களிலும், மற்றும் Youtube இலும் பார்வையிடலாம்

http://www.biztha.com/video/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட் கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE

**T. NESAN**
**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |

## 1st Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('B', 'D' lender) Private, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

## WE DEAL WITH ALL BANKS

TD Canada Trust · Scotiabank · Street Capital Bank of Canada · radius financial · First National Financial LP · Equitable Bank · Home Trust · B2B Bank · RMG · MCAP

SUBRA MORTGAGE FINANCIAL

mortgage@nesan.ca
www. nesan.ca

Mortgage Alliance
Brokerage # 10530
* Independently Owned and Operated

1585 Markham Rd, Unit # 407, Toronto, ON. M1B 2W1
Office: 1-844-878-2721| Fax: 647-351-3099



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொரன்ரோ Raptors



ஆனி 13ம் நாள் கனடா மக்களால் மறக்க முடியாத ஒரு நாள். ரொரன்ரோ ரப்றேர்ஸ் கூடைப்பந்தாட்ட அணி, தேசிய கூடைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்று சம்பியனானது. 1993ல் மொன்றியல் கனடியன்ஸ் அணியினர் தேசிய ஹொக்கி லீக்கின் சம்பியனாகி ஸ்ரான்லி கிண்ணத்தை சுவீகரித்தனர். அதன் பின்னர் மிக முக்கிய தேசிய போட்டி ஒன்றில் கனடிய கழகம் வெற்றி பெறுவது இதுவே முதல் தடவை. சுமார் 26 ஆண்டுகளின் பின்னர் பெற்ற வெற்றி இது.

1994ல் வன்கூவர் கனக்ஸ் ஹொக்கி அணியினர். 2004ல் கல்கறி பிளேம்ஸ் அணியினர், 2006ல் எட்மண்டன் ஒயிலேர்ஸ் அணியினர், 2011ல் வன்கூவர் கனக்ஸ் அணியினர் ஸ்ரான்லி கிண்ண இறுதிப் போட்டியில் தோல்வியடைந்துள்ளனர்.

ரொரன்ரோவைப் பொறுத்தவரை 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக ரொரன்ரோ புளூ ஜேய்ஸ் அணியினர் தேசிய பேஸ் போல் கிண்ணமான வேர்லட் சிரீஸ் கிண்ணத்தை சுவீகரித்துள்ளனர். 2017ல் ரொரன்ரோ உதைபந்தாட்ட அணி Major League Soccer கிண்ணத்தை வெற்றி கொண்டது. ரொரன்ரோ மேப்பிள் லீப் ஹொக்கி அணி 1967ன் பின்னர் ஸ்ரான்லி கிண்ணத்தை வெற்றி பெறவில்லை.

1995ம் ஆண்டு தேசிய கூடைப்பந்தாட்ட கழகம் National Basketball Association (NBA) தன்னை விரிவுபடுத்தும் நோக்குடன் ரொரன்ரோ மற்றும் வன்கூவர் நகரங்களில் புதிய கழகங்ளை தோற்றுவித்தது. 2001-2002 ம் விளையாட்டாண்டில் வன்கூவர் அணி அமெரிக்க நகரமான Memphis, Tennessee க்கு நகர்ந்தது. இதற்கான பிரதான காரணம். வருமானம் மற்றும் கூடைப்பந்தாட்ட ரசிகர்களின் எண்ணிக்கை குறைவானதுமாகும். ரோரன்ரோவைப் பொறுத்தவரை ஒரு வித்தியசமான விளையாட்டு ரசிகர்கள் உள்ள நகரம். மேப்பில் லீப் அணியினர் தொடர்ச்சியாக தோல்வியடைந்தாலும், அவர்களது போட்டிகளைக் காண ரசிகர்கள் கூட்டம் அலை மோதும். இலங்கை கிரிக்கெட் அணியைப் போல். தொடர்ச்சியாக தோல்வியடைந்தாலும் ரசிகர்கள் கூட்டம் அலை மோதும். ஒரே அணி, ஒரே தேசம், ஒரே தோல்வி .

ரொரன்ரோ ரப்றேர்ஸ் அணியும் படிப்படியாக தம்மை வளர்த்துக் கொண்டார்கள். பல மாற்றங்கள், புதிய, புதிய பயிற்சியாளர்கள். விளையாட்டு வீரர்கள். 1998ல் ரப்றேர்ஸ் அணியினரை Maple Leaf Sports & Entertainment Ltd. (MLSE) வாங்கினர். இந் நிறுவனத்தின் பங்கு தாரர்களாக Rogers Communications (37.5%) BCE (37.5%) BCE Inc. (28%) BCE Master Trust Fund (9.5%) Kilmer Sports (25%) உள்ளனர். இந் நிறுவனத்தின் கீழ் ரப்றேர்ஸ் அணியுடன், மேப்பிள் லீப்ஸ், ரொரன்ரோ உதைபந்தாட்ட அணி, Toronto Argonauts போன்ற கழகங்களும் உள்ளன. இவர்கள் விளையாட்டின் மூலம் வியாபாரம் செய்பவர்கள். இதனால் வெற்றிகள் பணத்தை அள்ளித் தரும் என நம்பினார்கள். அதற்காக திட்டமிட்டார்கள். ஹொக்கி எப்படியாயினும் பணம் தரும். எனவே கூடைப்பந்தாட்ட அணியை படிப்படியாக சீரமைத்தார்கள்.

2018ல் உதவி பயிற்சியாளராக நீண்ட காலம் கடமையாற்றிய நிக் நேர்சை பயிற்சியாளராக மாற்றினார்கள். உடனடியாக பலன் கிடைத்தது.

Kawhi Leonard2, Kyle Lowry, Marc Gasol, Pascal Siakam, Kyle Lowry ஆகியோரின் திறமையான விளையாடும் திறன் ரொரன்ரோவிற்கு தொடர்ச்சியான வெற்றியை கொடுத்தது.

கடந்த வருட விளையாட்டு ஆண்டில் சிறந்த பயிற்சியாளராக தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளரை மாற்றி, புதிய பயிற்சியாளரை கொண்டு வந்த அணி முகாமைத்துவமும் இவ் வெற்றிக்கு பிரதான காரணம். இவ் வெற்றியானது கனடாவில் கூடைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு வித்திடும் எனக் கருதப்படுகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணனின் விண்வெளி தொழில்நுட்பத்துக்கு கிடைத்த கௌரவம்



**இராவணா-1 செய்மதி ஆற்றப் போகின்ற பணிகள் எவை?**

இலங்கையைச் சேர்ந்த இருவரால் வடிவமைக்கப்பட்ட செயற்கைக் கோளான 'இராவணா-1, சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து கடந்த வாரம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.இச்செய்மதி விண்ணில் நிலைநிறுத்தப்பட்டமை இலங்கையைப் பொறுத்தவரை விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் பெரு வெற்றியாகக் கருதப்படுகிறது.

இலங்கை நேரப்படி ஜூன் 19, மாலை 3.45 மணியளவில் இராவணா-1 வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து 400 கிலோமீட்டர் தூரத்தில் 'இராவணா-1' செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கையைச் சேர்ந்த இருவரின் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்ட 'இராவணா-1' செய்மதி கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவப்பட்டிருந்தது.

தரிந்து தயாரத்ன மற்றும் துரனி ஷாமிகா ஆகிய இரண்டு இலங்கையர்களால் தயாரிக்கப்பட்ட 'இராவணா-1' செய்ற்கைக்கோள் கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட 'இராவணா-1செய்மதியுடனானராக்கெட், அமெரிக்காவின் வேர்ஜினியாவிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அதிகாலை, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சிக்னுஸ் (Cygnus) என்றழைக்கப்படும் பொட்களுடனான ராக்கெட் மூலம் இந்த 'இராவணா-1 செயற்கைக்கோள் நாசாவினால் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

'பார்ட்ஸ்-3 திட்டம்' என்ற பெயரில் இந்ததிட்டம்முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை, ஜப்பான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் இணைந்து மூன்று சிறியரக செயற்கைக்கோள்களை விண்ணுக்கு ஏவியிருந்தன.சிறிய ரகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோளுக்கு மிகவும் குறைந்தளவிலான நிதியே செலவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

11.3 cm X 10cm X 10cm அளவைக் கொண்டமைந்துள்ள இந்த செயற்கைக்கோள், 1.05 கிலோகிராம் எடையை கொண்டமைந்துள்ளது.

இந்த செயற்கைக்கோளின் ஆயுட்காலம் ஒன்றரை வருடம் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஐந்து வருடங்கள் அதன் பயன்பாட்டை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராவணா-1 செயற்கைக்கோளின் பயன்பாடுகள்தொடர்பாகசிலவிபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் அதனை அண்மித்துள்ள நாடுகளின் புகைப் படங்களை பதிவு செய்தல் உள்ளிட்ட பல பயன்பாட்டு திட்டங்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆர்தர் சீ கிளார்க் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சனத் பனாவென்னவின் யோசனைக்கு அமைய இந்த செயற்கைக்கோள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு 'இராவணா-1' என பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இராமாயணத்தில் வரும் இராவணனின் விண்வெளி தொழில் நுட்பத்தை உலகிற்கு வெளிப்படுத்தும் நோக்குடன் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை விண்வெளி மையம் அறிவித்துள்ளது.

இராமபிரானின் மனைவியான சீதாபிராட்டியாரைஇலங்கைவேந்தனான இராவணன் புஷ்பக விமானத்தில் கவர்ந்து சென்றதாக இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. அக்கால இலங்கை வேந்தன் இராவணன் விண்வெளி தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கினான் என்பதேஇதன் அர்த்தமென்று அறிஞர்கள் வாதிடுகின்றனர். எனவே 'இராவணா' என்றபெயர்இச்செய்மதிக்குபொருத்தமாக அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# சமகால நோக்கில் ஆற்றுப்படுத்தல் ஆரோக்கியமானதாக உள்ளதா ?

**நிலவன்**



உள ஆரோக்கியம் சீர்குலைந்து புரியப்படும் பாதகச் செயல்களிலிருந்து உளவளத்துணை பற்றிய விழிப்புணர்வும் அது பற்றிய அறிவும் நமக்கு இன்றியமையாததாகும். இலங்கையின் சனத்தொகையில் 2.3 வீதமானோர் உளப் பிரச்சினையுடன் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் கூட்டாக இழைக்கப்பட்ட பாலியல் மற்றும் பால்நிலைசார் வன்முறைகள் பற்றிய அறிக்கையிடல் மற்றும் ஆவணப்படுத்தலுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. மன ரீதியாக அவர்கள் பாதிக்கப்பட்டதை ஒரு உளவள ஆலோசகராக என்னால் இனங்காண முடிந்தது.

இன்று நாட்டில் சமூக மட்டத்தில் பல்வேறு விதமான உளசமூகப் பிரச்சனைகள் எம்மத்தியில் காணப்படுகின்றன. போருக்கு பின்னரான,வடக்கு, கிழக்கின் சமூகப் அபிவிருத்தியில் கல்வி,பொருளாதாரம் என்பன பெருவீழ்ச்சியைக் கண்டுள்ளன. இவ்வாறு பல்வேறு மட்டங்களில் பல்வேறு தரப்பினருக்கு நிகழுகின்ற வன்செயல்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகள் மற்றும் தற்கொலைகள் போன்ற சமூக பிரச்சினைகளில் உளப் பாதிப்புக்களும் குறித்த வகிபங்கினை வகிக்கிறது. சில பிரச்சினைகளை பார்க்கும் போது அவை மிகவும் ஆழமாக இருந்தது. உளநலப் பிரச்சனையின் தாக்கம் உடன் வெளிக்கொணரப்படுவதில்லை. அன்றாட செயற்பாடுகளைச் செய்ய முடியாமல் அல்லது செய்வதில் இடர்களை எதிர்நோக்கு கின்றவர்கள் உளவளத் துணையாளர்கள் அல்லது மனநல வைத்தியரை நாடி தமக்குத் தேவையான உதவியை அல்லது சிகிச்சையினை பெற்றுக்கொள்வது அவசியம் .

உளநலப்பணிகளுடன் பயிற்சிகளையும்வழங்குகிபலநிறுவனங்கம்இந்தஉளச் சமூகப் பணியினைச் செய்கின்றார்கள். ஆனால் அங்கு பணிபுரிகின்றவர்களுக்கு போதுமான துறைசார் அறிவு உள்ளதா என்பது கேள்வி ? அது ஒருபுறம் இருக்க நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்புக்கள் வியாபாரமாக உளவளத்துணையாளர் ஆவதற்கான டிப்ளோமா கற்கை நெறியினை ஆரம்பிகத்துள்ளதும் ஒரு கட்டமைக்கப்பட்ட பெறிமுறை இல்லாது தொடரும் உளவளத் துணையாளருக்கும் சேவைநாடிக்கும் இடையில் நிலவும் உறவானது தொழில்வாண்மையிலான உறவாகவே காணப்படமை. உளவளத்துணையாளர் துணைநாடியின் மீது சிகிச்சையளித்தல் தவறான சிகிச்சை முறைகளும் மேலும் எமது சமூகத்தில் தாக்கத்தினை எற்படுத்தி வருவது வருத்தம் தரும் செயல்.

தமிழ் மக்களின் உரிமைக் குரலை உயர்த்தி நிற்க மக்களுடைய வாழ்வியல் உரிமை, அரசியல் உரிமை எவ்வாறு பறிக்கப்பட்டன என்பது குறித்தும், பேரினவாதத்தினுடைய அடிப்படைச்சிந்தனை உளவியல் குறித்தும் மரணங்களும், பேரவலங்களும் வன்முறை மற்றும் அடக்குமுறைச் சூழல் சிதைந்துகிடக்கும் சமூகவிழுமியம் இனம் அழிக்கப்பட்டமைக்கான காரணங்களை கண்டறிவதற்கு உளநலன் சார்ந்த பிரச்சினைகளை தீர்த்து வலிமையான சமூகக்கட்டமைப்பை உருவாக்கும் ஆலோசனை வழங்குதல் போன்ற பல செயல்திட்டங்கள் மூலம் எமது சமூகத்தை மனோதிடமான ஒரு சமூகமாக உருவாக்கிட உளம்சார் திறன்களையும் வளங்களையும் பகிர்ந்து கொள்கின்ற எங்களது இளைஞர், யுவதிகளை உளவள சேவையில் தொழில்ரீதியாக ஈடுபடுபடுவது மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் தொழில்வாண்மை உளவளத்துணையாளர்களின் உதவி இன்றியமையாததாகவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் உளவியல் காயங்களிலிருந்து மீண்டெழ வேண்டும். நாளைய சமுதாயத்தின் மீது பற்றுக்கொண்டு இளைய தலைமுறைக்கு வழிகாட்டியாக சமூகப் பணிக்கு தயார் செய்வது அவசியம் எம் ஒவ்வொருவருக்குமுள்ள கடப்பாடாகும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை ஏற்படுத்தப்பட வேண்டிதிட்டமிடலின் அடிப்படையில் உளவியல் காயங்களை ஆற்றுப்படுத்த வேண்டியதேவையுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவாத கண்ணீர் நினைவுகள்

சுகந்தினி. தெ

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் & கிளிநொச்சி மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் சங்க அங்கத்தவர்



ஊர் எல்லாம் வெடிச்சத்தம். குண்டுகள் விழுந்து வெடிக்கும் சத்தங்கள். சுப்பர்சொனிக். வேவு விமானம். இரவுகளில் அமைதியான நேரம் பரா வெளிச்சம் போட்டு குண்டு மழை பொழியும் கிபிர் விமானங்கள். நிம்மதியான உறக்கமற்ற வாழ்க்கை. நேரகாலமின்றி தமிழர் குடிமனைகளின் மேல் தாக்குதல். பாடசாலை, வேலைத்தளங்கள், வீடுகள் என எல்லோரும் பதுங்குகுழியில். எல்லோர் மத்தியிலும் மரணபயம். என்ன நேரத்தில் யாருக்கு, என்ன, எப்பிடி நடக்கும் என்ற சிந்தனைக் குழப்பத்துடன் நமது வாழ்க்கை.

கிளிநொச்சியிலும் ஷெல் மழை தொடங்கியது. நாங்களும் 2008ம் ஆண்டு இடம் பெயர்வுக்குத் தயாராகி வாகனம் தேடிக்களைத்து விட்டோம். ஒரு போராளி அண்ணாவின் உதவியுடன் ஒருவாறு கண்டாவளையில் எமது பொருட்களுடன் குடியமர்ந்து 25 நாட்கள் கூட இல்லை. மீண்டும் குண்டு மழைத்தாக்குதல். கண்டாவளையில் இருந்து தர்மபுரம் சென்றோம். ஒரு சில நாட்களே அங்கே வாழ்ந்தபோது காலை 9 மணிபோல் ஷெல்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கூவும் சத்தம். நாம் இருக்கும் இடத்தில்தான் விழும் என்ற நினைப்பும் குண்டுகளின் விசிறிகள் சுழலும் சத்தத்திலும் எம் உயிரே எம்மிடம் இல்லாத பயங்கர உணர்வு. எனது அண்ணாவிற்கு நான்கும் சின்னப் பிள்ளைகள். எல்லோரும் வீதி வழியாகச் செல்கிறோம். ஒரே அழுகுரல்கள். காயப்பட்ட நிலையில் விடுதலைப்புலிகள் தம்மையும் பார்க்காமல் மக்களை ஏற்றுவதில் கவனமாக இருந்தார்கள். ஒருவாறு மூங்கிலாறு சென்று அங்கே இருந்தோம். அண்ணாவின் நண்பர் ஒருவரின் மனைவியும் பெண் பிள்ளைகளும் அன்றைய ஸீ~ல் வீச்சில் இறந்ததைக் கேட்டதும் நெஞ்சு கனத்தது. நாம் எத்தனை உறவுகளைத்தான் இன்னும் இழக்கப்போகிறோம் என்ற பெருமூச்சுடன் இருந்தோம். எல்லா மக்களும் புலம்பினார்கள். இங்கே எத்தனை நாள் இன்னும் வாழப் போகிறோம் என்று பேசிக்கொண்டே கலைந்து சென்றார்கள்.

மீண்டும் மூங்கிலாறில் இருந்து இருட்டுமடு. இருட்டுமடுவில் எனது குடும்பத்தை விட்டு நான் வெளியில் வந்து விட்டேன். அங்கும் விமானத் தாக்குதல் நடக்க சுதந்திரபுரம், தேவிபுரம் தாண்டி இரணைப் பாலைக்குள் எனது குடும்பத்தினர் சென்றுவிட்டனர். நான் மீண்டும் வந்தபோது குண்டுகளுக்கு நடுவில் படுத்துப்பதுங்கி நாதியற்று என் குடும்பத்தைத் தேடி ஒருவாறு அவர்கள் இரணைப்பாலையில் இருப்பதாகத் தகவல் அறிந்தேன்.

என்னைக்கண்டதும் அவர்கள் ஓலமிட்டு அழுதார்கள். பங்கருக்குள் இருந்த அண்ணாவின் பிள்ளைகள் என்னைக் கண்டதும் நிறையத் தூரம் நடந்து கால்கள் நோவதாகச் சொன்னார்கள். 5 வயதான மருமகள் தனக்கு கோவா சமைத்துத் தரும்படி கேட்டாள். நான் எங்கபோய் கோவா வாங்குவேன்? வெங்காயத்தாள்தான் அதிகம் விற்பார்கள். மீனும் பருப்பும்தான் எமது கறிகள். சிறுவர்கள் வேறு உணவுகள் கேட்டால் பிறகு வாங்கலாம் என்று சொல்லிச்சமாளிப்போம்.

இன அழிப்பிற்குப் பயந்து பிஞ்சுக் குழந்தைகளுக்காக பதுங்குகுழிகள் ஆழமாக அமைத்தால் தண்ணீர் மேல் நோக்கி வரும். தறப்பாளைப் போட்டு அதற்கு மேல் துணிபோட்டு குழந்தைகளைப் படுக்க வைத்த குடும்பங்கள் எத்தனை? என் அண்ணாவின் நான்கு பிள்ளைகளும் குளிர்கிறது என்று சொல்லிக் கொண்டே தண்ணீரின் மேல் போட்ட தறப்பாளில் படுப்பார்கள். இவ்வாறு கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்த குடும்பங்கள்தான் எத்தனை? இக்குடும்பங்கள் வாழ்ந்த பதுங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழிகள் மேல் குண்டுகள் விழுந்து குடும்பமே இறந்தால் யார் இருப்பார்? அவர்களோடு யார் நிற்பார்;கள்? மீறி நிற்பவர்களின் உயிர்களுக்கு அடுத்த கணம் உத்தரவாதம் இல்லை. இத்தனை குண்டு மழையிலும் விடுதலைப்புலிகள் பதுங்கு குழிகளுடன் இறந்தவர்களை மூடிப் புதைத்துவிட்டு வந்த சம்பவங்கள் எத்தனை?

மீண்டும் இடம் பெயர்ந்து பச்சைப்புல்மோட்டைப் பகுதியில் இருந்தோம். பக்கத்தில் சிறுகுளம். இதில்தான் எல்லோரும் குளிப்பார்கள். மாடுகள் பகலில் தண்ணீர் குடிப்பதும் இதில்தான். நான் இரவுநேரம் குளிப்பது வழமை. மறுநாள் 2009 ஜனவரி மாதம் இரவு 7.30 இருக்கும். ஒரு பாரிய சத்தம் கேட்டது. அதன் பின்பு பல தடவை வெடிக்கும் சத்தம் கேட்டது. வானத்தில் வெளிச்சம். மனங்களில் குழப்பம். விடியலில் ஆவலாக செய்திகள் கேட்பது வழமை. நாட்குறிப்பு எழுதுவதும் வழமை. நேற்று இரவு வெடித்த குண்டு கொத்துக்குண்டாம். பலரது வாய்களிலும் அதுவே பெரிய கதையாக இருந்தது.

வானம் இருண்ட நிலை. மௌனமாக இருக்கும் மரங்களில் பறவைகளின் சத்தம் பலவகை. இதனூடே கிபிர் வரும் சத்தம் பதுங்கு குழியை நோக்கி எல்லோரையும் பாயவைத்தது. கிபிரின் இரைச்சல் நெஞ்சு வெடிக்கும் அளவுக்கு இருந்தது. நான்கு கிபிர்களும் ஒரே நேரத்தில் விடுதலைப்புலிகளின் பயிற்சிப் பாசறைக்கும் பெற்றோல் சேமித்து வைக்கும் இடத்திலும் குண்டுகள் போட்டன. சற்றுநேரம் மௌனம். மீண்டும் அழுகுரல்கள். காயப்பட்ட நிலையில் பிள்ளைகள் ஓடிவந்தார்கள். இதன்போது காயப்பட்டவர்கள் பலர், இறந்தவர்களும் பலர். என்னுடைய இடத்திற்கும் மூன்று பெண் பிள்ளைகள் ஒடி வந்தார்கள். என்னிடம் இருந்த மருந்துகளைக் கொண்டு காயங்களைக் கட்டினேன். அவர்களின் குடும்ப விபரங்கள் திரட்டி மீண்டும் அவர்களை அவர்களுடைய குடும்பத்துடன் இணைத்துவிட்ட மன நெகிழ்வுடன் தூங்கினேன்.

எங்களுடைய ஊர்கள் முழுமையாகவே யுத்த பிரதேசமாக மாறிப்போய் இருந்தன. விடுதலைப்போர் வரலாற்றின் ஆரம்பத்தில் இருந்து 1988இல் இந்திய இராணுவம் வந்த போதும் ஊரை விட்டு ஓடிய எமது குடும்பம் இன்றுவரையும் ஓடுவது மீண்டும் வாழிடம் வருவோம் என்ற நம்பிக்கையில் தான். ஆனால், இம்முறை எங்கள் ஒவ்வொருவர் மனதிலும் சாவின் விளிம்பில் நிற்பதான உணர்வு. எமது போராட்டம் என்னவாகும் என்ற கேள்வி. மக்கள் வகை தொகையின்றி அழிவதைச் சர்வதேசம் இப்படிப் பாத்துக்கொண்டிருக்காது, எம்மைக்கை விடாது என்று நம்பிக்கொண்டிருந்தவர் பலர்.

இராணுவம் தமது பாதுகாப்பு வலயம் என அறிவித்த இடங்களான மாத்தளன், பொக்கனை, வலைஞர்மடம் என என்தேசமே இருண்டு போன அவல நிலை. இரத்தம், தசைப்பிண்டங்கள் பிணக்குவியல்கள். வெறுத்துப்போன கசப்பான பயணங்கள். பயணங்கள் பழகிப்போனதும் பசிக்காக அழுவதா அல்லது எம் பிள்ளைகளின் உயிரை எப்படிக் காப்பது என நடப்பதா அல்லது

**ஆயுதப் போராட்டம் மௌனித்த பின் உரிமைப் போராட்டத்தை வைத்து அரசியல் செய்யும் கட்சிகள் பல. பத்து வருடங்கள் கழிந்த பின்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்ன செய்தார்கள் என்ற கேள்விக்கு யாரிடமும் பதிலில்லை. எப்போது இவர்களெல்லாம் ஒன்றாக நின்று தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கப் போகிறார்கள்?**

இறந்துபோன உறவுகளுக்காக அழுவதா அல்லது இதற்குப்பின் தமிழரின் நிலை என்னவென்று அழுவதா? நடக்க சக்தியற்றவர்களாக நடக்கிறோம். கந்தகப்புகையில் கறுப்பாகவே தெரிந்தது என்தேசமும் கூடத்தான்.

பதுங்குகுழி அமைப்பதும்; மூன்று தடிகள் வைத்துக்கொட்டில் போடுவதும் வழமையாகிப்போக மீண்டும் பொக்கணையில் குடியேறினோம். மாலை 3 மணி இருக்கும். ஒன்றன் பின் ஒன்றாக பிள்ளையார் கோயிலைச்சுற்றி குண்டுகள் விழுந்து வெடித்தன. சதைத்துண்டங்கள், தலை, ஈரல் என உடற்பாகங்கள் ஆங்காங்கே வேலிகளில் தொங்கின. இதைப்பார்த்த சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். பல உடல்கள் சிதறியும் காயப்பட்ட நிலையிலும் இருந்தன. மாத்தளன் வைத்தியசாலையில் இறந்த உடல்களின் மீது இலையான்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. குண்டுகள் பொழிந்து மாத்தளன் கடற்கரையோரத்தில் குடும்பம் குடும்பமாக மக்கள் இறந்து கொண்டிருந்தனர்.

இராணுவ வலையமைப்பு என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் பால், மாஉருண்டை, இலைக்கஞ்சி காய்ச்சிக்கொடுத்தார்கள். அதை நான் கடந்து போவது வழமை. அன்று அங்கே குண்டு மழை பொழிந்து ஓய்ந்ததும் எழும்பிப்பார்த்தேன். பாலகர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் ஏனைய சிறுவர்கள் எல்லாம் உடல் சிதறிப் பலியானார்கள். இவர்கள் என்ன பாவம் செய்தார்கள். கனத்த இதயத்துடன் உறவினர் ஒருவருடன் வெளிநாட்டுப்பணம் எடுத்துக்கொடுக்க வலைஞர்மடம் சென்றபோது கொத்துக்குண்டு அடித்தார்கள். ஊரிலுள்ள கடவுள்களை எல்லாம் கும்பிட்டுக்கொண்டே விழுந்து படுத்தோம். பலர் இறந்திருந்தனர். என்னுடன் வந்த உறவினருக்கு சிறிதாகக காயம். வீடு திருப்பியதும் சுகயீனமுற்றிருந்த என் தந்தையை கப்பலில் அனுப்புவதற்காக கடற்கரையால் நடந்தும் ஓடியும் பொக்கணையில் இருந்து மாத்தளன் வந்தோம்.

பிட்டு, இடியப்பம், தோசை இவைகளை எல்லாம் கண்டு வாரங்களான நிலையில்; பொரித்த ரொட்டியும் சுசியமும் பால் இல்லாபருப்புக்கறியும் எமக்கு உணவாகக்கிடைத்தன. பிள்ளைகள் பசியில் அழுதால் 300ரூபாவிற்கு நான்கு சுண்டு அரிசி வாங்கிச் சமைக்கும் நிலையில் இருந்தோம். 22.04.2009 அன்று கடற்கரை வழியாக நடக்க முடியாமல் நாவறண்ட நிலையில் பல மைல்கள் கடந்து பல சோதனைகள் கடந்து இராணுவத்தை வந்தடைந்தோம். இயலாத நிலையிலிருந்த என் தாய் தந்தையை உழவு இயந்திரத்தில் ஏற்றிய இராணுவம் என்னைத் தங்களோடு நடந்து வரும்படி கூறினர். அங்கு இருந்த மக்கள் என்னையும் தங்களோடு ஏறும்படி வற்புறுத்தியமையால் கடைசியில் என்னையும் அவர்களுடன் ஏற்றினார்கள். இதன்போதும் பின்னர் இன்னொரு பஸ்ஸில் ஏற்றும் போதும் இதுதான் எமது கடைசிப் பயணமென நினைத்துக் கொண்டோம்.

24.04.2009 அன்று இராமநாதன் முகாமில் இறக்கினார்கள். நான் எனது தாயையும் தந்தையையும் மகளையும் பிரிந்த நிலையில் அயலவருடன் ஒரு தறப்பாள் கூட்டுக்குள் இருந்தேன். நான்கு நாட்கள் குளிக்காமல் இருந்து பின்னர் அருகிலிருந்த ஆற்றுக்குக்குளிக்கச்சென்று இராணுவம் படம் எடுக்க குளித்த பாதி குளிக்காத பாதியாக திரும்பி வந்த நினைவுகளும் நான் இருக்கும் இடத்தை இராணுவம் கேட்க பொய் சொல்லித்தப்பிய நினைவுகளும் குழாயில் பத்து லீற்றர் தண்ணீர் அடித்து இரவு 1 மணிக்கு குளித்த நினைவுகளும் என்றும் மாறாதது. ஆற்றில் குளிக்கச் சென்று காணாமல் போன பல பெண்களுக்கு என்ன ஆனது? உறவைப்பிரிந்து, சொத்தை இழந்து, நாம் நேசித்த நாட்டை இழந்து,போராளிகளை இழந்து, பல்லாயிரக்கணக்கான மாவீரச்செல்வங்களை இழந்து செய்த முப்பது வருடப்போராட்டம் ஏன் இப்படி ஆனது? உலகநாடுகள் ஏன் எம்மை இந்த நிலைக்குக்கொண்டு வந்தார்கள்?; உணவுக்கு வரிசையில் நின்று கடைசியில் உணவு கிடைத்தாலும் உண்ணமுடியாத நிலை. கனத்த நெஞ்சுடன் தூக்கி எறிந்துவிட்டுப் படுத்த நாட்கள் பல.

கடைசியில், உறவு இணைப்புத் திட்டத்தில் அருணாசலம் முகாமிற்குச் சென்றபோது அங்கிருந்த மற்ற இனத்தவர்கள் சிரித்துக் கொண்டும் இனிப்புக்களைப் பகிர்ந்தும் எமது தோல்வியைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். முள்ளிவாய்க்காலுடன் இனப்படு கொலை முடிந்திருக்குமென பெருமூச்சு விட்டதொரு கூட்டம். நடந்திருக்கும் என்ற நம்பிக்கை இல்லாவிட்டாலும் நல்ல தலைவனுக்கு இப்படி நடந்ததா என ஏங்கித்தவித்த ஒரு கூட்டம். உண்மைகளை யாரை நம்பிக் கதைப்பது? துன்பங்களை எப்படிப் பகிர்வது? முட்கம்பிவேலிக்குள் பூட்டி வைத்து வேடிக்கை பார்க்கும் சிங்கள வலைக்குள் சிக்கிய கிளிகளாக நம்வாழ்வு. மேலும் வலி சேர்க்கும் இராணுவத்தினரின் ஏளனம். உறவுகளை ஒப்படைக்கிறோம் என்று கூறி ஏற்றிச் சென்ற மக்களை இன்னும் காணவில்லை என்ற ஏக்கம் ஒருபக்கம். பல்வேறு சித்திரவதைகள் தாண்டி 2010இல் முகாம்களை விட்டு மீள்குடியேறி வந்தோம். வெறுமையான வாழ்வு. எல்லாமே தொலைத்த ஏக்கம். வீதிகளில் விடுதலைப் புலிகளைப் பார்த்துப் பழகிய கண்கள் எம்மை அழித்தவர்களைப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம்.

மீள்குடியேறி வந்த எம்மை மீண்டும் விசாரணைகள் செய்வதும் வீட்டிற்கு வருவதும் படம் எடுத்து செல்வதுமாக நாட்கள் நகர்ந்தன. இவற்றையெல்லாம் நான்கு பேராகக் கூடிப் பேச முடியாத நிலை. நாட்கள் நகர்ந்து மாதங்கள் ஆகின. பல்வேறு வெளிநாட்டு நபர்களை இரகசியமாகச் சந்தித்து எமது கதைகளைக் கூறி அழுதோம் கதறினோம். போர் நடக்கும்போதும் போகவேண்டாம் என்று இவர்களை நோக்கித்தான் அழுதோம். போர் முடிந்த பின்னும் இப்போதும் இவர்களை நோக்கித்தான் அழுகிறோம். ஏமாற்றங்களுக்குப் பதிலாக காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளைத் தேடத்தொடங்கினோம்.

இன்று இரண்டு வருடங்களுக்கு மேலாகக் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் போராட்டங்கள் தொடர்கின்றன. வீதிகளில் தமது சொந்தங்கள் திரும்பி வருவார்கள் என காத்துக்கிடக்கும் மனைவிகள், தாய்மார், உறவினர்கள். இவர்களுக்கு ஒரு முடிவு சொல்லத் திராணியற்று அரச பதவிகளில் உட்கார்ந்து இருப்பவர்கள் பத்து ஆண்டுகள் கழிந்தும் என்ன செய்தார்கள்? யாரை ஏமாற்ற நிலைமாறுகால நீதி? சர்வதேசத்தை திசை திருப்ப உருவாக்கப்பட்ட அலுவலங்களில் உண்மைக்கும் நீதிக்கும் இடமில்லை என்பது தெளிவு. பணத்திற்குத் பதவிக்கும் உண்மைத்தன்மையற்ற நல்லிணக்க நிகழ்ச்சி நிரல்களுக்கும் விலைபோகின்றவர்களுக்கு உண்மையையும் நீதியையும் பொறுப்புக்கூறலையும் கேட்பவர்கள் புதிய எதிரிகளாகத் தெரிகிறோம். ஆனால் ஆயிரம் இறப்புக்கள் கண்டு பல இடப்பெயர்வுகளைத் தாண்டி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கொண்டு கொத்துக்கொத்தாக எம்மைக் கொன்றவர்களுக்கு மத்தியில் அவர்களது வெற்றிச் சின்னங்களுக்கு மத்தியில் அழியாத வேதனைகளுடன் வாழும் நிலையை இன்னும் எப்படி விளக்குவது.

இப்படி இருக்க ஆயுதப் போராட்டம் மௌனித்த பின் உரிமைப் போராட்டத்தை வைத்து அரசியல் செய்யும் கட்சிகள் பல. பத்து வருடங்கள் கழிந்த பின்னும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக என்ன செய்தார்கள் என்ற கேள்விக்கு யாரிடமும் பதிலில்லை. எப்போது இவர்களெல்லாம் ஒன்றாக நின்று தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கப் போகிறார்கள்? பத்தாண்டுகளின் முன் ஒரு தலைவர் பொருத்தமான கட்டமைப்புக்களை உருவாக்கிக்கொண்டு தமிழ் மக்களை சரியாக வழி நடத்திச் சென்றார். காட்டிக் கொடுத்தவர்களினாலும் வெளிநாட்டுத் தலையீடுகளாலும் உரிமைகளுக்கான ஆயுதப் போராட்டம் இறந்து போய்விட்டாலும் வெவ்வேறு வடிவங்களிலான வன்முறையற்ற எமது போராட்டங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ekuruvi Light 2019 - 10 Years | Remembrance

# தொடர் நிகழ்ச்சிகளில் சுமார் 10,000க்கும்

























சுமார் ஒரு வருடத்துக்கு முன்னராகவே வழமையாக இகுருவி நடத்தும் இகுருவி இரவு வர்த்தக நிகழ்வு இம்முறை முள்ளிவாய்க்கால் 10 வது ஆண்டு நினைவு நிகழ்வாக நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தோம்.

வழமையாக நடைபெறும் இகுருவி நிகழ்வு என்பது, இங்கு நடைபெறும் பல நிகழ்வுகள் போல் நேரத்தை வீணடிக்காமல், தற்புகழ்ச்சி பாடாது, சமூக நோக்கம் கருதி நடைபெறும் நிகழ்வுகளில் முதன்மையான நிகழ்வாக கடந்த காலங்களில் தன்னை நிலைநிறுத்தியிருந்தது.

நேர்த்தியான பேச்சாளர்கள், நிகழ்வுகளின் விருதுகள், 1000 பேருக்கும் மேலான இகுருவியின் வாடிக்கையாளர்கள் மற்றும் நிகழ்வின் பிரமாண்டம் என்று பல கடந்த கால பதிவுகளை நினைவுகூறலாம்.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் படி படியாக ஆரம்பிக்கப்பட்ட Biztha, ekuruvi மற்றும் புதிய வெளிச்சம் போன்ற இலாப மற்றும் இலாபமற்ற அமைப்புகளினால், கடந்த 10 வருடங்களாக தாயக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாக சென்று, ஆற்றுப்படுத்துகை, வலுவூற்றல் மற்றும் தன்னிறைவு பொருளாதார மேம்படுத்தல் திட்டங்களையும், நிகழ்வுகளையும் நடத்தியிருந்தோம். ஈகுருவி விருது விழாவில் அங்கிருக்கும் சாதனையாளர்களை தேர்ந்தெடுத்து கனடாவுக்கு அழைத்து விருது கொடுத்து சமூகத்தை மேலும் ஊக்கப்படுத்தியிருந்தோம்.

அதன் தொடர்ச்சியாக இம்முறை முள்ளிவாய்க்கால் 10 ஆவது நினைவு நிகழ்வை சமூக பொறுப்புள்ள ஊடகமாக, இகுருவி நிகழ்வை முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வாக நினைவுகூர திட்டமிட்டிருந்தோம்.

இந்நிகழ்வுகள் 2015, 2017 ஆம் ஆண்டுகளில் தாயகத்தில் (வடக்கு, கிழக்கு) எம்மால் நிகழ்த்தப்பட்ட சுமார் 10, 000 பேர் பலனடைந்த புதிய வெளிச்ச நிகழ்வுகள் போன்று, இந்த ஆண்டு கனடாவிலும் அதன் இலக்கை அடைந்துள்ளது

மூன்று நிலைகளில் திட்டமிட்டிருந்தோம்

1) **Humanitarian** (தாயக மக்களுக்கான உதவி)

2) **Tamil Genocide** (தமிழ் இனப்படுகொலை பரப்புரை)

3) **Passing memories** (ஞாபகங்களை கடத்தல்)

இகுருவி மற்றும் புதிய வெளிச்சம் ஒழுங்கு செய்த 2019 மே மாத இனவழிப்புக்கு எதிரான மற்றும் மனிதாபிமான உதவி தொடர் நிகழ்ச்சிகளில் சுமார் 10,000 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009 - 2019 நிகழ்வின் ஒரு பார்வை .....

# மேற்பட்டவர்கள் பங்கேற்பு


இந்நிகழ்வின் காணொளிகளை biztha மற்றும் ekuruvi இணையத்தளங்களிலும், மற்றும் Youtube இலும் பார்வையிடலாம்
http://www.biztha.com/video/












## செயற்பாடுகள்

**1) விளம்பரமில்லாத உலக தரமான எழுத்தாளர்களுடன் இகுருவி பத்திரிகை 15,000 பிரதிகள் வெளிவந்தது. (Print and Digital)**

இகுருவி விசேட இதழ், தமிழ் இனப்படுகொலை குறித்த பெரும் ஆவணமாக வெளிவந்திருக்கிறது. இனப்படுகொலைப் போரில் தப்பிய பலரது சாட்சியப் பதிவுகள், மற்றும் கலை இலக்கியப் பதிவுகள் என்பன வெளிவந்துள்ளது. இவ்விதழில் இலங்கையில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த சுமார் 130 இனப்படுகொலை பதிவுகள் ஆவணப்படுத்தப்பட்டு இரண்டு பக்கங்களுக்கு வெளிவந்தன. மேலும் கனடா, இலங்கை, பிரித்தானியா ஆகிய நாடுகளில் வெளிவந்துள்ளன. இச்செயற்பாட்டுக்கு சுமார் 7500 டொலர்கள் செலவிடப்பட்டது.

**2) 70 வருட இனப்படுகொலை தொடர்பான சம்பவங்களை இணைய பரப்புரை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தமை (Digital Marketing).** அடுத்த சந்ததியினருக்கும், கனேடிய மற்றும் பல்நாட்டு மக்களுக்கும் நாம் எப்படியான தொடர்ச்சியான இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுகின்றோம் என்பதஂனை நூற்றுக்கும் மேற்பட்ட Digital பதாதைகளை மூலம் சமூக வளைதளங்களில் பதிவேற்றி சுமார் 230,000 பார்வையாளர்களுக்கு சென்றடைய வழிவகுத்தோம்.


**3) 30 வருட யுத்த வடுக்கள் ஓவியங்களாக ஓவியர் புகழேந்தியின் "Faces of War"** எனும் ஆங்கில, தமிழ் புத்தகம் உலகம் முழுவதும் செல்ல அதன் ஒரு பகுதிக்கு பெரும் தொகை பணம் வழங்கி இகுருவி பதிப்பிட்டது. தேசிய தலைவரால் விருது பெற்ற ஓவியர் புகழேந்தி சுமார் 200 க்கும் மேற்பட்ட தமிழினவழிப்பு தொடர்பான ஓவியங்கள் உள்ளடங்கிய நூல் அச்சிடப்பட்ட உலகெங்கும் வழங்கப்பட்டது . இதற்கு சுமார் 3,500 கனேடிய டொலர்கள் செலவிடப்பட்டது .

**4) "From War Crimes to Tamil Genocide - An Awareness Conference"** காலை, மாலை தொடர் நிகழ்வுகளாக, மதிய உணவுடன் இலவசமான நிகழ்ச்சி - சுமார் 150 பேர் பங்கேற்பு . (காலை: Passing memories, Tamil Genocide / மாலை: Humanitarian).

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் எழுதிய "வல்வை படுகொலை" நூல் 30 வது வருட நிகழ்வாக தமிழ், ஆங்கிலத்தில் அந்நூல் மீள் பதிப்பு செயற்பட்டு, வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் இந்நூலின் 30 ஆண்டுகள் எனும் பொருளில் உரை நிகழ்த்தினார் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















இந்நிகழ்வில் இனப்படுகொலைக் கான நீதியை பெறுவதில் கடந்த பத்தாண்டுகளான தமிழ் அரசியல் எனும் கருப்பொருளில் நிலாந்தனும், இது ஏன் இனப்படுகொலை? எனும் தலைப்பில் பேராசிரியர் சேரன் உருத்திரமூர்த்தி அவர்களும், சர்வதேச சட்டத்தில் இனப்படுகொலை எனும் தலைப்பில் ஜனகன் முத்துக்குமரன் அவர்களும், கனேடிய அரசாங்கமும் இலங்கை இனப்படுகொலையும் எனும் தலைப்பில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் சிறப்பு ஆய்வுரை நிகழ்த்தினார்கள்.

மதிய உணவின் பின்னர் டாக்டர். ஆறுதிருமுருகன் அவர்கள் மற்றும் டாக்டர். லம்போதரன் அவர்களும் கடந்த பத்து ஆண்டுகள் நிகழந்த மனிதாபிமான பணிகள் மற்றும் அடுத்த பத்து ஆண்டுகள் தொடர வேண்டிய மனிதாபிமான பணிகள் எனும் கருப்பொருளில் கருத்தரங் கில் பேசினார்கள். இதில் அன்புநெறி, வன்னிச்சங்கம், வாழவைப்போம், உறங்காத விழிகள், கிழக்கு கல்வி அபிவிருத்தி சபை போன்ற பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்கு பற்றின.

**5) இனவழிப்பு மாதத்தில் டாக்டர். ஆறுதிருமுருகன் அவர்கள் மூலம் சுமார் 15க்கும் மேற்பட்ட கோயில்கள்** மற்றும் Senior Centreகளில் தாயகம் நோக்கிய தேவைகளையும், மனிதாபிமான தேவையான உதவிகளையும் வழங்கிடு வதற்குமான விழிப்புணர்ச்சி ஆற்றுப் படுத்துகை, அறநெறி நிகழ்வுகள் நடத்தப்பட்டன. தமிழ் இனவழிப்பு நிகழ்ந்த மே மாதத்தில் புலம்பெயர் மக்களை தாயகம் நோக்கி சிந்திக்க, செயலாற்ற வைப்பது பெரும் சவாலாகும். அச்சவாலை இம் மே மாதம் நாம் முயற்சி செய்திருந்தோம்.

தாயகத்துக்கான மனிதாபிமான பணிகளை அதிகரிக்கும் புதிய வெளிச்சம் அவரது சொற்பொழிவுகளில் சுமார் 10,000 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

இதே போன்று 2015 ஆம் ஆண்டு பேராசிரியர் ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களின் சொற்பொழிவுகளில் தாயகத்தில் சுமார் 15,000க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

**6) கடந்த 7 வருடமாக சுமார் 1000 பேருடன் நடைபெறும் ekuruvi night எனும் பிரத்தியேக தனிப்பட்ட இகுருவியின் விளம்பர மற்றும் வாடிக்கையாளர்களுக்கான வர்த்தக நிகழ்வு,** இம்முறை "ekuruvi Light 2019" எனும் நிகழ்வாக மாற்றப்பட்டு 556 பேருடன் உலக புலம்பெயர் மக்களுக்கு ஒரு மைல் கல் நிகழ்வாக இடம்பெற்றது.

எமது கருப்பொருள்களான Passing memories, Tamil Genocide, Humanitarian என்பவற்றை எமது மக்களுடன் பகிர்ந்து கொண்டமையானது, ஒரு முன்னுதாரணமாக







(தொடர்ச்சி 26ஆம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















உங்கள் தனிப்பட்ட நிகழ்வுகளிலும் எம் இனம் சார்ந்து இவ்வாறு கொண்டு செல்லப்படவேண்டும் என்ற செய்தியை சொல்லியிருக்கிறது.

*7)* **இகுருவியின் பிரத்தியேக நிகழ்வில் இரவு உணவாக 'கஞ்சி '** கொடுக்கப்பட்டு, முள்ளிவாய்க்கால்நினைவுகளுடன் அவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய உணவாக கஞ்சி மட்டுமே இருந்ததை நினைவு கூறுமுகமாக, அன்றைய மாதத்தில் அதை நினைவுகூறுமுகமாக மக்கள் கஞ்சியை ஒரு நேர உணவாக உட்கொண்டு இந்நோன்பை கடைபிடிக்கலாம் என்று மே மாதம் *1* ம் திகதி வெளிவந்த முள்ளிவாய்க்கால் இகுருவி பத்திரிகையில் நிலாந்தன் அவர்களது சிறப்பு கட்டுரை மூலம் தெரிவித்திருந்தோம். அதே போன்று ekuruvi Light *2019* நிகழ்விலும் சிறப்பு பேச்சாளர் நிலாந்தன் மூலம் முள்ளியவாய்க்கால் கஞ்சி தொடர்பான கருத்துக்கள் பகிரப்பட்டு, கஞ்சிக்கான பாடல் எழுதி, இசை அமைக்கப்பட்டு அதற்கான நாட்டிய நடனம் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து ekuruvi Light 2019 க்கு வந்தவர்கள் அனைவருக்கும் அன்றைய இரவு உணவாக 'கஞ்சி ' வழங்கப்பட்டது.

*8)* **நிலாந்தன் அவர்களது மே 18 க்கான நினைவு பேருரையும்,** இணையப்பரப்பில் அதனை சுமார் *1.5* லட்சம் மக்களுக்கு கொண்டு சேர்த்தமையும் உலகமெங்கும் நடைபெறும் மே 18 நிகழ்வுகளுக்கு வலுசேர்த்தன.

*9)* **முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பால்**

ekuruvi light 2019 நிகழ்வுக்கான முள்ளிவாய்க்கால் கஞ்சிப் பாடலை உருவாக்கியமை . வசனம் இசையமைப்பு, நடனம், இணைய பரப்புரை,



ekuruvi Light 2019 Mullivaikkal "Kanchi" song with the remembrance of our genocide victims Thaayage Manne

Singers: Sarika Navanathan, Prabha Balakrishnan ,Steve Cliff

Valentine Composition: Steve Cliff Valentine, Prabha Balakrishnan

Music: Steve Cliff Valentine

Lyrics: Indran Raveendran

Recording, Mixing & Mastering: Studio Fourteen

Choreography : Anojini Kumaradasan Aadalaham Dance Acadamy Abisha Sivakumar, Anreeya Nantheeswaran, Kaaviya Vasanthakumar, Tharsika Sritharan, AbenayaaVigneswaran,AksheyVigneswaran









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தொடர்ச்சி 28ஆம் பக்கம்)




# GMD Unionville Walk-In & Family Medical Clinic ACCEPTING NEW PATIENTS




We are a full-service walk-in and family practice, offering:

- Urgent appointments
- Walk-in clinic
- After-Hours and weekend Clinic
- Immunizations/Vaccinations for all ages
- Allergy shots
- Well baby visits
- Vitamin B12 shots
- Diabetes and obesity education
- Wound dressing
- Skin tag and wart removal
- Ear flushing

We have the following specialists as part of our team:

- Pediatrician
- Plastic surgeon
- Orthopedic surgeon
- Hematologist
- Allergist
- Registered dietician
- MVA and Chronic Pain
- Psychotherapist

**Guardian Pharmacy on-site**


English, Mandarin, Tamil Spoken
Female family Doctor accepting new patients

**GMD Unionville Medical Centre**
**9249 Kennedy Road, Unit 102, Unionville, ON, L3R 6H9, Tel 9059449190 Fax 3655252000**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











, Harrani Rajasegar

Production: Ekuruvi

10) தாயகத்திலிருந்து Humanitarian புதிய வெளிச்ச விருதுக்காக விமானம் மூலம் அழைக்கப்பட்ட Dr. Sencholselvar Aaruthirumurukan, Rasaiya Kuventhiranathan மற்றும் அவர் மனைவி சமூக மனிதாபிமான பணிகளுக்கான புதிய வெளிச்ச விருது கலாநிதி ஆறுதிருமுருகன்

எம் தாயகப்பரப்பிலேயே அனைவராலும் அறியப்பட்ட நாமங்களில் இவர் நாமமும் ஒன்றாகும். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், ஆன்மீகத்துக்கூடாக எம் சமூகத்துக்கு மிகப்பெரும் சேவையாற்றி வரும் இவர், மக்கள் சேவைக்காகவே தனது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்த ஒருவராவார்.

கோண்டாவிலில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, தொழிற்பயிற்சி நிலையம், வாழ்வாதார நிதியம், மருத்துவ நிதியம் மற்றும் சிவபூமி கல்வி நிதியம் என்பனவும் சுழிபுரத்தில் முதியோர் இல்லம், கீரிமலையில் சிவபூமி மடம், கலைக்களஞ்சியம் மற்றும் யாத்திரிகர் விடுதி என்பனவும் குப்பிளானில் ஞானாச்சிரமம், ஆனைக்கோட்டையில் அபயம் இலவச மருத்துவமனை, நாவற்குழியில் திருவாசக அரண்மனை, கிளிநொச்சியில் மனவிருத்திப் பாடசாலை, இயக்கச்சியில் சிவபூமி கோட்டம் மற்றும் நாய்கள் சரணாலயம் அத்துடன் பச்சிலைப்பள்ளியில் பஞ்சாமிர்த தோட்டம் என்பவற்றுடன் திருகோணமலையில் சிவபூமி பாடசாலை மற்றும் மடம் என்பவற்றை அமைத்தும் வருகிறார்.

தொடர்ச்சியாக 30 ஆண்டுகளுக்கு மேலாக தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வரும் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கு இகுருவி புதிய வெளிச்சம் விருது வழங்குவதில் பெருமையடைகிறது.

**தாயக கொடைவள்ளல் புதிய வெளிச்சம் விருது**
**ராசையா குவேந்திரநாதன்**

"கடவுள் கொடுத்ததைத் தான் மக்களிடம் கொடுக்கிறேன்" மற்றைய எவரது உதவியும் இன்றி தன் சொந்தப்பணத்தில் பல கோடிகளை மக்களுக்கே வாரி வழங்கி விட்டு இந்த வசனத்தை சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டுக் கடந்து செல்கிறார் ராசையா குவேந்திரநாதன் ஐயா.

2012ம் ஆண்டு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலத்துக்கு















(தொடர்ச்சி 33ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களை எப்படி அடையாளம் காண்பது?

நிலவன்

இது சற்று கடினமான காரியம். உண்மையில் பாதிக்கப் பட்டவர்களையும் பாதிப்பின் தன்மை அல்லது பாதிப்பின் வகையையும் தெரிந்து கொள்ள வேண்டும், உதரணமாக தெளிவற்ற சிந்தனை, நீடித்திருக்கும் கவலை அல்லது எரிச்சல், தனிமையை நாடுவது, குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து விலகுவது,எதிலும் நாட்டமின்மை, காரணமில்லாமல் மற்றவர் மீது சந்தேகப்படுவது, அதிக சந்தோஷம், அதிக கவலை, தேவையில்லாத பயம், சோகம், பதற்றம், அளவுக்கு அதிகமான, கட்டுப்படுத்த முடியாத மது, போதைப் பழக்கம், உணவு மற்றும் தூங்கும் பழக்கத்தில் மிகுந்த மாற்றம் ஏற்படுவது, தற்கொலை எண்ணங்கள் அல்லது முயற்சி.

நாளாந்தச் செயற்பாடுகளைக் கூட சமாளிக்க முடியாமல் திணறுதல், அளவுக்கு அதிகமான கோபம் அல்லது குற்றவுணர்வ, இல்லாத விஷயத்தைப் பார்ப்பது , யாரோ தம் காதில் பேசுவது போல உணர்தல், தன்னைத் தானே காயப்படுத்தி கொள்ளுதல்,குறிப்பிட்ட வயதுக்கு பின்னரும் கட்டுப்படுத்த முடியாமல் சிறுநீர் கழித்தல்.

தொடர்ந்து வரும் கெட்ட கனவுகள், அடிக்கடி எரிந்து விழுதல் அல்லது கோபப்படுதல், கவனம் செலுத்த முடியாத நிலை ( கவனச் சிதறல் / வார்த்தைகளையும் ஒலியையும் தொடர்புபடுத்த முடியாமல் போவது ஒருவர் சொல்வதை பின்பற்ற இயலாமை, எல்லாவற்றுக்கும் பிறரைச் சார்ந்திருப்பது , கற்றல் குறைபாடுகளை எழுதுவது, படிப்பது கணக்குப் போடுவது போன்றவற்றில் ஏற்படும் குறிப்பிட்ட பிரச்சினைகள்.

பள்ளி செயல்திறனில் மாறுதல், திடீரென மதிப்பெண் குறைதல், பள்ளிக்குச் செல்லாமலிருத்தல், திருடுதல், பொருட்களை சேதம் செய்தல், கட்டுப்படாமல் இருத்தல் உடல் ரீதியான பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படுதல் ஒரு விடயத்தை மீள மீள சரி பார்ப்பது போன்ற நேரத்தை வீணடிக்கும் செயல்பாடுகள். ஓரிடத்தில் உட்கார முடியாமல் நிலைகொள்ளாமல் இருத்தல் , தொடர்ந்து பள்ளி நிர்வாகத்துக்கு பணிந்து போகாமல் இருத்தல் மற்றும் வன்முறைச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்.

திரும்பத் திரும்ப தொந்தரவு செய்யும் விரும்பத்தகாத எண்ணங்கள் திரும்பத் திரும்ப ஒரே செயலை கட்டுப்பாடின்றி பதற்றத்துடன் செய்வது (உதாரணம்: கதவு பூட்டி விட்டோமா அல்லது அடுப்பு அணைத்து விட்டோமா என பலமுறை சரிபார்ப்பது, கையை கழுவிக்கொண்டே இருப்பது, அதீதமாக சுத்தம் பார்ப்பது. உதாரணம் வீட்டை மணிக்கு பலமுறை கூட்டுதல் அல்லது துடைத்தல் , பல மருத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகும் கண்டுபிடிக்க முடியாத உடற்கோளாறுகள் (உதாரணம்: எரிச்சல் கொண்ட குடல் நோய் , மெய்பாட்டு முறைப்பாட்டு அறிகுறிகள். உடல் எடை குறித்த மிகுந்த பயம் அல்லது பதற்றம்.பிடித்த விஷயத்தில் நாட்டமில்லாமல் போவது,

வழக்கத்துக்கு மாறான பாலியல் விருப்பங்கள் (உயிரில்லாத பொருட்கள், ஆண் பெண்ணாக, பெண் ஆணாக உடைமாற்றுதல், பிறரையோ, தன்னைத் தானே துன்புறுத்துதல், அடுத்தவரின் படுக்கையறையை எட்டிப் பார்த்தல், பிறப்புறுப்பை அந்நியரிடம் காட்டுதல், குழந்தையுடன் உறவு கொள்ளுதல் என ஆரோக்கியமற்ற முறையில் பாலியல் உணர்வுகளால் தூண்டப்படுபவர்கள். தொடர்ந்து பாலியல் எண்ணங்களோ அல்லது ஆசையோ இல்லாமல் இருத்தல், பாலுறவில் வெறுப்பு அல்லது துணையை இதுசம்பந்தமாக தவிர்ப்பது, விரைவாக விந்து வெளியேறுதல் அல்லது உச்சகட்டம் அடையாதிருத்தல் அல்லது அடைவதில் தாமதம், இத்தகைய அறிகுறிகள் எல்லோருக்கும் இயல்பாக இருப்பது போலவே தோன்றக் கூடியவையே.

இவை ஒருவரிடத்தில் ஒன்றோ அல்லது ஒன்றிற்கு மேல் காணப்படலாம் எப்போது அவை அளவுக்கு அதிகமாகவும் நீடித்தும் காணப்பட்டு, ஒருவரின் தனிப்பட்ட திறனைப் பாதித்து, நாளாந்த வாழ்க்கைக்கு இடையூறாக அமைவதை நாம் அவதானிக்கும் போதும் அதன் தீவிரத் தன்மையை உணருகின்றபோதும், இந்த அறிகுறிகள் தனிநபரை மற்றும் குடும்பம் உட்பட சமூகத்தில் பாதிப்புக்கள் ஏற்படுத்தும் என உணரும் பட்சத்திலும் வைத்தியசாலையின் உளநல மருத்துவ அதிகாரி, மாவட்டச் செயலக உளவள அதிகாரி, மாவட்ட வைத்தியசாலையின் உளசமூகப் பணியாளர், உளவியல் நிபுணரிடம் ஆலோசனை பெற்க்று கொள்வதும் மருத்துவப்பரிசோதனைகள் செய்வதும் உளவளத்துணை ஆலோசகரை சந்திக்க வேண்டியதும் அவசியமாகிறது. அதன் பின்னர் நாம் அவர்களுக்கான சிகிச்சையினை மேற்கொள்ளலாம். ஆனால், பாதிப்படைந்தவர்களை அணுகுவதும் அடையாளம் காண்பதுமே கடினமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஈழத்து அரசியல் களமும் அடியிடப்பட்ட கல்லும்...

காவியா

ஈழத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களிலும் அவற்றின் பின்னணியிலும் ஏற்கனவே அரங்கேற்றப்பட்ட நாடகங்களின் தொடர்ச்சியே வழிந்தோடியிருப்பதை காணலாம்.

விழிப்புணர்வான பதிவுகள் பல இடப்படும்போதும் ஈழ தமிழர்களின் இன்றைய இளைஞர்களின் நிலை பெண்களுடனும்/ காதல் கவிகளுடனும்/ எழுத்தில் மட்டுமே நாம் வீரராக காணப்படும் வரையிலும் எந்தவிதமான முன்னேற்பாடுகளும் ஏற்பட போவதில்லை.

ஈழத்து தமிழ் இளைஞர்களை பொறுத்தவரையில் ''தமிழ் என்றமொழி ஒற்றுமையிலோ. அல்லது மதம் என்ற மத ஒற்றுமையிலோ ஒன்றிணையாமல் வாழ்கின்றனர்''. ஆரம்ப நாட்களில் இருந்தே புலம்பெயர்ந்து, புலம்பெயர் பணத்தில் வாழ பழகிக்கொண்ட சமூகமாகவே எமது சமூகம் வாழ்ந்திருக்கின்றது.

தொன்று தொட்டு சிங்கப்பூர்/ மலேசியா ஆகிய நாடுகளுக்கு அடிமைகளாக செல்ல முன்வந்தவர்களும் அதன் பின்னர் ''படிப்பாளிகள்'' என்று ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களும்/ விடுதலை போராட்டம் என்று புலம்பெயர்ந்தவர்களும் அநேகர் ஈழ தமிழர்களே.

''புலம்பெயரும் தன்மை கொண்ட மக்கள் சுயநலம் மிகுந்தவர்களாகவும்/ தற்பெருமை கூறும் மக்களாகவும் மற்றவர்களின் வாழ்வுநிலையை பார்த்து அதேபோன்று வாழ பழகும் மக்களாக வாழ்ந்துவிடுவதில் பிரியமிக்கவர்களாகவே காணப்படுவர்''.

இவர்களை மாற்றிடவேண்டுமென்றால் குறித்த சமூகத்தின் ஆழத்தை அகலத்தை எழுத்தியல் ரீதியாக நிறுவிடாமல் வாழ்வியலில் நிறுவ வேண்டும்.

இன்று ஈழத்தில் நிகழும் அரசியலின் சித்த விளையாட்டில் முஸ்லீம் மக்களிடம் மதம் சார்ந்த கொள்கை கொண்டவர்களிடம் ஆழமாக வேரூன்றி நிற்கின்றனர் முஸ்லீம் அரசியல்வாதிகள். முஸ்லீம் மக்களின் அரசியல் ஜாம்பவான்களின் கபட விளையாட்டால், பேரின சக்திகளின் வலிமை மீண்டும் சிறுபான்மை முஸ்லீம்களின் வெறுப்பு போக்குக்கு உறுதியான கொள்கையை சுட்டிக்காட்டியிருப்பதாக மக்களுக்கு மீண்டும் எடுத்துக்கூறி பாவப்பட்ட மக்களின் மனங்களில் விசத்தை தூவியிருக்கின்றார்கள் பேரின சக்திகள்.

சிங்கள எளிமையான மக்கள் மீதான வெறுப்பியலை முஸ்லீம் மக்களுக்கு காட்டியுள்ள முஸ்லீம் அரசியல்வாதிகள் மீண்டும் சிங்கள தலைமைகளுடன் கைகோர்த்து சிங்கள/ முஸ்லீம்/ தமிழ் மக்களின் அழிப்பை செய்வதில் உறுதியாக இருப்பார்கள்.

எந்த ஒரு போரிலும் அரசியல் தலைமைகளோ அரசியல்வாதிகளின் வம்சமோ சொத்துக்களோ பாதிப்பை சந்திப்பதில்லை. மாறான அன்றாடம் பிழைப்பிற்காக வாழும் மக்களின் நிலையும் நடுத்தர மக்களின் நிலையுமே பாரிய சிக்கலுக்கு உள்படுகின்றது.

இந்த போரும் போரின் கபட முகமும் இனம்/ மொழி / மதம் பார்ப்பதில்லை. பேரின சக்திகள்/ சிறுபான்மையின சக்திகள் இரண்டும் வஞ்சகமின்றி பெரும்பான்மை இன எளிய மக்களையும்/ சிறுபான்மை இன எளிய மக்களையும் அழித்து சின்னாபின்னமாக மாற்றி விடுகின்றது.

எந்த ஒரு நாட்டினதும் பாதுகாப்பு துறைக்கும் போராட செல்பவனும்/ களத்தில் நிற்பவனும் பணக்காரனும் இல்லை/ முதிர்ந்த அரசியல் வாதிகளின் வம்சமும் இல்லை. இவர்கள் பாவப்பட்ட எளிய குடும்பங்களில் இருந்து வந்து வருமானம் ஈட்டிட வரும் நபர்களாகவே காணப்படுவர்.



இந்த நபர்களுக்கு எதிராக வீரமிக்க கொள்கையின் பிடியில் நாட்டிற்காக தம்மை அர்ப்பணிக்க விழைந்த வீர மறவர்கள் போராடுவதால் தான் விடுதலை போராட்ட மறவர்களிலும்/ அரசாங்க தரப்பு இராணுவங்களின் இழப்பு கூடுதலாக கடந்த காலங்களில் வரலாறுகளில் பதியப்பட்டிருப்பதை காண முடிகின்றது.

இன்று நாம் ஈழத்தில் காணப்படும் நடைமுறையில் எதனை நிலைநிறுத்த வேண்டும்?

1) இனம் மதம் மொழி கடந்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

2) கடந்த காலங்களில் நிகழ்ந்த விடயங்களின் உண்மை தன்மையை எடுத்துரைக்க வேண்டும்


3) இதுநாள்வரையிலும் இருக்கும் எந்த அரசியல்வாதிகளையும் நம்பாமல் அவர்களை முழுவதுமாக வெளியேற்றி முற்றிலும் புதிதாக ஒரு அரசியல் நகர்வை உள்செலுத்த வேண்டும்.

4) குறித்த ஒரு வட்டத்தில் இருக்கும் சிங்கள பேரினவாத அரசியலை வேறு ஒரு திசைக்கு மாற்றிட வேண்டும்.(ராஜபக்ச குடும்பம்/ பண்டார நாயக்க குடும்பம்/ விக்ரமசிங்க குடும்பம்) என்ற குடும்பங்களுக்கான அரசியலை ஒரு நாட்டு அரசியலாக மாற்றும் சக்தியை முழுவதுமாக மாற்றிட வேண்டும்.

5) புத்த ஏகாதிபத்திய கொள்கையில் நீதி/ நேர்மை/ இனவழிப்பு போன்ற சிந்தனைகள் புதைந்து கிடப்பதை மாற்றிட ஆவண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இன்று புலம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் தமக்கே உரிய பாணியில் வாழ கற்றுக்கொண்டு இருப்பதுடன் தற்பெருமை/ சுயநலம் மிக்கவர்களாக வாழ்கின்றனர். இந்த கொள்கையினால் தாம் எதிர்காலத்தில் எத்தகைய அழிவினை சந்திக்க போகின்றோம் என்று உணராத மக்களே பலருள்ளார்.

ஈழத்தில் வாழ்பவர்கள் ஆடம்பர வாழ்வு, பணம், ஒழுக்க கேடு, குடி போதை,வறுமை, என்ற நிலைக்குள்



வாழ புலம்பெயர்ந்தவர்கள் ஆடம்பரம், தற்பெருமை, தற்புகழ்ச்சி,போட்டி ,பொறாமை ஒழுக்கக்கேடு, சொத்து சேர்ப்பு ஆகிய படிநிலைகளுக்குள் வாழ்கின்றனர்.

இவர்கள் தம்மை சுற்றி நிகழும் அரசியல் சமூக மாற்றங்களை கவனிக்க தவறுவதுடன் உலக அரசியலில் ஏற்படும் மாற்றங்களை ஆழமாக உள்வாங்க தவறுகின்றனர்.

நாம் இன்று எளிய மக்களின் அறிவினை சரியான முறையில் எடுத்து செல்லவேண்டிய காலத்தில் நிற்கின்றோம். ஆசிய நாடுகளில் காணப்படுவது இன ரீதியான/மத ரீதியான அழிப்புகளும், எம் வள சுரண்டல்களும் என்பதை பாவப்பட்ட மக்களுக்கு எடுத்து செல்வது எமது கடமையாக கொள்ள வேண்டும். உலகில் பல பாகங்களில் ஏற்படும் அனர்த்தமும், போரும், அழிவும், கொலையும், கொள்ளையும் எவ்வாறு ஒரு தனிமனிதனை பாதிக்கும் சக்தி கொண்டது என்பதையும் எமது வம்சத்தை எவ்வாறான சிக்கலுக்குள் தள்ளும் என்பதையும் ஒவ்வொருவரும் தர்க்கரீதியாக வாசித்து உணர்ந்திட வேண்டும்.

பல காலங்களுக்கு முன்னர் கனிய வளத்திலும் மனித வளத்திலும் சிறப்புற்று விளங்கிய ஆபிரிக்க நாடுகளின் பஞ்சமும், பசியும், வறுமையும் இனவழிப்பும், எமக்கொரு பாடத்தை கற்றுத்தரவில்லையென்றால் ஆபிரிக்க நாடுகள் போல ஆசிய நாடுகளும் மாறுவதை யாரும் தடுத்திட முடியாது.

ஆபிரிக்க நாட்டுக்கும் ஆசிய நாட்டுக்குமான பூகோள தொடர்பினை ஆழமாக விளங்கிக்கொள்ளும் அறிவினை நாம் வளர்த்து கொள்வோமாக இருந்தால் ஆபிரிக்க நாட்டவர்களின் பாரிய தொன்மையை நாம் விளங்கிக்கொள்வோமாக இருந்தால் இன்று நாம் ஏன் மேலைத்தேய தீவிர சக்திகளால் இலக்குவைக்கப்பட்டுள்ளோம் என்பதை உணருவோம்.

மதிப்பிற்குரிய மக்களே/பேரன்பு கொண்டவர்களே அறிவாளர்களே

நாம் பாரியதொரு மக்களின் அழிவை ஏற்படுத்தும் சக்திகளுக்கு இடையில் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம் என்பதை உணர தவறியிருக்கின்றோம்.

எங்கோ அழியும் மக்கள் தானே என்று எண்ணிக்கொண்டு முக்கிய சில நிகழ்வுகளை கவனிக்க தவறுகின்றோம்.

நாம்வாழ்வது பெரிய பிரித்தானியா என்று கூறும் நாம் ''பேர்மிங்காம்'' என்ற இடத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகளை கவனிக்காமல் செல்கின்றோம். மதம் என்ற கொள்கைக்குள் சிக்கியுள்ள சில மனிதர்கள் பல மனிதர்களை தொந்தரவுள்ளாக்கும் தொந்தரவுள்ளாக்கும் நிலையும் அமெரிக்கா அதிபரின் இப்போதைய வருகையும் (ரமடான் காலத்து / மே இன் பதவி விலகல் காலம்) கவனத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய நேரங்கள் என்பதை உணர வேண்டும்.

நாம் மாபெரும் ஒரு அழிவை எதிர்காலத்தில் கேட்போம் என்பதும் எம் மரணங்கள் / எமக்கு வேண்டியவர்களின் மரணங்கள் குறுகிய காலத்தில் நிகழும் என்பதும் எமக்கு இப்போது புரிந்திட போவதில்லை.

நாம் ''மனிதநேயம்'' என்ற கொள்கையை கவனிக்க தவறுமிடத்து நாம் சாதித்தோம் என்று கூறும் அனைத்தும் எம் கண்முன்னால் அழியும் காலம் வெகுதொலைவில் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத சின்னங்களும் ஊர்களும்!

காவியா

21 திகதி ஏப்ரல் 2019 அன்று நடந்த குண்டுவெடிப்பு தாக்குதலின் பின்னர் முஸ்லீம் சமூகத்தின் மீதான பார்வையும், அவர்களின் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் சந்தேக உணர்வும் தமிழ்மொழி பேசும் மக்களிடம் செலுத்தப்பட்டு இருப்பது போன்றே சமூக வலைத்தளங்களும் ஊடகங்களும் சுட்டி காட்டுகின்றது. இலங்கையில் சமூக வலைத்தளங்களின் பாவனையானது அதிகரித்து காணப்படுவது போன்ற பிரமையும் எண்ணமும் புலம்பெயர் சமுதாயத்திடம் ஆழமாக புரையோடி காணப்படுகின்றது.

உண்மையில் சமூக வலைத்தளங்களின் பாவனை அதிகரித்து காணப்படுகின்றதா? ஊடகங்கள் சுட்டி காட்டுவதுபோன்ற பாரியதொரு பிரச்சனையை தமிழ்மொழி பேசும் உறவுகள் எதிர்கொள்கின்றார்களா? பாலியல் கலாச்சார பிரச்சனை மிகவும் மோசமாக காணப்படுகின்றதா?என்ற கேள்விக்கணையுடன் பேருந்தில் எமது பிரயாணத்தை மேற்கொண்டிருந்தோம். பேருந்துபிரயாணம்மட்டுமேஎந்தவொரு இடத்தினதும் உண்மை நிலையினை வெளிப்படையாக எடுத்துக்காட்டும் தன்மை கொண்டதாக இருக்கும். பேருந்தில் முகமூடியற்ற மனிதர்கள் இயல்பாகபயணிப்பதேஇதற்குகாரணம்.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் வடக்கு மாகாணத்தை போன்று ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே காணப் படுகின்றது. கிழக்கு மாகாணமானது தமிழ், முஸ்லீம், சிங்கள மக்கள் பரவலாக வாழும் பிரதேசமாகவும் இருக்கிறது. இதனால் புலம்பெயர் வருமானமற்ற குடும்பங்கள் சுயதொழில்வாய்ப்பினை நம்பியதாக வாழ்கின்றனர். அதுமட்டுமன்றி தமது மதத்தில் அதிதீவிர பற்று கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த அதிதீவிர பற்று கொண்டிருப்பதற்கு பில்லி,சூனியம் போன்றமூட நம்பிக்கைகளும் வறுமையும் ஒரு காரணமாக இருக்கிறது.

குறித்த மக்களின் வறுமையையும், அவர்களின் இயலாமையையும் பயன்படுத்தி சில அதிதீவிர மத அரசியலவாதிகள் தமது பணத்தை இவர்களுக்கு காணிக்கையாக்கி மதம் என்ற மாய வலைக்குள் சிக்க வைத்துள்ளனர்.

புலம்பெயர் நாடுகளில் நாம் இருந்து ஜோசிப்பது போன்று சமூக ஊடகங்களின் பங்களிப்பு இங்கே வறுமைப்பட்ட மக்களிடம் தாக்கம் செலுத்தவில்லை. தமது நாட்டின் ஆளுநர் யார் என்ற விபரமோ இந்த நாட்டில் எந்தவிதமான சட்டங்கள் இருக்கிறது என்ற தெளிவோ இந்த மக்களிடம் இல்லை. ஊடரங்கு அமுலில் இருக்கும்போது வெளியில் வரக்கூடாது என்று தெரிந்த மக்களுக்கு எதனால் ஊரடங்கு போடப்பட்டு இருக்கிறது? யாரால்இந்தபிரச்சனைஉருவாக்கப்பட்டு இருக்கிறது என்கின்ற தெளிவான பார்வைகள் கிடைக்கப்படவில்லை. ஏன் நாட்டில் நடக்கும் சூழ்நிலையை பற்றிய கவலைப்பட குறித்த மக்களுக்கு அவர்களது வீட்டு கவலைகள் இடம்கொடுக்கவில்லை என்று தான் கூறலாம்.

வறுமையின் காரணமாக உயிரிழப்புகளும், கடன் தொல்லையில் சிக்கி தவிக்கும் மக்களும் அதிகளவில் கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்றனர். இந்த வறுமையின் பிடியில் வாழும் சனத்தொகையில் ஒரு வீதமான மக்கள் தவறிழைக்கின்றார்கள். இந்த தவறை மிகைப்படுத்தும் சமூக ஊடகங்கள் எம் தமிழ்மக்களை குற்றமானவர்களாக சுட்டிக்காட்டி குற்றஉணர்வுள்ளவர்களாக மனரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக மாற்றவே முனைகின்றனர்.

ஒருநாள் முழுவதும் நாம் வீதியோரத்தில் அலைந்து திரிந்தபோதும் எந்தவொரு இளைஞனும் யுவதியும் தனியாக கைகோத்து செல்வதை காண முடியவில்லை. அதுமட்டுமன்றி விளையாட்டு திடல்கள் நிரம்பி வழிந்ததுடன் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விளையாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாக காணப்பட்டனர்.

காத்தான்குடியை பொறுத்தவரை யில் அந்த இடம் முஸ்லீம்கள் செறிந்து வாழும் பகுதியாக காணப்படுவதால் அவர்கள் தமது மத சின்னங்களை வீதிகள் தோறும் விளம்பரப்படுத்தி வைத்திருப்பதுடன் ஈச்சை மரங்களையும் அழகுக்காக வீதிகளின் இடையில் நாட்டியுள்ளனர். அதேபோன்று சைவ சமயத்தவர் செறிந்து வாழும் இடங்களில் அவர்கள் தமது கடவுளின் படங்களை சின்னமாக்கி வீதியோரங்களில் வைத்துள்ளார்கள். இதேபோல கிறித்தவ மதத்தவர்கள் வாழும் இடத்தில் "மாதா வீதி" என்று பெயரிட்டு உள்ளார்கள்.

ஆகவே ஒவ்வொரு மதம்சார் இனக்குழுக்களும் தாம் செறிந்துவாழும் இடங்களில் தமது மதரீதியான சிலைகளையும் சின்னங்களையும் பாதுகாப்பது எப்படி தவறாகும்?

ஒன்றுமே இல்லாத சாதாரண விடயங்களை பெரிதாக்கி ஊதி பெரிப்பித்து மக்களிடம் நல்லிணக்கத்தை குறைக்கும் அனைத்து சக்திகளையும் மக்கள் இனம்காண வேண்டும்.

கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த ஹிஷிபுல்லாவின் பெயரில் மண்டபமும் விளையாட்டு அரங்கமும் காத்தான்குடி புரதேசத்தில் அமைந்திருப்பது தனிப்பட்ட ஒரு அரசியல்வாதியின் மத ரீதியான அரசியலை சுட்டிக்காட்டுகின்றது. ஒரு அரசியல்வாதி என்பவர் எல்லா இன மக்களுக்கும் சமூக தொண்டாற்றும் நிலையில் இருக்க வேண்டும். அதேபோன்று வவுனியா பிரதேசத்தை பொறுத்தவரை அஷாட் பஹுதீனும் தனது பெயரில் மண்டபங்களை திறப்பதும்/ மகிந்த தனது பெயரில் மண்டபங்களை திறப்பதும் பொதுமக்களின் சமூக நல உறவுகளுக்கு பங்கம் வகிப்பதாக அமைகின்றது.




எம்நாட்டில்பெண்களின்மனங்களும் அவர்களின் சகிப்புத்தன்மையும் இன்றும் எம் நாட்டில் தழைத்தோங்கி காணப்படுவதால் இனரீதியான அழிப்பினை ஏற்படுத்திய சக்திகள் முழுமையான வெற்றியை பெற முடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2050இல் அழியும் நகரங்கள்...

அவுஸ்திரேலியாவின் 'ப்ரேக்த்ரூ நேஷனல் சென்டர் ஃபோர் க்ளைமேட் ரிஸ்டோரேஷன்' (Breakthrough National Centre for Climate Restoration) என்ற சுயாதீன பருவநிலை மீட்டுருவாக்க அமைப்பு, சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், மனித இனத்துக்கு *31* ஆண்டுகளே எஞ்சியுள்ளன என்ற அதிர்ச்சிதரும் தகவலை வெளியிட்டுள்ளது. அதன்படி *2050*ஆம் ஆண்டில் *90* சதவிகித மக்கள்தொகை அழிந்துவிடும் என அந்த அறிக்கை கூறியுள்ளது.

இந்த நகரங்களெல்லாம் *2050*இல் அழிந்துவிடுமாம்... காரணம் இதுதான் எனவும் சில காரணங்களை தெரிவித்துள்ளது!

நிலம், இனம், மொழி என இயற்கை தந்த பிரிவுகளுக்கும், சாதி, மதம், நாடு என மனிதனே உருவாக்கிக்கொண்ட பிரிவுகளுக்கும் அப்பாற்பட்டு, உலகின் மொத்த மனித இனத்துக்கும் பொதுவான அடையாளமாகவும் உணர்வாகவும் இருப்பவை, அநேகமாகத் தாகமும் பசியும்தான். தண்ணீர், உணவு இரண்டின் இருப்பும் அத்தனை இன்றியமையாதவை.

இப்படிப்பட்ட தண்ணீர் பிரச்சினை , இன்று ஓர் உலகப் பிரச்சினையாகவே மாறிவிட்டது.

தண்ணீர் பஞ்சம் என்றாலே, உடனே நம் நினைவுக்கு வருபவை மத்திய ஆபிரிக்க நாடுகள், தென் கிழக்காசிய நாடுகள் உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகள்தாம்.

ஆனால், இன்றைய நிலை அதைவிட மோசமாகிவிட்டது. தண்ணீர் இல்லாத, ஒரு பேரழிவை நோக்கி புவி விரைந்து கொண்டிருக்கிறது. ஆம், மனித இனம் தனக்கான கடைசி சில ஆண்டுகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இதுவரை நாம் கேள்விப்பட்ட உயிரின அழிப்புகளுக்குக் காரணமான விண்கற்களோ, கடற்கோள்களோ, இயற்கைச் சீற்றங்களோ இந்த இன அழிப்புக்குக் காரணமாக இருக்கப்போவதில்லை. ஆனால், இம்முறை மனிதனின் அழிவுக்குக் காரணமாக மனிதனே இருக்கப்போகிறான்.

மேலும், இந்தச் சிக்கலின் தீவிரம் அறிந்தும், இதுகுறித்த விழிப்புணர்வை ஐக்கிய நாடுகள் மன்றம் வேண்டுமென்றே ஏற்படுத்த மறுக்கிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர்மட்டம் வரலாறு காணாத அளவுக்குக் குறைந்துள்ளதும், புவியின் வெப்பநிலை *3* முதல் *5* பாகை செல்ஷியஸ் வரை உயர்ந்துள்ளதும் இதற்கான முக்கியக் காரணிகளாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக, சூரிய ஒளியைத் தாங்கி மீண்டும் வளி மண்டலத்துக்கே பிரதிபலிக்கும் வடதுருவத்தின் ஆர்ட்டிக் படுக்கையில் அமைந்திருக்கும் பனித்திரைகள், ஏற்கெனவே மிக வேகமாக உருகி, கரைந்துவருகின்றன, எனக் கூறியுள்ள அந்த அறிக்கை, அதனால் கடல்நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகக் கூறியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, புவியின் தட்ப வெப்பநிலை ஒவ்வோர் ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டு தொடாத ஒரு புதிய உச்சத்தைத் தொடும் எனக் கூறுகிறது, அந்த மையம்.

இந்தச் சூழலியல், மாற்றத்தின் முதல் நிலை தாக்கம் மேற்கு ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்மீது வெளிப்படும் என்றும் அங்குள்ள *1,000* கோடி மக்கள், தங்கள் நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளுக்கு நிரந்தரமாகப் புலம்பெயர வேண்டிய சூழல் உருவாகும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த அறிக்கையின் மற்றொரு திடுக்கிடும் அம்சமாகப் பார்க்கப்படுவது, இதனால் அழியப்போகும் நிலங்கள்தாம். வெப்பநிலை உயர்வும் அதனால் நேரும் கடல் நீர்மட்ட உயர்வும், நேரடியாக ஆசியாவின் வங்கதேசத்தையும், அமெரிக்காவின் ஃப்ளோரிடாவையும் தண்ணீருக்குள் மூழ்கடித்துவிடும். அதுமட்டுமல்லாமல், தண்ணீர் பஞ்சத்தினால் ஷாங்காய், மும்பை, லாகோஸ் போன்ற சர்வதேச நகரங்களின் மக்கள் எல்லோரும் 'பருவமாற்ற அகதிகள்' என்ற நிலைக்கு மாறிவிடுவார்கள் என்றும் ஒரு பயமுறுத்தும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இறுதியில், உலகம் முழுவதையும் தொடர்ந்து *20* நாட்களுக்கு வெப்ப அலைகள் சூழ்ந்துகொள்ளும். இந்த அலைகளுக்கு *80* முதல் *90* சதவிகித மக்கள் பலியாவார்கள் என்றும் அந்த அறிக்கை ஒட்டுமொத்த மனித சமூகத்துக்கே அச்சுறுத்தலாக இருக்கும் ஒரு தகவலையும் கூறியுள்ளது. உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ள இந்த சுயாதீன சூழலியல் மையம், இதற்கான தீர்வாக, புவியைக் காக்க மனிதனின் விரைவான எதிர்வினை ஒன்றை மட்டுமே முன்மொழிந்துள்ளது. இது புவி வெப்பமாதல் குறித்து தீவிரமாக ஆலோசிக்கவேண்டிய காலகட்டமாகும்.



**2050ஆம் ஆண்டில் 90 சதவிகித மக்கள்தொகை அழிந்துவிடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காணி வாங்கி கட்டடம் அமைத்து மின்சார குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்ததுடன் ஆரம்பமான இவரது மக்கள் பணியனது வடக்குப் புன்னாலைக் கட்டுவனில் 15 வீடுகளை அமைத்துக் கொடுத்ததுடன் மீண்டும் அடுத்த கட்டமாக 30 வீடுகளை அமைத்துக் கொடுத்து வீடற்ற மக்களை குடியேற்றினார். ஈவினைப்பகுதியில் 54 வீடுகள் அமைப்பதற்குரிய காணியை வாங்கிக் கொடுத்திருக்கிறார். கோண்டாவில் உப தபாற்கந்தோர் அமைத்துக் கொடுத்ததுடன் குட்டிச் சுட்டி முன்பள்ளிக்கு காணி வாங்கி அதன் மேல்மாடியையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

யாழ் பலாலி வீதியில் இலுப்பையடி சந்தியில் இருந்து ஊரேழு வரையான 9 கிலோ மீட்டர் தூரத்துக்கு 300 மரங்களை நட்டு மாதாந்தம் 40 ஆயிரத்துக்கு மேல் செலவழித்து நீரூற்றியும் வருகின்றார்.

இப்படியாகதாயகத்தில்இருந்துகொண்டே சமூகத்துக்கு அள்ளிவழங்கிய வள்ளல் திரு ராசையா குவேந்திரநாதன் அவர்களுக்கு புதிய வெளிச்சம் 2019 க்கான விருதை வழங்குவதில் இகுருவி பெருமையடைகிறது.

11) வன்கூவர் இலிருந்தும், ரொறன்ரோவில் அழைக்கப்படட இகுருவியின் Genocide ஆவணப்படுத்தல் தொடர்பான விருதுக்காக Suren karththikesu மற்றும் சினங்கொள் Ranjith Joseph.

**இகுருவியின் ஆவணப்படுத்தலுக் கான விருது சுரேன் கார்த்திகேசு**

மிகக் கொடிய இரத்த ஆறை உருவாக்கிய கொடிய யுத்தத்தின் சாட்சியங்களாக பல மனிதர்கள் இருந்தாலும் அதன் ஆவணப்படுத்தலுக்கு ஊடகப்போராளிகளின் பங்கு மிக முக்கியமாக இருந்தது.

இன்று எம் அரங்கை அலங்கரிக்கும் ஊடகப் போராளியான சுரேன் கார்த்தி கேசு இறுதிப் போரின் குண்டு மழைக்குள் துணிந்து நின்று ஆவணம் சேர்த்த ஒப்பற்ற பணிக்காக எம் முன்னே நிற்கின்றார்.

2002ம் ஆண்டில் இருந்து ஈழநாதத்துடன் ஆரம்பித்த இவரது ஊடகப் பயணமானது ஒரு குறுகிய நிலப்பரப்பின் யுத்த மேகத்தின் கீழே குண்டு மழைக்குள்ளும் 25.4.2019 அன்று காயப்படும் வரை தொடர்ந்தது.

2003இல் இருந்து வெள்ளிநாதத்தின் வடிவமைப்புக்கு பொறுப்பாக இருந்த சுரேன் கார்த்திகேசு அவர்கள் எமக்குள்ளிருக்கும்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















முன்னுதாரணமான ஊடகவியலாளர்களில் ஒருவராவார்.

sunsea கப்பல் மூலம் 2009 க்கு பின்னர் கனடா வான்கூவர் வந்து சேர்ந்தும் தொடர்ந்து, இனப்படுகொலையின் முக்கிய சாட்சியாக தொடர்ந்தும் எழுதி வருகின்றார். குறைந்த நிலப்பரப்பில் இறுதிவரை வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையை நினைவுக்கூர்ந்தும், அந்த மக்கள் பத்திரிகையில் கடமையாற்றும் போது .இறுதி யுத்தத்தில் கொள்ளப்பட்ட சக ஊடகவியாளர்களையும் நினைவு கூர்ந்து இகுருவியின் ஆவணப் படுத்தலுக்கான விருது சுரேன் கார்த்திகேசு அவர்களுக்கு வழங்கப்படுவதில் பெருமையடைகிறது.

**இகுருவியின் ஆவணப்படுத்தலுக் கான விருது சினம்கொள் படத்தயாரிப்பாளர் ரஞ்சித் ஜோசப்**

எம் இனத்தின் அடையாளங்களையும் உரிமையையும் பேச மிகச் சிறந்த ஆயுதங்களில் ஒன்றான திரைப்படத்தை கையில் எடுத்திருக்கும் இயக்குனர்களில் ரஞ்சித் ஜோசப்பும் ஒருவராவார்.

சிறு வயதிலேயே கனடாவிற்கு குடிபெயர்ந்தாலும் சினிமாவின் மேற்கொண்ட காதலால் தனது பொறியியல்துறை கற்கையை கைவிட்டு சினிமாக் கற்கையை பூர்த்தி செய்து தென்னிந்தியத் திரைப்படங்களில் பணியாற்றியிருக்கின்றார்.


சினம் கொள் என்ற திரைப்படத்தின் மூலம் எம் இனத்துக்கு ஏற்பட்ட அவலங்களையும் எம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சனைகளையும் வெளி உலகுக்கு திரைப்படமாகக் காட்டியிருக்கின்றார்.

கமரா என்ற மிகப்பெரும் ஆயுதத்தால் வரலாறு எழுதும் இவரைக் கௌரவப்படுத்தி இகுருவியின் ஆவணப்படுத்தலுக்கான விருதினை வழங்குவதில் இகுருவி பெருமையடைகிறது.

ஏப்ரல் மாத இகுருவி பத்திரிகையில் முன் அட்டையில் சிறப்பு பதிவாக இத்திரைப்படம் பற்றி நிறையவே எழுதியிருந்தோம். தமிழ் மக்கள் அனைவரும் பார்க்கவேண்டிய படம் "சினம்கொள் ". உலக தேசிய விருதுகளுக்கு முன்னர் இகுருவி எம் தேசம் சார்ந்து இப் படைப்பை ஆக்கிய ரஞ்சித் சோசப் அவர்களுக்கு விருதினை வழங்குவதில் பெருமையடைகிறது.

**12] "வல்வை படுகொலை" நூல் பற்றிய ஆவணப்படம்**

1989 ஆண்டு நடைபெற்ற "வல்வை படுகொலை" நூல் - 30 வருட நினைவாக மீள் பதிப்பித்தலும், அதன் ஆவணப்படம் வெளியிடலும். தாயகத்திலிருந்து அழைக்கப்பட வல்வை ந.அனந்தராஜ் அவர்கள் பங்கேற்பு.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













30 ஆண்டுகளுக்கு முன்னர் வல்வெட்டித்துறை கிராமத்தில் இந்திய ராணுவத்தினால் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் ஓகஸ்ட் 1,2,3 ஆம் திகதிகளில் நடைபெற்ற படுகொலை நிகழ்வும் மற்றும் அப்படுகொலையை பாதிக்கப்பட்டவராக பதிவு செய்த வல்வை ந.அனந்தராஜ் அவர்களுடனான ஆவணப்படமாக்களும் வெளியிடப் பட்டது.

1989 ஆம் ஆண்டு பாடசாலை அதிபராக கடமையாற்றிய,பிரஜைகள் குழுசெயலாளராக இருந்த வல்வை ந. அனந்தராஜ் அவர்கள் முற்றாக பாதிக்கப்பட்டவராக, குற்றுயிராக தப்பி மீண்டுவந்து, பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களை ஆவணப்படுத்தி, படகு மூலம் இந்தியா சென்று பகிரங்கப்படுத்தி நீதிகேட்டு சத்திய கடதாசிகள் அடங்கிய "வல்வை படுகொலை" எனும் வரலாற்று நூலின் 30 ஆண்டுகள் பயணம். தனிமனிதனாக படுகொலைக்கான நியாயம் கேட்டு அவர் பயணித்த பயணம் ஆவணப்படமாக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 1989 ஆண்டு சுமார் 60,000 பிரதிகள் வெளிவந்த "வல்வை படுகொலை" நூல், மீண்டும் 2005 ஆண்டு லண்டனில் இரண்டாம்பதிவாகவெளியிடப்பட்ட இந்நூல், ekuruvi light 2019 லும் மூன்றாம் பதிவாக தமிழ், ஆங்கில ஆகிய இரு மொழிகளிலும் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது.

### 13) A Note from the No Fire Zone ஆவணப்படம்

அமெரிக்காவிலிருந்து மருத்துவர் வரதராஜா அவர்கள் பங்கேற்பும், A Note from the No Fire Zone ஆவணப்படம் trailer காட்சிப்படுத்தலும்.



"தமிழர்களின் கனவுகள் சிதைக்கப் பட்டு, உறவுகள் குதறப்பட்டு எமக்காக நாமே அன்றி வேறொருவருமில்லை என்று உணர வைத்த முள்ளிவாய்க்கால் அனர்த்தங்கள் நிகழ்ந்து பத்து ஆண்டுகள் ஓடிச் சென்று விட்டன. முள்ளிவாய்க்கால் அனர்தங்களின் போது ஆயிரமாயிரம் துயர் கதைகள் எம்மவர்களுக்கு நிகழ்ந்தன. அவற்றினை உலக அரங்கினில் வெளிக்கொணர வேண்டிய பாரிய பொறுப்பு தமிழர்களுக்கு உண்டு. இந்த வகையில் ஊடகங்களுக்கும் கலை இலக்கியம் சார்ந்து செயல்படுகின்ற படைப்பாளிகளுக்கும் பொறுப்பும் கடமையும் நிறையவே உண்டு. இரண்டாம் உலகப் போரின் போது, யூதர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் அறுபது ஆண்டுகள் கழிந்தும் இன்னமும் உலகசினிமாவில்சொல்லப்பட்டுக்கொண்டே இருக்கிறது.



இந்த அறுபது ஆண்டுகளிலும் சொல்லித் தீராத கதை அவர்களது. அந்தக்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கொடுமைகளைப் போலவே, ஈழ தமிழர் மண்ணில் நிகழ்ந்த சோகங்களும் சொல்லப்பட வேண்டியவை. Channel 4 Callum Macrae இன் No Fire Zone போன்ற ஆவணப்படங்கள் ஐ.நாவிற்கு கொடுத்த அழுத்தங்களை தமிழர்கள் நன்கு அறிவர்.

இதன் மற்றுமொரு பரிணாமமாக, மருத்துவர் வரதராஜாவின் A Note from the No Fire Zone எனும் ஆங்கில நாவல் வெளிநிகழ்வும் பொய்யா விளக்கு அறிமுக நிகழ்வும் அமைந்திருந்தது.

### *14)* இகுருவி பத்திரிக்கைக்கு உண்டியல் பணம் $1975.70



கடந்த வருடம் இகுருவி பத்திரிகை $1 பத்திரிகையாக அறிமுகம் செய்திருந்தது. பத்திரிகையின் பெறுமதி $1 தான். நீங்கள் தானமாக ஒரு டொலர் கொடுக்க வேண்டாம். அதன் பெறுமதியை மட்டும் தாருங்கள். நாங்கள் அந்த பத்திரிகையின் பணத்தை தாயக மனிதாபிமான பணிகளுக்கு செலவு செய்கின்றோம் என்று கடந்த இகுருவி நிகழ்வில் நவஜீவன் அனந்தராஜ் அவர்கள் அறிவித்திருந்தார். பத்திரிகைக்கான பெறுமதி ஒன்று இருக்கும் போது அதன் வாசிப்பாளர்களுக்கும், தேவையானவர்களுக்கும் சென்றடைய வாய்ப்பு அதிகம். அதே நேரம் $1 உண்டியலில் இடும் போதும் தாயக வாழ்வாதார தேவையை நினைவுகூருவதற்கும் சந்தர்ப்பம் அதிகம் அன்று இத்திட்டத்தை கொண்டுவந்தோம்.

அதனை தொடர்ந்து சிவத்த உண்டியல் அறிமுகப்படுத்தப்பட்டது .

கடந்த ஒரு வருடமாக இகுருவி பத்திரிக்கைக்கு உண்டியல் மூலம் பணம் கொடுத்து வாங்கியவர்கள் மூலம் பெற்றுக்கொண்ட $1375.70 பணம், டாக்டர். ஆறுதிருமுருகன் அவர்களது தொடரும் மனிதாபிமான பணிகளுக்கு வழங்கப்பட்டது.

இது வெறுமனே, கடந்த ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட, சிவத்த உண்டியல் திட்டம். மாதம் ஒன்றுக்கு *10,000* பிரதிகள் படி கடந்த *10* மாதங்களிலும் சுமார் சுமார் *100,000* பிரதிகள் மூலம் $100,000 டொலர்கள் மக்களிடமிருந்துவந்திருக்கவேண்டும். ஆனால் 1375 டொலர்கள் மட்டுமே உங்களிடமிருந்து வந்துள்ளன. அத்தொகை அன்பளிப்பாக கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களின் சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

ekuruvi light 2019 தொடர்ச்சியான நிகழ்வுகள் மூலம் 15,000 கனேடிய டொலர்களும், தனிப்பட்டவர்கள் மூலம் சுமார் 5000 கனேடிய டொலர்களும் மொத்தமாக $ 20,000 தாயக சமூக மனிதாபிமான பணிகளுக்கு வழங்கப்பட்டது .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Are you HARD TO INSURE?

**உங்களுக்கான காப்பீட்டைப் பெற்றுக் கொள்ள கடினமாக உள்ளதா?**

*Have you ever been REFUSED LIFE INSURANCE in the past?*

# NO MEDICAL

## for up to $500,000 in coverage

**தற்போது $500,000 வரையான காப்புறுதியை மருத்துவப் பரிசோதனைகள் எதுவும் இன்றி இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.**

## Payments start in the 2ND MONTH*

*Applicable on monthly payment plans only.

**Call us today**

Bamathi Ramthas, CLU, CHS
905-999-8023

Karthiga Gnanachandran, CLU, CHS
416-909-7805

iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களது சமூக பணிக்கு வலுச்சேர்க்கும் முகமாக நடைபெற்ற தனிப்பட்ட நிதிசேர் நிகழ்வில் (22, «ñ 2019) அன்று Scarborough Convention Centre இல் நடைபெற்ற நிகழ்வில் ஜெகன் மயில்வாகனம் (Owner Scarborough Convention Centre) , சந்திரன் ராசலிங்கம் ( Owner Invorce Life) , தயாளன் ராசையா (Thermocare Heating and Cooling Inc) ,சங்கர் நல்லதம்பி (Director at Vibrant Hospitality Group) சாந்த பஞ் சலிங்கம் ( Owner Canadian Tamil's Chamber Of Commerce's President) , Pat Kandiah, தீபன் ராஜ் , லலிதா பாலா ஆகியவர்கள் கலந்து கொண்டு தமது நிதி பங்களிப்பை வழங்கியிருந்தார்கள்.

15) அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் வருகை, அவரது சந்திப்புகள் (மே 14, அவரது தாயார் இறந்த செய்தி கேட்டு அவர் உடனடியாக தாயகம் சென்றதால், அதன் பின்னர் பல நிகழ்வுகள் நிறுத்தப்பட்டன)


16) ஒட்டொவாவிலும், ரொறன்ரோவிலும் நடைபெற இருந்த ஓவியர் புகழேந்தியுடனான ஓவியப் பயிற்சி பட்டறைகள், Genocide ஓவிய கண்காட்சி நிகழ்வுகள் - முதல் நாள் அவரது பயணத்தில் தடங்கல் ஏற்பட்டதால் இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டன. பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் நடைபெறும்.

**18) தாயகத்தில் நடைபெற்ற தமிழ் இனப்படுகொலை இகுருவி பத்திரிகையின் வெளியீட்டு விழா**

சேனல் 4 - Callum Macrae அவர்களையும் அழைத்திருந்தோம். இறுதிநேரத்தில் முடியாமல்போனது. ஒருசிறிய ஊடகத்தினால் எம்மால் முடிந்ததை செய்திருக்கிறோம்.

இச்செயற்பாடுகள் சுமார் 10 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டன. விசா ஒழுங்குகளிலிருந்து நூல்கள் வரை திட்டமிடல், செயற்படுத்தல் என நீண்ட மனித உழைப்பு, பண விரயம், மன உளைச்சல், சோர்வு என்பவற்றுக்கு மத்தியில் என்னோடு முதுகெலும்பாக நின்று செயலாற்றிய ரமணன், ஜெயகௌரி, இந்திரன், ரதன், ரஜீவ், மதிசுதா, Pat, இகுருவி ஐயா, தரசிகன், தீபன், ஸ்ரீ போன்றவர்களுக்கும், பெயர் குறிப்பிடாமல் விட்ட பலரது உழைப்புக்கும், ஒத்துழைப்புக்கும் ஏற்பட்ட பணவிரயத்துக்கும் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த வருடம் புதிய வெளிச்ச ஆசிரிய விருதை ஆரம்பித்து வைத்த ஞா.ராகினி இம்முறை முள்ளிவாய்க்கால் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார் என்ற செய்தி, புலம்பெயர் ஊடகமாக நாங்கள் மக்களோடு நிக்கின்றோம் என்ற ஒரு சிறு மன ஆறுதலைத் தந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கீதா மூர்த்தி ..

அழகிய சிறிய இலங்கைத் தீவில், கண்டி மாநகரில், ஐந்து வயதில் ஆரம்பமாகிய எனது கலைப்பயணம் அரை நூற்றாண்டிற்குப் பின்பு கடல் கடந்து கனடா நாட்டில் வேறு ஒரு பரிமாணத்தை அடையுமென்று நானோ, எனது குடும்பத்தினரோ கனவிலும் நினைத்திருக்கவில்லை.

யாழ் மாவட்டத்தில் பச்சைப் பசேலென்று வயல்கள் சூழ்ந்த அழகிய கிராமத்தில் எனது வாழ்க்கைப் பயணம் ஆரம்பமாகியது. எனது இரண்டாவது வயதில், தந்தையின் வேலை காரணமாக எனது குடும்பம் கண்டி மாநகருக்கு குடிப்பெயர்ந்தது. வளைந்து, நெளிந்து செல்கின்ற அழகிய சாலைகளும் பச்சைப் பசேலென்ற தேயிலைக் கொழுந்துச் செடிகளும், காலைக் கவ்விப் பிடிக்கின்ற அட்டைகளும் மனதை விட்டு விலகா பிம்பங்களாக எனது மனத்திரையிலே விரிகின்றது.

எனது ஐந்தாவது வயதில் பெற்றோரின் விருப்பப்படி பராம்பரிய இந்திய நடனக் கலைகளில் ஒன்றான பரத நாட்டியத்தை கற்க ஆரம்பித்தேன். பாடசாலை முடிந்ததும் பிசுபிசுவெறு ஒட்டுகின்ற வியர்வையுடன் பேருந்தில் நடன வகுப்புக்களுக்குச் சென்று வரும் பொழுதுகள் ஒரு சுமையாகவும், கசப்பூட்டுவனவாகவுமே இருந்தன.

இசை, தாளக்கட்டு, அசைவுகள் முக பாவங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்த அந்த அழகுக் கலையைத் தொடர்ந்து பயின்ற பொழுது ஒரு புதிய உலகம் என் முன்னே பரந்து விரிந்தது. ஒரு சாதாரண சிறுமியாக இருந்த நான் கடவுளாக, நாயகனாக, நாயகியாக, வல்லவனாக, நல்லவனாக, குழந்தையாக, குமரியாகப் பாத்திரமேற்று பலவிதமான நல்ல கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் செல்லக்கூடியதாக இருந்தது. இது எனது வாழ்வில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது.

பரதக் கலையில் ஏற்பட்ட பேரார்வம் எனது வாழ்வினை ஒரு புதிய பாதையில் மெல்ல, மெல்ல நகர்த்திச் சென்றது. இந்தக் கலையார்வமே எனது ஆயுள்காலப் பயணத்தைத் தொடரும் என்று எனது மனம் பேரானந்தம் அடைந்தது. 1972இல் எனது பரதநாட்டிய குரு திருமதி. செல்வலக்ஷிமி இராமகிருஷ்ணன் தலைமையில் எனது பரதநாட்டிய அரங்கேற்றம் இனிதே நடந்தேறியது.

எனது கல்வியைத் தொடர் வதற்காக எனது குடும்பத்தவருடன் 1974 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரத்திற்கு குடிப்பெயர்ந்தோம். அங்கே எனது உயர்கல்வியில் சித்தியடைந்தேன். அந்தக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த தராதரப்படுத்துதல் காரணமாக ஒரு மருத்துவராக வர வேண்டுமென்கின்ற எனது இலட்சியம் தவிடு பொடியானது. பல இளைஞர்கள், யுவதிகளின் கனவுகள், எண்ணங்கள் பலிக்காமல் விரக்தி நிலையை அடைந்து போராட்டங்களில் குதித்தனர்.

நடனக்கலையில் எனக்கிருந்த தேர்ச்சி, ஆர்வம் எனது பாதையை வேறு வழியில் கொண்டு சென்றது. இருபத்தியொராவது வயதில் குச்சுப்பிடி என்கின்ற மற்றுமொரு நடனக்கலையை வல்வை மண்ணின் மங்கையான நடனக் கலைஞர், குரு ரங்கா விவேகானந்தன் அவர்களிடம் கற்றுத் தேர்ந்தேன். இவர் பரதம், குச்சுப்பிடி, கதகளி, மோகினியாட்டம் என்ற நான்கு ஆடல்வகைகளையும் இந்தியாவின் சிறந்த குருக்களிடம் கற்றுத் தேர்ந்து இலங்கை திரும்பி பல நிகழ்ச்சிகளை நாடு முழுவதும் நடத்தியதோடு பல சிறந்த கலைஞர்களையும் உருவாக்கினார். இவர் தனது சிறப்புக் கலையான குச்சுப்பிடி நடனத்தை, குச்சுப்பிடி கலைக்கழக நிறுவனரான உலகப் பிரசித்திப் பெற்ற குரு வேம்பட்டி சின்ன சத்தியம் அவர்களிடம் உயர்நிலை மாணவியாக கற்றுத் தேர்ந்து "நாட்டிய விசாரத்" என்ற பட்டத்தையும் பெற்றிருந்தார். எனது குரு ரங்கா விவேகானந்தன், அவரது குரு வேம்பட்டி சின்ன சத்தியம் அவர்களுடன் இணைந்து இந்தியா முழுவதும் நிகழ்ச்சிகளை நடத்தி ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்று, தொடர்ந்து உலகெங்கும் பல நாடுகளில் தனது நிகழ்ச்சிகளை வழங்கியிருக்கின்றார்.

நான் கற்றுக் கொண்ட இரு வகையான நடனக்கலைகள் எனக்குப் புத்துணர்வையும், தன்னம்பிக்கையையும் ஊட்டின. எனது குரு ரங்கா அவர்களின் வழிகாட்டலில் நானும் இலங்கை முழுவதும் பல நடன நிகழ்ச்சிகளை வழங்கி பலரது பாராட்டுகளையும் பெற்றேன். இதன்மூலம், எனக்குள்ளே தன்னம்பிக்கையும், உற்சாகமும், எதையும் சாதிக்க முடியுமென்கின்ற தைரியமும் உருவாகியது.

மனம் சோர்ந்து விடும் போதெல்லம் கை தூக்கி விட எப்பொழுதும் நடனம் உறு துணையாகவும் இருக்கின்றது. எந்த துறையிலும் முன்னேறிச் செல்வதற்கும், மனதை ஒருமுகுப் படுத்தி நினைப்பதைச் சாதிக்கவும் நடனம் மிகப்பெரிய கருவியாகவும் இருந்திருக்கின்றது. இவை மட்டுமல்லாமல் உங்களைச் சுற்றியுள்ளவர்கள், பார்வையாளர்கள் அனைவரையும் உங்களுடன் பயணிக்க வைக்கின்றது.

நடனக்கலை எனது வாழ்வோடு ஒன்றித்துப்போக மருத்துவராக வேண்டுமென்ற எனது இலட்சியத்தை ஓரந்தள்ளிவிட்டு கணக்காளராக முடிவெடுத்தபோது எனது குடும்பத்தவருடன் நடனமும் எனக்கு உறுதுணை புரிந்தது. வெகுவிரைவில் நான் ஒரு கணக்காளரானேன்.

அமைதியாகப் பயணித்துக் கொண்டிருந்த எனது வாழ்வில் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆடிக்கலவரம் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. மனதை உறைய வைக்கும் அந்த நினைவுகள்....



### S.A.A.A.C ஆட்டிசிம் நிறுவனம்

அண்மைக்காலங்களில் ஆட்டிசத்தைப் பற்றி பல்வேறு ஊடகங்களிலும் அடிக்கடி பேசப்பட்டாலும் பெரும்பாலானவர்களுக்கு இது ஒரு புரியாத புதிராகவே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களின் வெளித் தோற்றத்தைப் பார்த்து அடையாளப்படுத்திவிட முடியாதென்பதாகும்.

ஒருவரின் மூளை வளர்ச்சியை, அபிவிருத்தியைப் பாதிப்பதால் ஆட்டிசம் நரம்பியல் வளர்ச்சி சம்பந்தமான ஒரு குறைபாடாகவே கருதப்படுகின்றது. ஆட்டிசத்தால் பாதிப்பிற்குள்ளாகி வாழ்பவர்கள் சமூகத்தில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மொழியைக் கற்றுக் கொள்ளுதல், அதனைப் பொருத்தமான இடத்தில், பொருத்தமான முறையில் உபயோகித்தல், சமூகத் தொடர்பாடலில் குறைபாடு என்பன அவற்றுள் பிரதானமானவை. இவற்றுடன் வரையறுக்கப்பட்ட ஒன்றையே திரும்பத் திரும்ப செய்யும் விருப்புக்கள் அல்லது நடவடிக்கைகளை கொண்டவர்களாகவும் அவர்கள் இருக்கலாம். ஆட்டிசம் வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு நிலைப்பாடாகும். இதன் தாக்கம் பாதிக்கப்பட்ட தனி நபரை மட்டுமின்றி அவரது குடும்பத்தவரை, பராமரிப்பாளர்களை, சமூகத்தைச் சென்றடைகின்றது.

விரிந்து, பரந்த பல வண்ணங்களைக் கொண்ட ஒரு வானவில்லைப் போன்றது ஆட்டிசம் என்று கருதப்படுகின்றது.

SAAAC
AUTISM
CENTRE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Seed -விதை



### SAAAC ஆட்டிசம் நிறுவனத்தின் மாதாந்தக் கொடுப்பனவு

நீங்கள் ஒவ்வொருவரும் விதைக்கும் சிறிய விதையும் பெரிய விருட்சங்களாகி ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், பராமரிப்பாளர்களுக்கும் பாதுகாப்பு அரணாக விளங்கும் Seed இல் மாதாந்தக் கொடுப்பனவு செய்யும் அங்கத்தவராக இணையும் பொழுது, ஆட்டிசம் சமூகத்திற்கு கற்றுத் தருகின்ற, உறுதுணையாக விளங்குகின்ற, உற்சாகமூட்டுகின்ற, தற்பொழுது நெருக்கடியான நிலையிலுள்ள ஆட்டிசம் சேவைகளை விருத்தியாக்கி தக்கவைக்க உதவி செய்பவர்களாவீர்கள். மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் உங்களைப் போன்ற மற்றைய அங்கத்தவர்களுடன் இணைந்து பலவிதமான திறமைகளையுடைய எம்மவர்களின் வாழ்வு மலர, வளங்கொழிக்க உரமிடுங்கள். உங்கள் நன்கொடை, S.A.A.A.C. ஆட்டிசம் நிறுவனத்தால் வழங்கப்படும் பின்வரும் சேவைகளை வழங்குவதற்கு நேரடியாகச் சென்றடைகின்றது.

**Chance Fund** - தேவையான ஆட்டிசம் சிகிச்சை முறைகளைப் பெற நிதியுதவி தேவைப்படும் 100 குடும்பங்களுக்கு உதவி செய்தல்.

**Arts Program - 110** பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் நடன, சித்திர, சங்கீத வகுப்புகளில் கலந்துக் கொள்ள சந்தர்ப்பம் அளித்தல்.

**Path to Independance** பாடசாலை விட்டு விலகிய 21 வளர்ந்தவர்களுக்கான அன்றாட கடமைகளைச் செய்வதற்கான பயிற்சிகள், தொழிற் பயிற்சிகள் வழங்கும் பகல் நேர வகுப்புகள்.

**Play to Learn - 70** பிள்ளைகள், இளையவர்களுக்கான பங்குனி விடுமுறைப் பாசறை, கோடை விடுமுறைப் பாசறை, உடல் பயிற்சி வகுப்புகள்.

**Care for Caregivers - 70**க்கும் மேற்பட்ட பராமரிப்பாளர்களுக்கு மனநலம், சுயபராமரிப்பு என்பவற்றிற்கான ஆதரவை அதிகரித்தல்.

மிகச் சிறிய கொடுப்பனவான **$10.00** ஐ மாதாந்தம் செலுத்துவதன் மூலம் இன்று நீங்கள் விதைக்கும் விதைகள் நாளை மலர்களாக மலரும்.

**visit : saaac.kindful.com**

மேலதிக தகவல்களுக்கு:

info@saaac.org | 416 289 0100 | saaac.org




ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவருடைய திறன்கள் சவால்களுக்கமைய அந்த வானவில்லில் பொருத்தமான இடத்தில் பொருத்திக் கொள்ளலாம். ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். இவர்களுள் ஒருவரைப்போல்இன்னுமொருவர் இருப்பதில்லை. அன்றாடக் கடமைகளைச் செய்வதில் சிறிய உதவி தேவைப்படுபவர்கள் அல்லது உதவியே தேவைப்படாதவர்களில் இருந்து 24 மணிநேர மிகத் தீவிரமான உதவி தேவைப்படுகின்றவர்கள் வரை ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களிடையே காணப்படுகின்றார்கள்.

அண்மைக்காலங்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து ஆட்டிசத்திற்கான மிகச் சிறந்த சிகிச்சை முறை A.B.A. [Applied BehaviourAnalysis] என்று கண்டறியப்பட்டுள்ளது. ஒரு விடயத்தை பல தடவைகள் சொல்லிக் கொடுத்தல், தகுந்த தூண்டிகளை [reinforces] சரியான தருணங்களில் வழங்குதல் என்பவற்றைக் கடைப்பிடித்து பேச்சுப் பயிற்சி, சமூகத் தொடர்பாடல் முறைகள், அன்றாடக் கடமைகளைச் செய்தல் என்பவற்றை இலகுவாகக் கற்பிக்கலாம். ஒரு செய்கையை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து இலகுவாக்கி சொல்லிக் கொடுத்துப் பின்னர் பிள்ளைகளின் செய்கைகளை அவதானித்து பதிவு செய்து, அந்தப் பெறுபேறுகளைப் பயன்படுத்தி தொடர்ச்சியாகப் பயிற்சி வழங்குவதன் மூலம் பிள்ளைகள் நல்ல நடத்தைகளையும், திறன்களையும் பெற்று வீட்டிலும், பாடசாலையிலும், சமூகத்திலும் நல்ல நிலையில் இயங்க உதவி செய்யலாம்.




சிகிச்சை முறைக்கான செலவே பெரும்பாலான பெற்றோர்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சனையாகும். ஒன்றாரியோவில் மிகத் தீவிரமான A.B.A. சிகிச்சை முறைக்கு [வாரத்திற்கு 40 - 60 மணித்தியாலங்கள்] வருடத்திற்கு $ 80,000 வரை செலவாகின்றது.

வாழ்நாள் முழுவதும் ஒருவரைப் பராமரிக்க $1.2 மில்லியலிருந்து $ 4.7 மில்லியன் வரை செலவாகலாம்.

S.A.A.A.C ஆட்டிசிம் நிறுவனம் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் தேவையான சேவைகளை வழங்குவதற்காக 2008 ஆம் ஆண்டு திருமதி. கீதா மூர்த்தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு மாணவர்களுடன் அருவடைய வீட்டின் நிலக்கீழ் அறையில் உதயமாகி தற்பொழுது 300க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் 11,000 சதுர அடிப்பரப்பளவில் 11 பிரத்தியேகமான சிகிச்சை முறைகளை வழங்கி வருகின்றது. A.B.A. பயிற்சி, மொழிப் பயிற்சி, பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கான பகல் நேர வகுப்புகள், சங்கீதம், நடனம், சித்திரம், உடற்பயிற்சி என்பன அவற்றுள் சிலவாகும்.

S.A.A.A.C பதியப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமாகும். இங்குசேவைகள் இலவசமாகவும், குறைந்த கட்டணத்திற்கும் வழங்கப்படுகின்றன. தேவையான சேவைகளை நீங்கள் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் **416 289 0100**

**visit : saaac.kindful.com**

மேலதிக தகவல்களுக்கு:

**info@saaac.org | 416 289 0100 | saaac.org**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தை ஏற்படுத்தும் நூல்கள்

## ரகுநாதன் மகேசு

அண்மையில் வாசித்த இரு நூல்கள் குறிப்பிடத்தக்கவை. முதலாவது "Shut up You're Pretty" என்ற சிறுகதைத் தொகுப்பு. கொங்கோ நாட்டிலிருந்து கனடாவிற்கு புலம் பெயர்ந்த Tea Mutonji ன் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. முதலாவது தலைமுறை கனடியர்களின் பார்வையில் புலம் பெயர்ந்த முதல் சந்ததியினர் சந்திக்கும் பிரச்சினைகளை நகைச்சுவையுடன் ஆசிரியர் சொல்லியுள்ளார். பாலியல் சுரண்டல், சமூக மட்ட நிலை வேறுபாடு, கலாச்சார மாற்றங்கள், ஆணாதிக்கம் போன்ற பல் வேறு பார்வைகளைக் கொண்ட 18 சிறுகதைகளைக் கொண்டது இந் நூல். தன்னுடன் தானே முரண்பட்டுக் கொள்ளும் சமூகத்தின் பன்முகத்தன்மையையும், சமூக நிறுவனத்தின் சிதைவினையும் இக் கதைகள் வெளிப்படுத்தியுள்ளன.


Parchment Paper, Tilapia Fish, Men. Tricks and Money, Women Talking, Theresa is getting marries ஆகிய கதைகள் என்னை அதிகளவு பாதித்தன. இவரது ஒரு சிறுகதை முதலாவது பின்னூட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.











### Voices of Jordan

ஜோர்டான் 90 வீதம் சுனி முஸ்லீம்களையும், மிகுதி சியா முஸ்லீம்களையும், கிறிஸ்தவர்களையும் கொண்டுள்ள நாடு. மத்திய கிழக்கில் உள்ள ஒரு சிறு நாடு. இன்னமும் அரசன் தான் ஆட்சியாளர். Voices of Jordan அந்நாட்டின் சாதாரண மக்களின் குரல்களை பதிவு செய்துள்ளது. கார்ட்டுன் கலைஞர், சிரிய அகதி, பெண் பாராளுமன்ற உறுப்பினர், ஜிகாட் ஆதரவாளர், இராணுவ வீரர், பாலஸ்தீனத்திலிருந்து புலம் பெயர்ந்த குடும்பஸ்தர் என பத்து பேரை பல தடவைகள் சந்தித்து, அவர்களினூடான ஜோர்டானின் முகங்களை பதிவு செய்துள்ளார் Rana F. Sweis. இவர் நியுயோர்க் ரைம்ஸ் போன்ற ஊடகங்களில் ஊடகவியலாளராக பணியாற்றியுள்ளார்.

நிச்சயமற்ற வாழ்வியலை பதிவு செய்துள்ள இந் நூல், ஜோர்டான் மக்களின் இருண்ட பகுதிகளையும், மத்திய கிழக்கின் அரசுகளுடன் மக்கள் முரண்பட்டு நிற்பதை இந்நூலினூடாக காணலாம். உருவாக்கப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்பில் தங்களை நிலைநிறுத்த இவர்கள் திண்டாடும் நிலை நூலினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழில் இவ்வாறான ஒரு முயற்சி நடைபெறாதா? ஏன்ற ஏக்கத்தை Voices of Jordan ஏற்படுத்தியுள்ளது.

### விபவி

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒருசிற்றிதழ்விபவி.இதன் ஆசிரியர்கள் நீர்வைபொன்னையன்,சிவகுருநாதன், சசி கிருஸ்ணமூர்த்தி, தெ.மதுசூதனன். பல காலமாக வெளிவந்த சஞ்சிகை இது. இப்பொழுதும் தொடருகின்றதா? தெரியவில்லை. மாசி 1998 இதழில் மறைந்த சிங்கள இயக்குனர் லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் ன் 'நல்ல திரைப்பட நெறியாளருக்குரிய அம்சங்கள்' என்ற சிறிய கட்டுரை, சசியின் மொழிபெயர்ப்பில் வெளியாகியிருந்தது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மூலோபாய கற்கை நிலையம் கனடிய தமிழ் புலம்பெயர் சமூகத்தினால் கைகொடுக்க முடியாதா?

**பிரபாநேசன்**



கடந்த வருடம் ஏப்பிரல் மாதம் மூலோபாய கற்கை நிலையம் திருகோணமலை (Centre for Strategic Studies – Trincomalee) என்னும் பெயரில் இந்தச் சிந்தனைக் கூடம் உருவாக்கப்பட்டது. இதனை அரசியல் ஆய்வாளர் யதீந்திராவும் யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கணேசலிங்கவும் வழிநடத்திச் செல்கின்றனர். இதன் அங்குராப்பன நிகழ்வில் அப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த நீதியரசர் விக்கினேஸ்வரனும் பங்குகொண்டிருந்தார். அதே போன்று கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முக்கியஸ்தர்களும் பங்குகொண்டிருந்தனர். இது தொடர்பில் அப்பிராயம் தெரிவித்திருந்த மூத்த அரசறிவியல் சிந்தனையாளர் மு.திருநாவுக்கரசு அவர்கள் பின்வருமாறு தெரிவித்திருந்தார். தமிழ் மண்ணில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. நூற்றாண்டுக்கணக்கில் தமிழ் அரசியல் தலைவர்கள் இது பற்றி சிந்தித்ததே கிடையாது என்னும் வகையில் இதற்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டு.

இவ்வாறு புகழப்பட்டாலும் கூட, இவ்வாறான சிந்தனைக் கூடங்களை நடத்திச் செல்வது என்பது எளிதான விடயமல்ல. தமிழ்ச் சூழலை பொறுத்தவரையில் நமது மனதின் மேற்பரப்பை தொடக் கூடிய விடயங்களிலேயே நாம் அதிக அக்கறை காண்பிப்பதுண்டு. உதாரணமாக முன்னாள் போராளிகளின் மறுவாழ்வு, விதவைகளின் பிரச்சினை.இப்படியான விடயங்களுக்கு கட்டாயமாக உதவத்தான் வேண்டும். அதில் மாறுபடி ஏதுமில்லை. ஆனால் ஒரு சமூகத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் அறிவுபூர்வமான விடயங்களுக்கு உதவுதிலும் புலம்பெயர் சமூகம் பின்நிற்கக் கூடாது. ஆனால் அவ்வாறான முயற்சிகளுக்கு போதிய ஆதரவு நம்மத்தியில் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவும் எவரும் துனிவதில்லை. ஆனாலும் சிலரது அர்ப்பணிப்பிலும் துனிவிலும் இவ்வாறானதொரு அமைப்பு திருகோணமலையில் உருவாக்கப்பட்டிருப்பதானது, திருநாவுக்கரசு அவர்கள் கூறுவது போன்று உண்மையிலேயே ஒரு அதிசயம்தான். இவ்வாறானதொரு முயற்சிக்கு நாம் உதவி செய்யாமல் விடலாமா? இவ்வாறான முயற்சிக்கு புலம்பெயர் சமூகம் கைகொடுக்காது விட்டால் நிச்சயம் இந்த முயற்சி ஒரு சில வருடங்களில் தோல்வியை தழுவும். ஏனெனில் இவ்வாறான முயற்சிக்கு தொடர்ச்சியான பொருளாதார பலம் தேவை. அதனை புலம்பெயர் சமூகத்தை தவிர வேறு எவரால் செய்ய முடியாது.

இன்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் உண்டு. தமிழ் சமூகம் இவ்வாறான அறிவுபூர்வமான முயற்சிகளுக்கு உதவி செய்யாது. அது உண்மைதானா? மாமனிதர் சிவராம் தனது கட்டுரை ஒன்றில் எழுதியிருந்தார். பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் கேளிக்கை நிகழ்வுகளுக்கும் வாரி வழங்கும் தமிழ் சமூகம் ஆய்வு முயற்சிகளுக்கும் சிறந்த நூல்களை ஆக்குவதற்கும் செலவு செய்ய மறுக்கிறது. இது முற்றிலும் உண்மையான கூற்று. ஆனால் சிங்கள தேசத்தை எடுத்து நோக்கினால், அவர்களோ அறிவூர்வமான விடயங்களின் ஊடாக தங்களை சதா பலப்படுத்திக் கொள்கிறனர். தங்களை புடம்போட்டுக் கொள்கின்றனர். இதன் காரணமாகவே ஒரு செழிப்பான ராஜதந்திர பாரம்பரியத்தை அவர்களால் பேணிப்பாதுகாக்க முடிகின்றது. எனவே நமக்கென்று ஒரு ராஜதந்திர பாரம்பரியத்தை ஏற்படுத்த




**சிந்தனைக் கூடங்களுக்கான முதலீடு என்பது ஒரு சேதத்திற்கான முதலீடு. பத்து லடச்சத்திற்கு மேலான புலம்பெயர் தமிழ் மக்கள் இருந்தும் திருகோணமலையில் நிறுவப்பட்ட, ஒரு சிந்தனைக் கூடத்தை நடத்த முடியாமல் இருக்கின்றனர் என்றால்!**

வேண்டுமாயின், நாம் முதலில் நம்மத்தியில் சிந்தனைக் கூடங்களை உருவாக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு கைகொடுக்க வேண்டும். அவர்களை கைவிட்டுவிடக் கூடாது.

இன்று சிங்கள தேசம் தனக்கான சிந்தனைக் கூடங்களையும் அராய்ச்சி மையங்களையும் போதியளவு கொண்டிருக்கிறது. இதன் ஊடாக உலகை உற்றுநோக்கி தன்னை புடம்போட்டுக் கொள்கின்றது. உலகெங்கும் இருக்கும் சிங்கள புலமையளர்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றனர். ஆனால் ஒரு தனிநாட்டுக்காக போராடிய தேசத்தால் தனக்கான சிந்தனைக் கூடங்களை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. இன்று கனடாவில் நான்கு லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இதில் ஆயிரக்கணக்கான வர்த்தகர்களும் பணபலத்துடன் இருக்கின்ற தனிநபர்களும் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் அனைவரும் நினைத்தால் இவ்வாறான சிந்தனைக் கூடங்களை சில வருடங்களிலேயே பலம்மிக்க ஆராய்ச்சி நிலையங்களாக மாற்ற முடியும்.இந்த சிந்தனைக் கூடத்தை வழிநடத்துவோரிடம், பேசுகின்ற போது, அவர்கள் ஒரு யோசனையை வெளிப்படுத்தினர். அது ஒரு நல்ல ஆலோசனையாகவே தெரிந்தது.

கனடாவில் நாலுலட்சத்திற்கும் மேற்பட்ட நமது உறவுகள் இருக்கின்றனர். அவர்களில் நூறு பேர் வருடம் ஒன்றுக்கு 200 டொலர்கள் அல்லது இருநூறு பேர் வருடமொன்றுக்கு 100 டொலர்கள் என்றவாறு இந்த அமைப்பிற்கு வழங்கினால் இதனை நடத்திச் செல்வதில் ஒரு தடங்கலும் இருக்காது. மிகவும் திறம்பட இதனை நாம் முன்கொண்டு செல்ல முடியும். ஒரு மாத்திற்கு 16 டொலர்கள் மட்டுமே அவர்கள் தர வேண்டிவரும். இது ஒரு அணுகுமுறை மட்டுமே. நம்மில் பணபலமுள்ளவர்கள் தங்களால் முடிந்ததை செய்யலாம். பணபலமுள்ள பத்து பேரே ஒரு வருடத்திற்கான செலவுகளை பொறுப்பெடுக்க முடியும். அவ்வாறு செய்கின்ற போது, தமிழ்ச் சூழலில், தாயகத்தில் ஆய்வுத் துறைகளில் ஈடுபட எண்ணுபவர்கள் உற்சாகமடைவர். தமிழர் தேசத்திற்கான அறிவூர்வமான ஆய்வுப்பரப்பு விரிவடையும். அரசியலில் இளம் அறிஞர்கள் உருவாகுவர். இன்று அரசியலில் இருப்பவர்களின் தகுதிநிலையைக் கொண்டே, தமிழர் தேசயம் எத்தகைய நிலையில் இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

புலம்பெயர் சமூகமாகிய நாம், எந்தளவிற்கு இதற்கான நிதிபலத்தை வழங்குகின்றோமோ, அந்தளவிற்கு தாயகத்திலுள்ளவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவர். இவ்வாறான சிந்தனைக் கூடங்களுக் கான முதலீடு என்பது ஒரு சேதத்திற்கான முதலீடு. பத்து லடச்சத்திற்கு மேலான புலம்பெயர் தமிழ் மக்கள் இருந்தும் திருகோணமலையில் நிறுவப்பட்ட, ஒரு சிந்தனைக் கூடத்தை நடத்த முடியாமல் இருக்கின்றனர் என்றால், அது நமக்குத்தான் அவமானம். எனவே இவ்வாறான முயற்சிக்கு கைகொடுக்க வேண்டியது நம் அனைவரதும் கடமையாகும். நாம் நமது கடமையை செய்வோம். முடிந்தளவு உதவுவோம். நமதுதேசிய உணர்வை காண்பிப்போம். இந்தச் சிந்தனைக் கூடத்தின் நோக்கம் அதன் செயற்பாடுகள் ஆகியவற்றை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணையத் தளத்தின் ஊடாக பார்க்கலாம். இது ஆரம்ப நிலையில் இருக்கின்றது என்பதை கருத்தில் கொள்ளுங்கள். உங்களின் உதவியின் ஊடாகவே அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க எண்ணியுள்ளனர்.

http://www.trincocss.org/

பின்வரும் செயற்பாடுகளை இந்த நிலையம் முன்னெடுக்கவுள்ளது.

- ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள்
- இளம் ஆற்றலாளர்களை உருவாக்கும்நோக்கில் ஊடயவியல் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான ஆரம்பபாடநெறிகள்
- சமூக அரசியல் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பான மகாநாடுகள்
- பொதுமக்களுக்கான அரசியல் அறிவூட்டல் கருத்தரங்குகள்.
- பின்வரும் தளத்தில் இந்த நிலையத்தின் ஆரம்பக்கட்ட விடயங்களை பார்வையிடலாம்.

உதவி செய்ய விரும்புவோர். இந்த வங்கிக்கணக்கின் ஊடாக உங்களின் நிதியுதவியை வழங்குங்கள்.

**Name of the account : Centre for Strategic Studies - Trincomalee (GUARA**
**Name of the Bank : Hatton National Bank PLC**
**Branch : Trincomalee**
**Account Number : 031010021891**
**Bank Swift code : HBLILKLX**
**Bank code : 7083**
**Branch code : 031**

இது தொடர்பில் தங்களின் கருத்துக்களை எழுத அல்லது மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இ.மெயில்கள்; அல்லது கையடக்க இலக்கத்தை தொடர்புகொள்ளுங்கள்.

**director@trincocss.org**
**jjathi@gmail.com**
**Tel : 0094 777 231 387**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் தொடரும் நிழல் யுத்தம்

ஜனகன் முத்துக்குமார்

ஏற்கெனவே முன்னாள் ஜனாதிபதி ஒமர் அல்பஷீரை கவிழ்த்துவிட்ட ஒரு மாத கால மக்கள் கிளர்ச்சியைத் தோற்கடிக்க அல்லது பலவீனப்படுத்துவதற்கான சூடான் இராணுவத்தின் முயற்சிகளுக்கு உதவுவதில் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகத்தின் பங்காளியாக ரஷ்யா உருவெடுத்துள்ளது.

நாடுகடத்தப்பட்ட ரஷ்ய தொழிலதிபர் மிகைல் கோடர் கோவ்ஸ்கி நிதியளித்த விசாரணைக் குழுவான பிரித்தானியத் தலைநகர் இலண்டனைத் தளமாகக் கொண்ட டோசியர் சென்டர், தி கார்டியன், ரஷ்ய மொழி செய்தி வலைத்தளமான எம்.எச்.கே மீடியாவுக்கு கசிந்த ஆவணங்கள், சூடானில் இதுவரை திரைக்குப் பின்னால் உள்ள ரஷ்யாவின் பாத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளன.

ஆபிரிக்க ஆட்சியாளர்களுடன் உறவுகளை உருவாக்குவதன் மூலமும், இராணுவ ஒப்பந்தங்களை நடத்துவதன் மூலமும், புதிய தலைமுறை தலைவர்கள், இரகசிய முகவர்களை பணியில் அமர்த்துவதன் மூலமும் ஆப்பிரிக்கா முழுவதும் ரஷ்யாவின் நிலைப்பாட்டை உயர்த்துவதற்கான திட்டங்களை வகுத்தல், அதன் ஒரு பகுதியாக சூடானில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களை






தோற்கடிப்பதற்காக பிரசாரத்தை மேற்கொள்ளல் என்பன குறித்த ஆவணத்தின் மூலம் கசிந்துள்ள விவரங்களாகும்.

போராட்டக்காரர்களின் பிரசாரத்துக்கு எதிரான திட்டம், ரஷ்ய மற்றும் அதன் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எதிராக எதிர்ப்பை மேற்கொள்ளல் தொடர்பாக ஏற்கெனவே கசிந்திருந்த முன்மொழிவுகளிலிருந்து நகல் எடுக்கப்பட்டு, அதனடிப் படையில் சூடானில் உள்ள போராட்டக் காரர்களின் அணுகு முறையை உடைக்கும் ஒரு செயல்பாடாக ரஷ்யா பார்க்கின்றது.

இஸ்லாமிய எதிர்ப்பு, இஸ்ரேலுக்கு ஆதரவான மற்றும் சமபாலின சார்பான விடையங்களை சித்தரிப்பதற்காக போலிச் செய்தி மற்றும் காணொலிகளைப் பயன்படுத்துவதற்கு சூடானிய இராணுவத்தை ரஷ்யா அறிவுறுத்தியது. மறுபுறம், இறுக்கமான செய்தி தணிப்பை மேற்கொள்ளல், செய்தி நிறுவனங்களை குறுக்குதல் அல்லது அவை தொடர்பான கொள்கைகளை இருக்குதல், அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களை தணிக்கை செய்தல் தொடர்பாகவும் ரஷ்யா அறிவுறுத்தியுள்ளது.

கசிந்த ஆவணங்களின் படி, சென், பீட்டர்ஸ்பர்க்கைச் சேர்ந்த தொழிலதிபரும் ஜனாதிபதி புட்டினின் நெருங்கிய கூட்டாளியுமான யெவ்ஜெனி பிரிகோஜின், முன்னாள் ஜனாதிபதி ஒமர் அல் பஷீருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறித்த ரஷ்யாவின் அறிவுறுத்தல்களை ஜனாதிபதி ஒமர் அல் பஷீர் பின்பற்றவில்லை என்று குற்றம் சாட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறம், குறித்த யெவ்ஜெனி பிரிகோஜின் என்பவரே, ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் *2016*ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்குச் சாதகமான ஒரு விரிவான சமூக ஊடக பிரசாரத்தை ரஷ்யா சார்பாக நடத்தியவர் என்பதற்காக, அமெரிக்க சிறப்பு வழக்குத்தொடுநர் றொபேர்ட் மல்லரால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிலை இவ்வாறிருக்க, சூடான் இராணுவத்தை பொறுத்தவரை அது தொடர்பில் முக்கிய முடிவுகளை எடுத்தலில் தொடர்ச்சியாகவே யெவ்ஜெனி பிரிகோஜின் பங்கு இருக்கின்றது.

இவ்வாரம், இராணுவத்தினரின் அழைப்பின் பேரில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சூடானுக்கு விஜயம் செய்தமை, குறித்த விஜயத்தில் சூடான் இராணுவத்துக்கு எதிரான எதிர்ப்பாளர்களால் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறப்படும் மருத்துவ வசதிகளை அவர்களுக்குக் காண்பிக்கவும், சூடான் இராணுவத்துடன் தொடர்புடையதும், மோசமான துணை ராணுவப் படையினரால் தாக்கப்பட்ட மருத்துவமனைகள் இயல்பு நிலைக்குத் திரும்புகின்றன என்பதை நிரூபிக்கவும், பிரிகோஜினின் அறிவுத்தலுக்கு அமையவே குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் அழைத்தது செல்லப்பட்டனர் என கூறுகின்றது குறித்த ஆவணம்.

வெளிநாட்டு ஊடகவிய லாளர்களை அழைத்தல் “ஒரு நல்ல யோசனையாகத் தோன்றியிருக்க வேண்டும், ஆனால் ஏன் என்று என்னால் கற்பனை செய்ய முடியவில்லை. போராட்டக்காரர்கள் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டார்கள் என்பதை எங்களுக்குக் காண்பிப்பதே திட்டம். சூடான் இராணுவத்துக்கு எதிரான போராட்டக்காரர்கள் உண்மையில் என்னவென்பதை உலகத்தால் காண முடிந்தால், இராணுவத்துக்கு போராளிகளை இராணுவ ரீதியாக சந்தித்தலை தவிர வேறு வழியில்லை என்பதை உலக ஊடகங்கள் புரிந்துகொள்வார்கள் என சூடானிய அரசாங்கம் கருதுகின்றது ”என்று பிரித்தானிய ஒளிபரப்புச் சேவையின் ஆபிரிக்க ஆசிரியர் ஃபேர்கல் கீன் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


ஊடகவியலாளர் கீனுக்கு, ஜெனரல் மொஹமட் ஹம்தான் டகலோ அக்கா ஹெமெடி தலைமையிலான ஆர்.எஸ்.எஃப் துணைப்படைகள் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகக் கொள்கைகளுக்கு சார்பானதுஎனவும் அதன் காரணமாகவே அவ்விரண்டு நாடுகளும் தொடர்ச்சியாக ஆர்.எஸ்.எஃப் க்கு உதவிகள் வழங்குகின்றன என்றும் கூறுகின்றார். அதற்கு காரணம், ஏனெனில் ஜெனரல் மொஹமட் ஹம்தான் டகலோ அக்கா ஹெமெடி தலைமையிலான படைகள் ஏற்கனவே சவூதி அரேபியா சார்பாக யேமனில் போராடி இருந்தமை, மற்றும் அவ்விராணுவ கட்டமைப்பானது ஒரு உள்நாட்டு போராட்ட குழு என்பதையும் தாண்டி ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தைப் போன்று செயல்படுவதே காரணம் எனவும் கீன் குறிப்பிடுகின்றார்.

சர்வதேச விவகாரங்களில் அடிப்படையில் டாபரில் இருந்து ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படை *2019/2020* இல் விலக உள்ளமை தொடர்ச்சியாக நடைபெறும் மோதல்களை இன்னும் உக்கிர நிலைக்கு கொண்டுசெல்லும். மறுபக்கம், குறித்த அமைதி காக்கும் படைகளின் விலகல் சர்வதேச நாடுகளின் பிரசன்னத்தை சூடானில் இருந்து நகர்த்தும் எனவும் அவ்விடைவெளியில் ரஷ்யா ரூ சவூதி அரேபியா ஐக்கிய அரபு அமீரகம் என்பன தமது நலன்களுக்காக நகர்த்தல்களை மேற்கொள்ளும் என்பதையும் அறிந்திருத்தல் அவசியமானது.

இந்நிலைமைகளின் மத்தியிலேயே சூடானுக்கான பிரத்தியேக தூதுவராக டொனால்டு பூத்தை கடந்த வாரம் ஐக்கிய அமெரிக்கா நியமித்துள்ளது. இதன் பிரகாரம் அமெரிக்கா தனது அரசியல் பிரசன்னத்தை சூடானில் அதிகரித்தல் குறித்த உள்நாட்டு மோதலை முடிவுக்கு கொண்டுவருமா அல்லது மேலும் அதிகரிக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'ஹோம்வேர்க்' செய்ய உதவும் ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள்!

சமீபகாலமாகச் சந்தைக்கு வரும் ஸ்மார்ட் கேட்ஜெட்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதற்கேற்றாற்போல் மக்களும் அவற்றை தினசரி வேலைகளில் பயன்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். வீடு, பாடசாலை , மருத்துவமனை, கார் என அன்றாடம் நாம் புழங்கும் எல்லா இடங்களுமே கொஞ்சம் கொஞ்சம் இணையத்தோடு நெருக்கமாகி வருகின்றன. எனவே இங்கெல்லாம் IoT (Internet of Things) கேட்ஜெட்களும் முக்கியப் பங்காற்றுகின்றன. அப்படி அண்மைக்காலமாக அதிகளவில் பயன்படுத்தப்படும் ஒரு கேட்ஜெட், ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள். நம்முடைய கட்டளைகளை நிறைவேற்ற உதவும் வொய்ஸ் அசிஸ்டன்ட்களான இவை, பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் பல்வேறு விதங்களில் பயன்படுகின்றன.

எனவேதான் கூகுள், ஆப்பிள், அமேசான் என முன்னணி டெக் நிறுவனங்கள் அனைத்தும் ஸ்மார்ட் ஸ்பீக்கர்களிலும், வொய்ஸ் அசிஸ்டன்ட்களிலும் அதிக கவனம் செலுத்துகின்றன. ஆரம்பத்தில் வெளிநாடுகளில் மட்டுமே விற்பனை செய்யப்பட்ட ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள்,படிப்படியாக தற்போது ஆசிய நாடுகளுக்கும் வந்துவிட்டன. எதிர்பார்த்ததைவிடவும் இவை மக்களிடம் வரவேற்பையும் பெற்றுவிட்டன. காரணம், இவற்றின் எளிமையான பயன்பாடுதான்.

இதை பயன்படுத்த ஒரேயொரு ஆப் போதும். இதை வைஃபை மூலம் இணைத்துவிட்டால் போதும். நாம் எந்த நேரத்திலும், எந்தவொரு கேள்வியைக் கேட்டாலும் சட்டென நமக்குப் பதில் வந்து விடும். இதற்காக அறையின் எந்த மூலையிலிருந்தும் `அலெக்ஸா' என அழைத்தால் போதும். பதில் சொல்லத் தயாராகிவிடும். இதுநாள் வரை பொம்மைகளையும், விளையாட்டுப் பொருட்களையும் வைத்து விளையாடிய சிறுவர்கள்கூட ஸ்மார்ட் ஸ்பீக்கர்களை தங்களுக்கேற்றவாறு பயன்படுத்துகின்றனர். காரணம் சிறுவர்களின் பல்வேறு விதமான கேள்விகளுக்கும் உடனடியாக பதிலளிக்க ஒருவர் கிடைத்து விட்டாரே? அதுவும் கூகுள் போல டைப் கூட செய்யவேண்டாம்.

இப்படி எதற்காகவெல்லாம் சிறுவர்கள் அதிகம் ஸ்மார்ட்ஸ்பீக்கர்களைப் பயன்படுத்துகிறார்கள் எனப் பார்த்தால், விளையாட மட்டும் பயன்படுத்தாமல், வீட்டுப்பாடங்களுக்கு உதவி செய்யவும், பாடல்கள் கேட்கவும், அலாரம் வைக்கவும் எனப் பல்வேறு தேவைகளுக்கு ஸ்மார்ட் ஸ்பீக்கர்களைப் பயன்படுத்துகிறார்கள். அதிலும் அதிகமாகப் பயன்படுத்துவது பாடல்களைக் கேட்கத்தான். அதாவது சுமார் 55 சதவிகிதம் பாடல்களைக் கேட்க சிறுவர்கள் பயன் படுத்துகின்றனர். அதேபோல் 44 சதவிகிதம் பல்வேறு விதமான கேள்விகளுக்குப் பதில்களைக் கேட்கப் பயன்படுத்துகின்றனர். 40 சதவிகிதம் ஜோக் கேட்கவும், 25 சதவிகிதம் வீட்டுப்பாடங்களுக்கு உதவி செய்யவும்



பயன்படுத்துகின்றனர். பலர் அலாரம் வைப்பதற்கும், விளக்குகள் மற்றும் மின்னணு சாதனப் பொருட்களைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர். தற்போதைய டிஜிட்டல் உலகில், ஒருவரைத் தொடர்பு கொள்ளும் முறையும் டிஜிட்டல் மயமாகவே மாறிவிட்டது. இது சிறுவர்களுக்கும் விதிவிலக்கல்ல எனலாம்.

வீட்டிலிருப்பவர்களை தொடர்பு கொள்ள பத்து சதவிகிதமும், வீட்டிற்கு வெளியே இருப்பவர்களைத் தொடர்பு கொள்ள 9 சதவிகிதமும் ஸ்மார்ட் ஸ்பீக்கர்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். பலர் கதைகளைக் கேட்கவும், இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.


இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து விதமான வொய்ஸ் அசிஸ்டன்ட்களிலும் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும். தற்போது வெளிவரும் ஸ்மார்ட் ஸ்பீக்கர்கள் ஆசியர்களின் ஆங்கில உச்சரிப்பையும் எளிதாகப் புரிந்து கொள்ளும் அளவுக்குத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எனவே வருங்காலத்தில் இவை. இன்னும் இன்னும் ஸ்மார்ட்டாகவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?




Super Visa
100% Refund if
Visa Denied

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில்
நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான
பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா?
இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி
நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| [illegible] | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 21 | 15 | 22 | 15 | 24 | 19 | 18 | 20 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 26 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 263 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 24 | 18 | 25 | 20 | 26 | 26 | 22 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 237 | 309 | 208 | 481 | 326 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 762 |
| 100 000 | [illegible] | 45 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 207 | 154 | 128 | 201 | 268 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | [illegible] | 95 | 83 | 115 | 202 | 142 | 226 | 176 | 249 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 392 | 641 | 542 | 878 | 764 |

Non medical- Term & Permanent Products

| [illegible] | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| [illegible] | [illegible] | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 42 | 64 | 53 | 92 | 72 | 166 | 222 | 292 | 297 | 586 | 869 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 39 | 64 | 51 | 113 | 83 | 197 | 158 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 129 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 204 | 241 | 266 | 398 | 257 | 675 | 642 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 102 | 72 | 165 | 212 | 265 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 92 | 230 | 152 |
| 20 000 | [illegible] | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | [illegible] | 64 | 53 | 71 | 59 | 85 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | [illegible] | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | [illegible] | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | [illegible] | 153 | 126 | 169 | 139 | 214 | 178 | 283 | 232 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | [illegible] | 202 | 166 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |



Call me for your free consultation.

Life100
INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VJP Wedding Service

உங்கள் அனைத்து விதமான
வைபவங்களையும் சிறப்புற நடத்திட
அழையுங்கள்



* Weddings
* Birthday Partes
* Puberty Ceremonies
* Receptions
* Christmax Parties
* Meetings

All Other Occasions.

Serving Areas

- Scarborough
- Mississauga
- Markham
- Etobicoke
- Brampton
- Ajax

Choose from 10 Luxurious banquet Halls, Accommodating 50 to 1000 guests.

**குமார் 416 302 6727**

**அனைத்து விதமான உடல் பிரச்சனைகளுக்கும் பக்க விளைவுகளற்ற முழுமையான தீர்வுக்கும் நமது 5000 வருட பாரம்பரிய மருத்துவ முறையான ஆயுர்வேத மருத்துவமே சிறந்தது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்**



இதற்காக இனி இந்தியா வரை
செல்ல வேண்டிய அவசியம் இல்லை.
ஸ்காபோரோவில் அமைந்துள்ள
வசிஸ்டா ஆயர்வேதிக் சிகிச்சை மையம்



**Treatments Available For**

PSORIASIS, ECZEMA and all types of skin problems, ARTHRITIS, LOW BACK ACHE, SCIATICA, STROKE, GYNAECOLOGIC PROBLEMS, PCOS, MALE AND FEMALE INFERTILITY, KIDNEYSTONE, PILES, ULCER, HEADACHE, DIABETES, HYPERTENSION, OBESITY, HAIR FALL, DANDRUFF, SPECIAL TREATMENT FOR STRESS RELIEF & ALL KINDS OF MALE SEXUAL PROBLEMS.

இவ்விடத்தில் பாரம்பரிய கேரளா முறைப்படி இங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கேற்ப சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது

கேரளா பாரம்பரிய முறை பஞ்சகர்மா சிகிச்சை, உடலில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி புத்துணர்வு அளிக்கும் – ஷிரோதாரா சிகிச்சை, நாட்பட்ட தலைவலி, தலைமுடி உதிரல், போன்றவற்றை நீக்கவல்லது.

மற்றும் ஆயுர்வேத தைலங்களால் அனைத்து வித வாத நோய்களுக்கும் மசாஜ் சிகிச்சையளிக்கப்படும்.



VASISHTA AYURVEDIC

**Vasishta Ayurvedic Wellness Inc**
**2199 Midland Avenue, Unit# 1 Scarborough ON, M1P 3E7**
**For Appointments : (647) 532-1255**
**(416) 291-6730**
**www.vasishta.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




CASH INCENTIVES ON SELECT 2015 MODELS. MAXIMUM CASH INCENTIVE ONLY ON 2015 PILOT MODELS.

HONDA

# Formula Honda

*Where You're Treated like Family.*



**Shan Sarvananthan**
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com







**Rajah Tharmalingam**
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மேடை 1000 கலைஞர்கள்



## Scotiabank Arena விற்கு செல்லும் வழிமுறைகள்

IBC தமிழா Toronto 2019 நிகழ்வில் கலந்து கொள்ள Scotiabank Arena வை வந்தடைய பல வழிமுறைகள் உள்ளன.

1. சொந்த வாகனங்களில் வருபவர்கள் – Scotiabank Arena வைச் சூழ கட்டணம் செலுத்தும் வாகனத் தரிப்பிட வசதி போதுமான அளவு உள்ளது. வாகனத் தரிப்பிடங்களை முன்கூட்டியே www.parking.com தளத்தில் பதிவு செய்ய முடியும்.

**Scotiabank Arena முகவரி: 40 Bay Street, Toronto**

2. TTC SUBWAY – டொரான்டோ சுரங்கப் பாதையைப் பாவித்தால் நீங்கள் இறங்க வேண்டிய இடம் Union Station ஆகும். யூனியன் நிலையத்திலிருந்து சுரங்கப் பாதையூடாக நேரடியாகவே Scotiabank Arena Gate 1 ஐ சில நிமிடங்களில் நடந்து சென்றடைய முடியும். சனிக்கிழமை தொடர்ச்சியான சுரங்கப் பாதை சேவையுள்ளது.

3. GO TRANSIT – பேருந்து மற்றும் புகையிரத நேர அட்டவணையை நீங்கள் www.gotansit.com இணையத் தளத்தில் பார்க்க முடியும். நாள் முழுவதும் GO பேருந்து மற்றும் GO புகையிரத சேவைகள் உள்ளன.

## இலவச போக்குவரத்து சேவை

தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இருந்து இலவச பேருந்துகள் ஒழுங்கு செய்யப்படும். IBC தமிழா Toronto 2019 நுழைவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் இம் மாதம் 26ம் திகதிக்கு முன்னர் 416.477.2550 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உங்கள் இருக்கைகளை உறுதி செய்யலாம்.




## SHUTTLE BUS PICK-UP LOCATIONS

1. **Square One**
Mississauga
2. **New Spiceland Parking Lot**
Markham & Steeles
3. **Aaniin Community Centre**
Markham & 14th (Next to Vanni Street)
4. **Global Kingdom Ministries**
Markham & Progress
5. **Centennial Community Centre**
Markham & Ellesmere
6. **Yorkdale Mall**
North York
7. **Shopper's World Parking Lot**
Brampton
8. **Gore Meadows Community Centre & Library**
Brampton

## TICKET HOTLINE
## 416.477.2550

TEKNO MEDIA PROUDLY PRESENTS

# IBC தமிழா TORONTO 2019

POWERED BY IDEAL.VENTURES

SPONSORED BY TNEXT

CO-SPONSORED BY MELENI DAVID, VIBRANT HOSPITALITY GROUP, weddingman

ஆடல் பாடல் நகைச்சுவை நாடகம்

TICKETS STARTING FROM $25

SATURDAY JUNE 29TH AT 5PM

SCOTIABANK ARENA

BUY YOUR TICKETS NOW
IBCTAMIL.COM/CANADA

PLATINUM

GOLD

SILVER

BRONZE

EVENT PARTNER

IBC தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org